






'புன்னகை' என்ற வண்ண நியான்
எழுத்துக்களோடு பளபளப்புடன்
மின்னிய அந்தக் கட்டிடத்தை
அண்ணாந்து பார்த்து மதுவந்திக்கு
உள்ளூரப் பெருமையாக இருந்தது!
இந்தப் பெரிய, அழகும் புதுமையுமாக
மிளிரும் கட்டிடத்தில் அல்லவா, அவள்
வேலை பார்க்கிறாள்!
அதுவும் சாதாரண வேலையா? நோவு
தீர்க்கும் பணி!
அதுவும், பயங்கரமான வலியைப்
போக்கும் உன்னதப் பணி!
மருத்துவத் தொழிலே உன்னதப்
பணிகளுள் ஒன்றுதான்!
அதிலும், பல் மருத்துவம் மிகச்
சிறந்தது என்பது, இப்போது அவளது
அபிப்பிராயம்!

கம்பத்தில் கட்டி, உயிரோடு எரிப்பதற்குச் சமமானது பல்வலி என்று அவள் பழைய ஆங்கிலக் கதை ஒன்றில் படித்திருக்கிறாள். படித்தது நிஜமே என்று, இன்று இங்கே பார்க்கும் போதெல்லாம் தெரிகிறது!

சரியாகச் சொல்லப் போனால், அவள் இந்தத் துறையை எடுத்துப் படிக்கத் தொடங்கியபோது, அவ்வளவு பெரிதாக இவை நினைத்திருக்கவில்லை என்பதுதான் உண்மை.

மனிதனுக்குப் பால்பற்கள் இருபது.. அப்புறம் நிலையாக நிற் முப்பத்திரண்டு! இந்த ஐம்பத்திரண்டும் ஒன்று மாற்றி ஒன்று ஏதாவது பிரச்சினை எழும்பவே செய்யும். அத்தோடு இப்போது முக சீரமைப்பு, அழகுப்படுத்துதல் என்று அது வேறு நிறைய இருக்கிறது. எனவே பல் மருத்துவத்தில் சம்பாதிக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று, அம்மாவோடு கூட வேலை செய்த ஒருவர் சொல்ல 'ப்ளஸ்டு'வில் மதுவந்தி நல்ல மதிப்பெண்கள் வேறு எடுத்துவிட, பாட்டியும் அம்மாவுமாகத்தான் திட்டமிட்டு, இந்தப் பல் மருத்துவத்தை எடுத்துப் படிக்கச் சொன்னார்கள்.

அவளுக்கும் மறுக்கத் தோன்றவில்லை!

அத்தனை ஆண்டுப் பழக்கத்தில் அம்மாவும் பாட்டியு அவளுடைய நன்மை விரும்பிகள் என்பது தெள்ளத் தெளிவா விஷயம்! அவர்கள் நல்லதுக்குத்தானே சொல்வார்கள்?

அத்தோடு, அவர்கள் சொல்வது போலப் பணம் நிறைய வ கூடிய தொழில், படிப்பு முடிந்து, சம்பாதிக்கத் தொடங்கிவிட்டா இப்போது போலச் சிலபல ஆசைகளை அடக்கி வாழ வேண்டிய இல்லை!

தங்கமும் வைரமும் அவள் தேடவில்லை. ஆனால், பத் கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் அன்பு இல்லத் பிள்ளைகளுக்கு மாதம் ஒருநாள் உணவளிக்கலாமே!

இந்தப் படிப்பில் சேர்ந்தது, இப்படி எண்ணித்தான்!

படிக்கும்போதே, அவள் மனம் பெருமளவு மாறி விட்டிருந்த அதுவும், இங்கே வந்து 'புன்னகை'யில் சேர்ந்து பயிற்சியை தொடங்கிய இந்த சில மாதங்களில்தான். இந்தத் தொழில் பற் எல்லாமே, அவளுக்குச் சரிவர, நூறு சதவிதமாக நன்கு புரிந்தி எனலாம்!

பாவம்! சின்னஞ்சிறு சிறார்களில் இருந்து, தலை நரைத் தள்ளாடும் பெரியவர்கள் வரை, பல்வலி வந்துவிட்டால், எப்ப துடித்துத் தவிக்கிறார்கள் என்று பார்க்கும்போது, இதைச் சீக்கிரமா குணப்படுத்த வேண்டுமே என்று அவளுக்கே தவிப்பாக இருக்கு சின்னதுகள் அழுது அரற்றும், பெரியவர்கள், கன்னத்தைத் தாங் முகம் வாடி உட்கார்ந்திருப்பார்கள்!



நாலு ஆண்டு படிப்பை முடித்து, 'ஹவுஸ் ஸர்ஜன்' ஓர் ஆண்டையும் முடிக்கும்போது, இந்த வலி நீக்கம் தவிர, மற்ற நோக்கங்கள், அவளுக்கு மறந்தே போயிருந்தன.

நல்லவேளையாக, இந்த வேதனையை நீக்குவதற்குரிய படிப்பைப் பெரியவர்கள் அவளைப் படிக்க வைத்திருக்கிறார்கள் என்று தாய்க்கும் அவளைப் பெற்றவளுக்கும் நன்றி சொல்லத் தோன்றியது. கிடைத்த இந்த வாய்ப்பை, நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

கடவுள் புண்ணியத்தில், மதுவந்திக்கு இதுவரை பல்வலியே வந்தது கிடையாது! ஆனால், அதற்கும் அவளுடைய அம்மாவுக்குத் தான் அவள் நன்றி சொல்ல வேண்டும்!

ரொம்பச் சின்ன வயதிலேயே, எதை எப்படிச் சாப்பிட வேண்டும், இனிப்பு, சாக்லேட், உண்டால் உடனே பல்லை எப்படி 'பிரஷ்' பண்ண வேண்டும். உணவுக்குப் பின் பற்களில் உணவுத் துணுக்குகள் தங்கி விடாமல், பற்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்றெல்லாம் கற்றுக் கொடுத்ததோடு, மகளைச் செய்ய வைத்துப் பழக்கியும் இருந்தாள் அன்னை.

அதைக்கூட, இங்கேயுமே பல சிறுவர்களுடைய அன்னையருக்கு, அவள் கற்றுக் கொடுத்திருக்கிறாள் என்று பெருமிதமாய் எண்ணும்போதே, மதுவந்தியின் முகத்தில், லேசாக இருள் படிந்தது!

ஆனால் அவள் கற்றுக் கொடுத்தது 'புன்னகை' மருத்துவமனையுடைய உரிமையாளர் தேவராஜனுக்கு, அவ்வளவாகப் பிடித்த மாதிரித் தெரியவில்லையே!

"மதுவந்தி சொல்வதைக் கேட்டு எல்லாப் பெற்றோரும் நடக்கத் தொடங்கிவிட்டால்; அப்புறம், பல் மருத்துவமனைகளை எல்லாம் இழுத்து மூடி வேண்டியதுதான்! அப்புறம், பல் மருத்துவம் ப ரெல்லாம் மூட்டை தூக்கவும், கூலி வேலை செய் போகலாம்!" என்று போகிற போக்கில்... சும்மா வேடிக்கை சொல்லியிருப்பாரோ?

அப்படித்தான் இருக்க வேண்டும்!

அம்மா இருந்திருந்தால், அப்படித்தான் எ சொல்லியிருப்பார்கள்.!

ஆனால் அவர்கள் இப்போது இல்லையே!

நினைவு தெரியாத வயதிலேயே இல்லாது போன தந்தை பற்றி மதுவந்திக்குப் பெரிதாக ஒன்றும் தோன்றியதில்லை!

ஆனால் படிப்பு முடிந்து வேலைக்குப் போவதைப் பார்ப்பதற்கே காத்திருந்தது போலத் தாயார் லகை விட்டு மறைந்தது. பெருத்த அநியாயமாகவே அவளுக்குப் பட்டது!

அவளுக்கும் அவளுடைய பாட்டிக்கும்!

இந்தப் பயிற்சிப் பணி மட்டும் உடனே தொடங்கியிராவிட்டால் மதுவந்தி என்ன ஆகியிருப்பாளோ?

அதிலும், முடிந்த வரை, அதிகப்படியாக வேலை வாங்கும் பாஸ் கிடைத்ததும், அந்தச் சமயத்தில் அவளுக்கு நல்லதாகவே பட்டது! அம்மாவுக்காக ஏங்குகிற நேரத்தில் பெரும் பகுதி, வேலையில் கழிந்தது! அத்தோடு, வேலை அதிகமாகச் செய்யச் செய்ய, அவளுக்கு அதிகப் பயிற்சிதானே?

இங்கே வந்து, இந்த மூன்று மாதங்களுள் சுமார் அறுபத்தைந்து பற்களைப் பிடுங்கி, அத்தனை பேரின் வேதனையைத் தீர்த்திருக்கிறாள்!

அவளுக்கு, அந்த மாதிரி ஒரு நிம்மதி கிடைத்தது!

ஆனால் பாட்டிதான்... பாவம்! பாட்டியின் துன்பத்துக்கு, இந்த மாதிரி எந்தவிதமான மாற்றும் இல்லையே!

ஒருகால் மாமா வந்தால்....?

மாமா இருக்குமிடம் தெரிந்தால், அங்கே நேரில் போய்க் காலில் விழுந்தேனும், பாட்டியிடம் கூட்டி வந்து சேர்க்கலாம்! ஆனால் அவர் இருக்கும் இடமே தெரியவில்லையே!

நாளுக்கு நாள் பாட்டி ஓய்ந்து கொண்டு போவது நன்றாகவே தெரிந்தது! இன்னும் எவ்வளவு காலம் தாங்குவாளோ?

மகளுக்கு விதியின் அழைப்பு! ஆனால், அந்தத் தாய்க்குப் பெற்ற மனம்!

மகன், சொத்தை விற்றுப் பணத்தை உடனே தரவில்லை என்று தாயுடன் பெரிய சண்டை போட்டுப் பிரிந்தே போய்விட்டான்.

அப்போது, மதுவந்திக்கு பன்னிரண்டு வயது!

மாமா சண்டை போட்டுப் போன பிறகு, பாட்டி கொஞ்ச காலம் மிகவும் உடம்பு சரியில்லாமல் இருந்தாள். பிள்ளைப் பாசம், அந்த அளவுக்கு உடம்பைப் பாதித்துவிட்டது!

சொத்தை விற்றுக் கொடுக்கும் பணத்தை மாமா வீணாக்க மாட்டார்., அதைவிடவும், தன் உடம்பையே வீணாக்கிக் கொண்டு விட மாட்டார் என்ற உறுதி மட்டும் இருந்திருந்தால், அப்படி கொடுத்தும் இருப்பாள்.

ஆனால், அந்த நம்பிக்கைக்கு வழியே இல்லாததால் மக கேட்டதைப் பெற்றவள் செய்யவில்லை என்று, மதுவந்தியுடை தாயார், அவளிடம் ஒரு தரம் சொல்லியிருக்கிறாள்!

அப்போது பாட்டி பிழைத்ததே அதிசயமாம்!

ஆனால், பாட்டியின் உடலுக்கே பணிவிடை செய்வதோடு மனதையும் தேற்றி நிமிர வைக்க, அப்போது பாட்டிக்கு ஒரு மக இருந்தாள். தன் குடும்பத்தையே கிளப்பிக் கொண்டு வந்து, தாயி



கூடவே இருந்து முக பாவம் பார்த்து பணிவிடை செய்து காப்பாற்றிய மகள்.

இப்போது அந்த மகள் இல்லை என்றாலும், பார்க்கும் வேலையைக்கூட ஓரளவு புறக்கணித்து, பேத்தி தன்னருகிலேயே இருப்பதும், பாட்டிக்குப் பிடிக்கவில்லை!

"இங்கே வாடா செல்லம்..." என்று ஒருநாள் அவளை அருகமர்த்தி, "பாட்டி காய்ந்து விட்ட சருகு! உதிர்வதற்கு, எப்போது வேண்டுமானாலும் ஓலை வரலாம். வரும்போது, நாம் கிளம்பத் தயாராக இருக்க வேண்டும். உன்னுடைய எதிர்காலம் எல்லாமே, இந்தப் பயிற்சியில்தான் இருக்கிறது. அதனால் அதை முதலில் கவனிக்க வேண்டும்!" என்றாள் அவள்.

ஆனால், அப்படிப் பேசும்போது, பாட்டி சூசகமாக ஏதோ சொல்கிற மாதிரி, மதுவந்திக்கு தோன்றும்! என்னவாக இருக்கும்?

ஒருவேளை, இளம் பெண்ணான அவளுக்குத் திருமணம் செய்வது உலக நடப்பு என்றாலும், அது தொடர்பான வேலைகளை எடுத்து செய்ய ஆளோ, வழியோ இங்கே இல்லையே என்று சொல்லாமல் சொல்கிறாளோ?

ஆனால், மதுவந்திக்கு ஒன்றும் இப்போது திருமணம் செய்ய வேண்டும் என்கிற எண்ணமே கிடையாதே!

இந்தத் தொழிலில் நல்ல பெயர் எடுத்து இதற்கு மேலும், 'ரூட்கனால்' பல், முகச் சீரமைப்பு ஏதாவது எடுத்து மேலும், படித்து, எல்லோருக்கும் இன்னும் நல்லது செய்ய வேண்டும் என்றல்லவா மனதில் நினைத்து வைத்திருக்கிறாள்!

அதனால், திருமணம் போன்ற செலவுகளை நினை ப் பயப்படவே வேண்டாம் பாட்டி என்று மனதோடு பேசிக் கொ ன் மதுவந்தி!

வாய்விட்டுச் சொன்னால், இன்னும் படிப்பா என்று அந்தச் செலவு குறித்தும் பாட்டி கவலைப்படக் கூடும் என்பதால், மனதில் இருப்பதை, வாய்விட்டுச் சொல்லாமலே மறைத்தாள்.

அன்னையின் ஆசை, மதுவந்தி செலவைப் பற்றிய கவலையில்லாமல், வளத்தோடு வாழ வேண்டும் என்பது! தன் வரையில் எவ்வளவோ கஷ்டப்பட்டு, உழைத்து, விருப்பு வெறுப்புக்களை அடக்கி முன்னேறிவந்த அனுபவத்தினா விளைந்த ஆசை!

தன் துன்பம், மகள் படக் கூடாது என்ற அந்த எண்ணத்தை குறை சொல்ல முடியாதுதானே?

ஆனால், அம்மாவின் அந்த ஆ நிறைவேறிவிடும்!

அம்மா இருந்து பார்க்க வழியில்லை என்பது தவிர, வேறு

குறையில்லை!

பணி நிமித்தமாக மதுவந்தி வெளியே செல்லுகையில், பாட்டிக்கு வேண்டியதை, வந்து, துணையிருந்து கவனிக்கும் பக்கத்து வீட்டுப் பின் 'போர்ஷன்' ஆன்ட்டி சொல்வது போல, அம்மா மேலே இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள்!

சம்பளம் என்று வாங்கிக் கொண்டே செய்தாலும், சுந்தரி ஆன்ட்டி செய்வதற்கு விலை மதிப்புப் போட முடியாது என்பது மதுவந்திக்கு!

அதேபோல, என்றைக்குமே சுந்தரி ஆன்டிக்கும் அம்மாவிடம் ஒரு பிரமிப்பு! தனி ஆளாக நின்று, சொந்த உழைப்பினாலேயே மகளை உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டாள் என்று மதிப்பும் மரியாதையும்!

எதற்கும் 'காயம்மா அப்படி, காயம்மா இப்படி' என்பாள்.

"சின்ன வயதில் உன் அப்பா இறந்தபோது, காயம்மா இடிந்து போவார்கள் என்று நினைத்தேன். அப்படி அன்பான தம்பதி! ஆனால் உன்னை வளர்க்கிற பொறுப்புக்காகவே, உன் அப்பா அலுவலகத்திலேயே வேலைக்கு சேர்ந்து, படிப்படியாக முன்னேறி, உன்னையும் முன்னேற்றி விட்டார்களே! பெண்ணாகப் பிறந்தால், காயம்மா மாதிரி இருக்க வேண்டும்" என்று குறைந்தது, இரண்டு நாட்களுக்கு ஒரு தடவையாவது சொல்லாமல் அவளுக்கு இருக்க முடியாது!

கடும் உழைப்பினால் வந்த சொந்த வருமானம் அவ்வளவையும் செலவு செய்துதான்... காயத்ரி மகளைப் படிக்க வைத்தாள். கூடவே விஆர்எஸ் வாங்கி அந்தப் பணத்தையும்!

அதற்காகவே தாயின் தியாகத்துக்கு உரிய மதிப்பு கொடுப்பதற்காகவே, மதுவந்தி வாழ்வில் முன்னேறியாக வேண்டும்!

இந்த வேகமே, தாயின் இழப்பிலிருந்து மதுவந்தியை வேகமாக மீட்டு வந்தது எனலாம்!

இரவில் தூங்கும்முன் "இன்றைக்கு நான் எல்லாம் நான்றாகவே செய்தேன்தானே, அம்மா? அந்தச் சின்னப் பையன் வாயைத் திறக்கவே மாட்டேன் என்று அடம் பிடித்தான்! சாக்லேட் துண்டு உள்ளே பல்லில் ஒட்டியிருந்து வலிக்கிறதோ என்று பார்ப்பதாகச் சொல்லி, ஒட்டியிருக்கும் சாக்லேட்டை ஊசியால் குத்தி எடுப்பதாகக் கதை விட்டு, மரத்துப்போகிற ஊசியைப் போட்டுவிட்டு, வலிக்கிறதா, வலிக்கிறதா என்று கேட்டுக்கொண்டே பல்லைச் சுத்தம் செய்து அடைத்துவிட்டேன். அவன் 'வலியே இல்லைக்கா' என்றபோது, ரொம்ப நிம்மதியாக இருந்ததும்மா!" என்று மனதிற்குள் தாயிடம் சொல்லி சந்தோஷப்படும் அளவுக்கு மதுவந்தியின் மனம் அன்றாட இயல்பு வாழ்க்கைக்கும் திரும்பி வந்திருந்தது!

அந்த மருத்துவமனையை அந்த இடத்தில் அமைத்து, இன்றளவும்



அதன் தலைமைப் பதவியில் இருப்பவர் டாக்டர் தேவராஜன்தான்.

இடம் பெரிது!

பல் மருத்துவப் பகுதியை அப்படியே வைத்துக் கொண்டாலும், காலப் போக்கில் கண், நரம்பு, காது, தொண்டை, மூக்கு, தாய் சேய் நலம் என்று பல்வேறு பிரிவுகளும் அங்கே தொடங்கப்பட்டு நடந்தன.

ஆபரேஷன் தியேட்டர், நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற வார்டுகள், அறைகள் என்று புன்னகை மருத்துவமனை வேகமாக விரிவடைந்தது!

டாக்டர் தேவராஜன் கற்பனையில் கூட கண்டிராத அளவுக்கு!

அந்த அளவுக்கு மருத்துவமனையை விரிவுபடுத்தத் தேவையான பணம் அவரிடம் இல்லை! பாங்கில் கடன் வாங்கினாலும், வட்டி என்று எக்கச் சக்கமாக ஒரு தொகை வீணாகும்.

பணத்தில் கெட்டியான தேவராஜன், இன்னொரு வழியைக் கண்டுபிடித்தார்.

சென்னையில் பல மருத்துவமனைகளை இணைத்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்த ஒரு கார்ப்பரேட் நிறுவனத்துடன் 'புன்னகை'யை இணைத்துக் கொள்வதற்கான பூர்வாங்க வேலைப்பாடுகளை அவர் நடத்திக் கொண்டிருந்தார்.

ரொம்ப பெரிய நிறுவனம் அது! அதனுடன் இணைந்துவிட்டால், விலை மிகுந்த அதி நவீனமான மருத்துவக் கருவிகள் அனைத்தும், தேவராஜனுக்கு ஒரு பைசா செலவில்லாமல் வந்து இறங்கிவிடும்!

அப்புறமென்ன? அவரது பங்குப் பணத்தைக் கோணியில் அள்ள வேண்டியதுதான்!

தேவராஜன் அந்தக் கனவில் மூழ்கி இருந்தார்!

அங்கே பணி புரிந்தவர்களுக்கும் உள்ளூர ஆவலும், குறுகுறுப்பும் தான். மருத்துவமனை விரிவடைந்தால், அவர்களுக்கும் வருமானம் கூடலாம் அல்லவா?

கூடவே சிறு பயமும், வேலையிலிருந்து, தூக்கியும் விடலாம் அல்லவா?

எதிர்பார்ப்புகளும் பயமும் எப்படியிருந்தாலும், அன்றாடப் பணி வழக்கம் போலச் சீராகவே நடை பெற்று வந்தது!

அன்றைய நோயாளிகளைத் தாமதமின்றி எதிர்கொள்ளும் விதமாக, கீழ்த் தளத்தில் உள்ள இரு பல் சிகிச்சை அறைகளையும் சுத்தப்படுத்தி தயார் நிலையில் மதுவந்தி வைத்து முடித்தபோது, "அக்கா கொஞ்ச நேரம் வரவேற்பைப் பார்த்துக் கொள்கிறீர்களாக்கா? வீட்டில் இருந்து ஃபோன் [illegible] என்னவென்று பேசிவிட்டு [illegible] மருத்துவப் பகுதியின் வரவேற்புப் பெண், நீலிமா அழைத்தாள்.



வீட்டில் எந்தப் பிரச்சினை என்றாலும், மகளிடம் அழுது ஆற்றும் தன்மை நீலிமாவுடைய அன்னைக்கு.

ஏற்றாற்போலக் குடிகாரக் கணவன்! தான்தோன்றி மகன்! சம்பாதிக்கும் ஒரே நபர் என்பதால், நீலிமாவின் வார்த்தைகளுக்கு அவள் வீட்டில் கொஞ்சம் மதிப்பு இருந்தது! எனவே அவளைத் தாயார் கூப்பிட்டுக் கொண்டே இருப்பாள்.

அலுவல் நேரத்தில் சொந்த விஷயம் பேசியது தெரிந்தால், தேவராஜன் பிய்த்து உதறிவிடுவார். அதனால், செல்லை எடுத்துக் கொண்டு, நீலிமா வெளியே போய்விடுவாள்.

அந்த நேரங்களில் பணி பாதிக்கப்படாமல், மதுவந்தியும், இன்னோர் உதவியாளும், பொறுப்பேற்றுக் கொள்வார்கள்.

நல்லவேளையாக... அல்லது, பெரிய டாக்டர் தேவராஜனின் கஞ்சத்தனம் காரணமாக, அங்கே வரவேற்புப் பணிக்கு நீலிமா மட்டும்தான் அமர்த்தப்பட்டிருந்தாள். அவள் வேறு ஏதாவது வேலை நிமித்தமாக வரவேற்பு இடத்தில் இல்லாதிருந்தால், பயிற்சிக்காக அங்கே பணியில் சேர்ந்திருக்கும் ஜூனியர் மருத்துவர்கள் யாராவது, வரவேற்புப் பணியில் கை கொடுக்க வேண்டும் என்பது, அங்கே எழுதப்படாத விதி!

அது, இப்படி நீலிமா சொந்த வேலையாக வெளியே செல்லும் போதும், பயிற்சி மருத்துவர்களின் மனிதாபிமானத்தால் பயன்பட்டு வந்தது!

ஆனால், ஒன்று! இது போன்ற சமயங்களில், நீலிமா பெரிதும், மதுவந்தியின் உதவியையே நாடுவாள்.

"மாலி அக்கா இதை வைத்துக்கொண்டு, அவளது வேறு நிறைய வேலையை என் தலையில் கட்டி விடுவாள் அக்கா! அப்புறம் வீட்டுக்குப் போக நேரம் ஆகி, அம்மா திட்டும்!" என்பாள் நீலிமா.

"அப்பா, தம்பி இருவரும் சரியில்லையா நானும், தப்பாகிப் போவேனோ என்ற பயம் அம்மாவுக்கு" என்று தாயின் திட்டலுக்கு விளக்கமும் கொடுப்பாள்.

ஆனால், மாலி அப்படித்தான்! ஒன்று கொடுத்தால், பதிலுக்கு குறைந்த பட்சம் ஒன்றைப் பெற்றே ஆக வேண்டும்! அதிகமாகப் பெற முடிந்தால், அது மேலும் நல்லது என்று எண்ணுகிறவள்!

ஆனால், கணக்குப் பாராமல், கஷ்டத்துக்கு உதவும் மதுவந்திக்கு மதிப்புக் கூடுவதும் அவளுக்குப் பிடிக்காது!

"நீ மட்டும் பெரிய சாது, சன்னியாசினி மாதிரி ஏன் வேஷம் போட்டு, எல்லோரையும் இழுக்கப் பார்க்கிறாய்?" என்று எரிச்சல் படுவாள்.

கொஞ்ச காலமாக, மாலியுடைய 'பாய் ஃப்ரண்ட்' மதுவந்தி அழகாக இருப்பதாகச் சொன்னதில் இருந்து, மாலியின் எரிச்சல் சற்றுக்



கூடியிருந்தது.

ஆனால், பேச்சு வாக்கில், யாரோ, ஏதோ சொன்னதற்கெல்லாம் கோபப்பட்டால், அதற்கு நாமென்ன செய்ய முடியும் என்று மாலியின் கோபத்தை ஒதுக்கிவிட்டு, வழக்கம் போல, மதுவந்தி, மாறுபாடின்றி நீலிமாவுக்கு உதவிக் கொண்டிருந்தாள்!

தாயார் கற்றுக் கொடுத்தது போலத் தேவைப்படுகிறவர்களுக்கு, நம்மால் இயன்ற உதவியைச் செய்யவேண்டும் என்பது அவளுக்கு.

அன்றும் அது போலத்தான் அவ்வளவு நேரம் ஒரு 'பல்வேர்' சிகிச்சையில் பக்கத்தில் நின்று வேலை செய்துவிட்டு வந்தவள், நீலிமா அழைத்ததும், உடனே அங்கே சென்று, அவளது பணியைத் தொடரலானாள்.

வழக்கமாக, செல்ஃபோனை எடுத்துப் போய்ச் சற்று நேரம் பேசிவிட்டு, வாடிய முகத்துடன் திரும்பி வருவாள் நீலிமா.

"பாருங்கக்கா என் தம்பியை, குடித்துவிட்டுக் கடையிலேயே கலாட்டா பண்ணியிருக்கிறான். அடிதடி ஒன்றுதான் குறையாக இருந்தது! தலை வேதனை!" என்று இது போல ஏதேனும் சொல்லி வருந்துவாள்.

மதுவந்தியின் ஆறுதலான இரண்டு வார்த்தைப் பேச்சின் பிறகு, அலுத்த ஒரு பெருமூச்சுடன் வேலையைத் தொடர்வாள் நீலிமா!

அவளது அலுப்பின் காரணமும் மதுவந்திக்கு தெரியும்

முதலில் மனைவி, இப்போது பெண் என்று வீட்டுப் பெண்களின் சம்பாத்தியத்தில் வாழ்ந்து சுகம் கண்டுவிட்ட தந்தையின் அடிச்சுவட்டிலேயே தம்பியும் நடந்தான் என்றால், வாழ்நாள் முழுவதிலுமே, நீலிமாவுக்கு விடிவு ஏது?

விடிவே கிடையாது என்று நீலிமா நிச்சயமாக முடிவுகட்டி வைத்திருப்பதால் வந்த அலுப்புதான் அது!

விடிவுக்கும் சில வழிகள் இருக்கலாம்,. கட்டாயமாக இருக்கும்! ஆனால், அவைகளுள் தனக்கு ஏற்றவை எவை என்று நீலிமாதானே முடிவு செய்ய வேண்டும்?

ஏன்? தனக்கு விடிவு வேண்டுமா, வேண்டாமா என்பதைக் கூட அவளேதானே தீர்மானிக்க வேண்டும்?

மற்றவர்கள், வெளியிலிருந்து, இந்த மாதிரிச் சிறு சிறு உதவிகளைச் செய்யலாம். அவ்வளவே!

அன்றும் அதுபோல நீலிமாவிற்கான சிறு சிறு உதவிகளுள் ஒன்றாக, சற்று முன் 'பல்வேர்' சிகிச்சையை செய்து கொண்டு போன மனிதரின் கேஸ் விவரத்தைக் கம்ப்யூட்டரில் மதுவந்தி பதிவு செய்து கொண்டிருந்தபோது, அது நடந்தது!

அது என்றால், ஏதோ ஒ[illegible] பலதுமோ!

## 2 வாழும் முறைமையடி



அன்று நீலிமாவின் உதவிக்காக வரவேற்பில் நின்று மதுவந்தி வேலை செய்து கொண்டிருந்தபோதுதான், மதுவந்தி முதல் முதலாக சுதர்மனைப் பார்த்தாள்.

கவலையும், கலக்கமும் கப்பிய முகத்துடன்!

'புன்னகை' மருத்துவமனைக்குள் வெளிப்புறம் இருந்து வரும் வழியில் இரு பெரிய கதவுகள் இருந்தன. ஒன்று, உறுதியான வெளிக் கதவு!

வெளிக் கதவைத் திறந்து சற்று ஒடுங்கிய நீளமான ஹாலில் செருப்பைக் கழற்றிப் போட்டுவிட்டு, அலங்காரமான அடுத்த கதவைத் திறந்து மேலும் உள்ளே வந்தால், ஏசிக் குளிர் இதமாகத் தடவிக் கொடுக்கும்!

வாயிலை ஒட்டி, வரவேற்புப் பகுதி!

அதுவும், உள் வாசல் கதவைப் போலவே, கண்ணுக்கு விருந்தாகப் பளபளக்கும்!

இந்த அலங்காரங்களில் எல்லாம் கஞ்சத்தனமே இராது! நிடுமெனப் பார்க்கிறவர்கள் பிரமித்துப் போக வேண்டும் என்பார் தேவராஜன்!

பிரமிப்புதான்! இன்னமும் கூட, அந்த ஊரில் மிகப் பெரிதான மருத்துவமனையில் பணி புரிவது குறித்து, மதுவந்திக்குப் பிரமிப்புதான்!

ஆனால், பகலிலும் ஒளி சிந்தும் பெரிய சர விளக்குகள், அந்த நடுத்தர நகரத்து மருத்துவமனைக்குச் சற்று அதிகம் என்று, அவளுக்குத் தோன்றும்!

தேவராஜன் சென்னைக்கு செல்லும் போதெல்லாம் அந்தச் சரவிளக்குகள் போல, ஏதாவது ஒன்று, அவரோடு வந்து நிற்கும்.

உள் வாயிற் கதவே அப்படி வந்ததுதான் என்று மூத்த பணியாளர்கள் சிலர் பேச்சுவாக்கில் சொல்லி, மதுவந்தி கேட்டது உண்டு!

கதவு திறக்கவும், யார் என்று ஒரு பார்வையில் பார்த்துவிட்டுத் திரும்ப எண்ணியிருந்தவளுக்கு 'நீ போர்டில்' கை இருந்ததே மறந்து போயிற்று!

மற்றது எப்படியோ போகட்டும்! இப்போது கவலையோடு வந்திருக்கும் இவனுக்கு வேண்டியது செய்து, இவனது கவலையைப் போக்க வேண்டுமே!



இவனுக்கும் பல்வலிதானே என்று பார்த்தால், அதற்குரிய முகபாவம் அவனிடம் இல்லை! வேறு யாருக்கோ, என்னவோ?

ஒருவேளை, மனைவிக்கோ என்று ஒரு கணம் மனம் நினைத்ததை அடக்கி "வணக்கம் சார்... நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய கூடும்? ஏதேனும் முன் பதிவு இருக்கிறதா?" என்று விசாரித்தாள் அவள். "என்ன பெயர்?" என்று கேட்டவாறே, கம்ப்யூட்டரில், அன்றைய முன் பதிவு செய்தோரின் பட்டியலைத் தட்டக் கையை நீட்டியபோதுதான், முந்தையவரின் பணக் கணக்கைப் போட்டுக் கொண்டிருந்ததே நினைவு வந்தது!

பணத்தைக் கூட்டி ரூபாயை எழுதிவிட்டு, பைசாக் கணக்குக்காக, சைபரில் கையை வைத்திருந்ததும்.

ஏனெனில் நாலைந்து வரிகளுக்கு, கம்ப்யூட்டர் சைபராகவே அடித்து வைத்திருந்தது!

சிறு குன்றலோடு, அந்த சீரோக்களை அவள் அழிக்க முற்பட்டபோது, அருகில் அவன் குரல் கேட்டது.

"முன் பதிவு எதுவும் பண்ணவில்லை. ஆனால், இது அவசரம் மிஸ்... மதுவந்தி" என்று அவளது தோளில் மாட்டியிருந்த ப்ளாஸ்டிக் பட்டியைப் பார்த்துப் பெயரைச் சொன்னவன் தொடர்ந்து, "நோயாளி காரில் இருக்கிறான். இசகுபிசகாக விழுந்ததில், முன்புறம் அடிபட்டுப் பற்கள் விழுந்துவிட்டன. ஆனால், அந்தப் பற்களையே இப்போது வைத்து விடலாமாமே! அதுதான் உடனே அழைத்து வந்தோம்" என்றான்.

"ஆமாம்! 'ஒரிஜினல் டென்டல் ரிஇம்ப்ளான்ட்' செய்வது. அடிபட்டு எவ்வளவு நேரம் ஆகிறது? அந்தப் பற்களை என்ன செய்தீர்கள்?" என்று கேட்டபடி 'கவுன்டரி'லிருந்து வெளியே வந்தாள் மதுவந்தி.

"விபத்து நடந்து, சுமார் ஒரு மணி நேரமே ஆகிறது. முன் நாலு பற்கள். அந்தப் பற்களை லேசாகக் கழுவி, வெதுவெதுப்பான பாலில் போட்டுக் கொணர்ந்திருக்கிறேன். அதுதான் நல்லது என்று படித்..தேன்" என்று இழுத்தவனிடம் விழி மலர "அதுதான் நல்லது! சரியாகவே செய்திருக்கிறீர்கள்!" என்று பாராட்டும் குரலில் கூறினாள் மதுவந்தி.

இவன் கெட்டிக்காரன். படித்ததை ஏட்டுச் சுரைக்காயாய் காற்றோடு விட்டுவிடாமல் பயன்பெறுமாறு பின்பற்றுகிறான்.!

அடி பட்டவனுக்கு டிடி போட்டாயிற்றா என்று விசாரித்து அறிந்து கொண்டவள், அவனுக்கு மொத்த உடம்பிலுமே அங்கங்கே, சிராய்ப்பு, சிறு காயங்கள் ஏற்பட்டிருப்பது தெரியவும், உள்புறம் திரும்பி, எடுபிடி பாலுவை உரக்க அழைத்துச் சக்கர நாற்காலியை எடுத்து வரச் சொன்னாள்.

12.02.2009 00:13



"பாலுவைக் கூட்டிப்போய் நோயாளியை அழைத்து வாருங்கள். மி... சார் நான் அதற்குள் பெரிய டாக்டரிடம் விவரம் சொல்லி அழைத்து வருகிறேன். இது போல நுணுக்கமான வேலையெல்லாம் அவரேதான் நேரடியாக முடிவு பண்ண வேண்டும்" என்றவள் செல்லில் அவரது எண்களைத் தட்டியபடியே தேவராஜனின் அறைக்குள் ஓடினாள்.

தாமதமாகும் ஒவ்வொரு நிமிஷமும் வெற்றி வாய்ப்பைக் குறைக்குமே!

அவளை அழைத்து, ஒரு கணம் நிறுத்தி, "இதற்கு ஆகும் செலவு பற்றி யோசிக்கத் தேவையில்லை, டாக்டர் மதுவந்தி! எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை!" என்றான் அந்த இளைஞன்.

தலையாட்டியபடியே உள்ளே ஓடினாள் அவள்.

அவன் பணம் பற்றிச் சொன்ன தகவலும் உதவியாகவே அமைந்தது!

ஏனெனில் "கண்ட கஞ்சிக்கில்லாதவன் எல்லாம் பல்லை உடைத்துக் கொண்டான் என்றால், தூக்கித் தூரப் போட்டுவிட்டுப் போகச் சொல்லு! இன்றைக்கு எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது!" என்று மேஜை மேல் தூக்கி வைத்துக் கொண்டிருந்த கால்களை அசைக்கக் கூட இல்லாமல்தான், முதலில் பதில் சொன்னார் வரதராஜன்.

"ரொம்பவும் வசதி உள்ளவர்களாகத் தெரிகிறது சார்! செலவு எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை என்று, நோயாளியை அழைத்து வந்தவர் சொன்னார்!... அவர் கையில் ரோலக்ஸ் வாட்ச் கட்டியிருக்கிறார் சார்!" என்று நினைவுபடுத்திச் சொன்னாள் மதுவந்தி!

"பின்னே இங்கே வந்து என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்? முதலில் முன் பணமாக ஓர் ஐம்பதாயிரத்துக்கு பில் போட்டு வாங்கிவிட்டு அப்புறமாக வந்து சொல்ல வேண்டியதுதானே?" என்று எரிந்து விழுந்தபடி, மேஜையிலிருந்த கால்களைக் கீழே எடுத்து வைத்தார், தேவராஜன்!

சற்று விழித்துவிட்டு, "தாமதமாகிப் போனால், சிகிச்சை பயன்படாதே என்று, முதலில் உங்களிடம் ஓடி வந்தேன் டாக்டர் சார்?" என்று சமாளித்தாள் மதுவந்தி!

"ஆனால், வேலை முடிந்ததும் பணம் கட்டாமல் ஓடிவிட்டால் நீயா கொடுப்பாய்? முதலில் ஓடிப்போய், நீலிமாவிடம் ஒரு மதிப்பீடு போட்டு, முன் பணம் வாங்கச் சொல்லிவிட்டு, 'இம்ப்ளான்ட்'க்குத் தேவையான டேபிள் தயார் பண்ணு. ஓடு, ஜல்தி!" என்று அவளை விரட்டினார் தேவராஜன்.

செல்வதற்காக அவள் வேகமாகத் திரும்பவும் "கொஞ்சம் பொறு



டாக்டர் மனோகரன் பக்கத்தில் எங்காவது இருந்தால், அவரையும் வரச்சொல்லு! அந்த ஆள், கொஞ்சம் கஷ்டப்பட்டு வேலை செய்வான். அதற்கும், தனியாகப் பணம் வாங்கி விடலாம்! சீக்கிரம்!" என்று இன்னொரு வேலையும் சொல்லி அனுப்பினார்.

சொல்லப் போனால் இப்போதுதான் மதுவந்திக்கு நிம்மதியாயிற்று எனலாம்.

நாலு பற்களை சரியாக வைத்துப் பொருத்தும் அளவுக்கு, இப்போது தேவராஜனுக்கு பொறுமை கிடையாது!

இப்போது அவரது எண்ணமெல்லாம் அந்தப் பெரிய 'கார்ப்பரேட்' நிறுவனத்துடன் இந்த மருத்துவமனையை லாபகரமாக இணைத்துப் பயன் பெறுவதிலேயேதான் முழு மூச்சுடன் முனைந்திருந்தது. இணைத்துவிட்டால், அவர்கள் செலவில் மருத்துவமனையை இன்னமும் பெரிதாக்கி, நவீனப்படுத்திப் பணத்தை அள்ளலாம் என்பதில்!

இந்தக் கணக்கிலும், முயற்சியிலுமாக இருந்த தேவராஜனுக்குக் கடந்த ஒரு மாதமாக வேலையில் ஆர்வம் குறைந்து போயிருந்தது!

கூடவே, அவரது உடம்பும் ஒத்துழைக்கவில்லையோ என்று, மதுவந்திக்கு ஓர் ஐயம்!

அடிபட்டு, அழன்றிருக்கும் இடத்தில், விழுந்துவிட்ட நாலு பற்களை வைத்து, 'வயரிங்' செய்வது என்றால் சாதாரணமில்லை!

தொந்தியும் தொப்பையுமாக, சதா பணக் கணக்கில் மூழ்கியிருக்கும் தேவராஜனுக்கு அது மிகவும் கடினமே! அதன் காரணமாக எரிச்சலும் படுவார்.

அதனாலேயே ஊக்கமும் உற்சாகமும் கொண்ட டாக்டர் மனோகரனை உதவிக்கு அழைப்பது, மதுவந்திக்கு நிம்மதியை அளித்தது எனலாம்.

உதவி டாக்டராக வந்தாலும், முழு வேலையையும் அவர்தான் செய்வார் என்பதோடு, சில்லறை உதவிக்காகக் கூட நிற்கும் அவளுக்கும் இது பயனுள்ள பயிற்சியே!

எல்லாவற்றையும் விட முக்கியமாக, நட்போ, உறவோ, நோயாளியோடு வந்திருக்கும் அந்த இளைஞனின் முகத்தில் படர்ந்திருந்த கவலையும், விரைவிலேயே அடியோடு மறைந்து போகும் அல்லவா?

அவள் உள்ளூர விரும்பியது போலவே, அழைத்ததுமே வந்த டாக்டர் மனோகரனும், மதுவந்தியைப் பார்த்ததும், மகிழ்ச்சியோடு புன்னகைத்து "நீ தான் உதவிக்கு வரப் போகிறாயா? வெரிகுட் அப்படியானால், டேபிள் உபகரணங்களைச் சரி பார்க்க வேண்டியதில்லை! குட் [illegible] தோளைப் பற்றி ஒரு நா[illegible]

12.02.2009 00:14

மேலங்கி, வாயுறை முதலியவற்றை அணிவதற்காக உள்ளே சென்றார்!

நோயாளியோடு வந்தவனைப் பார்த்து, நம்பிக்கையூட்டும் வண்ணம் மதுவந்தி முறுவலித்தாள்.

"இந்த டாக்டர் மிகவும் கெட்டிக்காரர். அதனால், உங்க... இவரைப் பற்றிக் கொஞ்சமும் பயமே இல்லாமல் நீங்கள் நிம்மதியாக இருக்கலாம், மிஸ்டர்..."என்று அவள் சற்று இழுத்தவாறு முடிக்க, புரிந்துகொண்டு, "என் பெயர் சுதர்மன். இவன் என் நண்பன். சென்னையில் பெரிய தொழில் வைத்திருக்கிறான். பெயர் லோகநாதன். இங்கே பக்கத்தில் ஒரு விழா முடிந்து திரும்பும்போது இப்படியாகிவிட்டது!" என்று விளக்கம் கொடுத்தான் சுதர்மன்.

சுதர்மன்!

வித்தியாசமான பெயராக மனதில் பதிந்தது, மதுவந்திக்கு!

ஆனால் அதைப் பற்றி ஆராய நேரமின்றி, அடிபட்டவனுக்குத் தைரியம் சொல்ல வேண்டியிருந்தது.

"பணம் கட்டி விட்டீர்கள்தானே, சுதர்மன் சார்?" என்று அவனிடம் கேட்டவாறே, லோகநாதனிடம் குனிந்து, அவனது கையை பற்றி அழுத்தி "ஹல்லோ மிஸ்டர் லோகநாதன், வெகு சீக்கிரமாக நீங்கள், உங்கள் சொந்தப் பற்களால், முன்போலவே அழகாகப் புன்னகை செய்வதற்கு, நான் உத்திரவாதம்" என்று உறுதியான குரலில் கூறி முறுவலித்தாள்.!

பேச முடியாமல், இரு கரங்களாலும் அவளது கையை அழுந்தப் பற்றி, தலையை மட்டும் மிக லேசாக அசைத்தான் லோகநாதன்.

"ஆல்ரைட்! இப்போது சிகிச்சை அறைக்குப் போவோமா?" என்று லோகநாதனிடம் கேட்டுவிட்டு, நிமிர்ந்த சுதர்மனைப் பார்த்தாள் மதுவந்தி!

"லோகநாதனிடம் கூறியது, உங்களுக்கும் சேர்த்துதான், சுதர்மன்! உங்கள் நண்பரைப் பற்றிய கவலையகன்று, இனி நிம்மதியாக இருங்கள்! வேறு வேலை ஏதாவது இருந்தால், அதைப் பார்த்துவிட்டு, உணவையும் முடித்துக் கொண்டு வாருங்கள்" என்றுரைத்து, சக்கர நாற்காலியைச் சிகிச்சை அறை நோக்கிச் செலுத்துமாறு பாலுவிடம் தெரிவித்தாள்.

சுதர்மன், லோகநாதன் இருவருமே அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதால், உணவு மற்றும் விபத்து தொடர்பான கவனத்துக்காகவும், நோயாளி மருத்துவமனையிலேயே தங்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது!

மாலையில் வீடு திரும்பும்முன் லோகநாதனைப் பார்த்து, அவனது முன்னேற்றத்தைக் குறித்துக்கொண்டு சென்றவள், பூர்வையாளர் அறையில் காத்திருந்த சுதர்மனிடம் விவரம் சொல்லி, அவனது முகம்



மூட்டுவலி
கழுத்துவலி
முதுகுவலி
சைனஸ்
ஆஸ்துமா
அல்சர்
வயிற்றுவலி
ஒற்றைத்தலைவலி
சர்க்கரைவியாதி
வயிற்றுப்புண்
சிறுநீரக கல்லடைப்பு
ஜீரணக்கோளாறு
ரத்தக்கொதிப்பு
மூலம்
தோல்வியாதி
வெள்ளைப்படுதல்
மாதவிடாய் கோளாறுகள்
மலச்சிக்கல்
வைட்டமின் சத்துக்குறைவு

நோய்கள் 100 விதம்!

அனைத்து சிகிச்சைக்கும் ஒரே இடம்

பக்க விளைவுகள் இல்லாத ஆயுர்வேத, சித்த மருத்துவ சிகிச்சை

ஆலோசனை இலவசம்!

டாக்டர் V. முருகப்பன்



டாக்டர் V. முருகப்பன்

முகவரி:
4/2, S.S.R. பங்கஜம் Castle,
S.S.R. பங்கஜம் 1வது குறுக்குத்தெரு,
S.S.R. பங்கஜம் தியேட்டர் பின்புறம்,
[illegible] - 600 093.
போன்: [illegible]
செல்: 9444160175, 990306363



லர்வதைக் கண்டு பூரித்தாள்.!

ஊருக்குப் புதியவன் என்பதால், அங்கே தங்குவதற்கு வசதியான ஹோட்டல்கள், நல்ல உணவு கிடைக்கும் இடம் போன்ற விவரங்களை, அவள் கூற, அவன் நன்றியோடு ஏற்றுக் கொண்டான்.

அம்மா இருந்தால், வீட்டு மாடியில் கூடத் தங்கிக் கொள்ளச் சொல்லியிருக்கலாம் என்று எண்ணிவிட்டு, அது சரி வராது என்று உடனே நினைத்தாள்.

யாரோ அன்னியன்! வீட்டிலே தங்குகிறாயா என்று கேட்பதே, சற்று அநாகரீகமாகத் தோன்றக் கூடும். தந்தையோ, மாமாவோ கூட இருந்தால் வேறு மாதிரி!

அப்படி யாருமற்று, நோயாளியான மூத்த தலைமுறைப் பெண்மணியும், இளம் பெண்ணான அவளும் மட்டும் இருக்கும் வீடு எனும்போது, சும்மா இருப்பவர்களுக்குக் கூட, அவலைக் கொடுத்து மெல்லச் சொல்வது போல ஆகிவிடக்கூடும்!

எதற்கு வம்பு?

மதுரை, சென்னை போலப் பெரிய நகரம் அல்ல என்றாலும், தஞ்சையும் ஓரளவு பெரிய ஊர்தான். கொடுக்கிற காசுக்கேற்பத் தங்குவதற்கான வசதிகள் உள்ள ஊரும் கூட...!

வழி காட்டிவிட்டால் அத்தோடு, அவளது வேலை முடிந்தது.!

மறுநாள் காலையிலேயே சுதர்மன் வந்துவிட, அவனுக்கும் முன்னாலேயே வந்து, லோகநாதனைப் பார்த்துவிட்டிருந்த மதுவந்தி, மற்றவனை உற்சாகத்துடன் அழைத்துப் போனாள்.

"பாருங்கள், உங்கள் நண்பரின் அழகான முகம் பெரும்பாலும் திரும்பி விட்டதுதானே?" என்று, லோகநாதனின் முகத்தை மறைத்து விழுந்திருந்த தலைமயிரை மென்மையாக ஒதுக்கி, லேசாகத் திருப்பிக் காட்டினாள்.

அடிபட்டதால் ஏற்பட்டிருந்த வீக்கங்கள் பெருமளவு வடிந்து விட்டிருக்கவே, நோயாளியின் முகத் தோற்றமும், முந்தையத் தினத்துக்குப் பெரிதும் மாறியிருந்தது!

அடிபட்டதால் கன்றிக் கறுத்திருந்த இடங்கள் தவிர, மற்றபடி கிட்டத்தட்ட இயல்புக்கு வந்திருக்கும் என்பது, அவளது கருத்து.

சுதர்மனும் அவளை ஆவலாகப் பார்த்து, ஒப்புதலாகத் தலையாட்டவும், அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது!

"ரொம்ப நன்றி மதுவந்தி! லோகன், அவனுடைய தாயாருக்கு ஒரே பிள்ளை! இந்த விபத்து பற்றி, அவர்களுக்கு அதிக நாட்கள் தெரியாமல் இருக்க முடியாது! ஆனால், ஆன்ட்டி வந்து பார்க்கும் போது, கிட்டத்தட்ட பழைய முகம் வந்துவிட்டால்தான், அவர்கள் தாங்குவார்கள்!" என்று குரலில் ஓரளவு நிம்மதியோடு கூறினான் சுதர்மன்.



"ஓ! அதற்காக இன்னும் சொல்லாமலே வைத்திருக்கிறீர்களா?" என்று அவனிடம் கேட்டுவிட்டு, மறுபடியும் லோகநாதனின் முகத்தை மதுவந்தி ஆராய்ந்தாள்.

பிறகு "உங்கள் சொந்த இடம், மதுரை என்று முகவரி கொடுத்திருந்தீர்கள். நீங்கள் விபத்து பற்றி விவரம் தெரிவித்து, அங்கிருந்து அவர்கள் கிளம்பினால், வருமுன், எல்லாமே இன்னும் கொஞ்சம் குணமாகியிருக்கும்தான்! ஆனால், கன்றல்களும், காயச் சிராய்ப்புத் தழும்புகளும் மேலும் மறைய வேண்டுமானால், இன்னும் ஒரிரு நாட்கள் போக வேண்டும். நண்பர் லோகநாதனுடைய அம்மாவிடம் எப்போது சொல்வது என்று நீங்கள் இருவருமாக முடிவு செய்து கொள்ளுங்கள்" என்றாள் அவள்.

"மதுரை என் இருப்பிடம் மதுவந்தி! லோகன் இருப்பது சென்னையில், இங்கே பொது நண்பனின் வீட்டு விழாவுக்கு வந்தோம். வந்த இடத்தில்தான்... ஏதோ, இந்த அளவில் இவன் தப்பித்ததே, இப்போது எனக்குப் பெரிதாகத் தெரிகிறது..." என்ற சுதர்மன், நண்பன் ஏதோ கூற முயற்சிக்கவும், தன் பேச்சை நிறுத்திக் கவனித்தான்.

ஆனால், உள்ளூர வலித்ததோ, என்னவோ ஒரு புருவச் சுளிப்புடன் முயற்சியிலேயே பேச்சை நிறுத்திக் கொண்டான்.

ஆறுதலாக அவன் கையைத் தட்டிக் கொடுத்து, "இருக்கட்டும், மிஸ்டர் லோகநாதன். இன்னும் இரண்டே நாட்களில் எல்லாம் சரியாகிப் போகும்! அதுவரை கொஞ்சம் பொறுமையாகக் காத்திருங்கள்.!" என்று முறுவலித்துவிட்டு "வேலை இருக்கிறது. வரட்டுமா?" என்று சுதர்மனை நோக்கி விடை பெற்றுப் போனாள் மதுவந்தி.

மென்னடையாய் அவள் விரைந்து செல்வதைப் பார்த்துவிட்டுத் திரும்பினால், லோகநாதனின் முகம் மேலும் சுளித்திருந்தது!

கவலையுடன் "என்ன லோகன்..." என்று தொடங்கிய சுதர்மன், உடனேயே, "சற்றுப் பொறு!" என்று கையோடு கொணர்ந்திருந்த கைப் பெட்டியைத் திறந்து, ஒரு சிறு குறிப்புப் புத்தகத்தையும் பால் பேனா ஒன்றையும் எடுத்து, மற்றவன் கையில் கொடுத்தான்.

"என்ன செய்கிறது என்று இதில் எழுதிக் கொடு. ஆனால், உன்னால் பேச முடியும் என்று சொன்னார்களே!" என்றான்.

வேகமாக லோகநாதன் எழுதியதைப் பார்த்ததும், அவனுக்குச் சிரிப்பு வந்தது!

"பல் வயர் தெரியப் பேச பிடிக்கவில்லை. என்னை லோகன் என்று கூப்பிடும்படி, அவளிடம் [illegible]" [illegible] லோகநாதன்.

எப்போதுமே, அவனுக்கு அப்படித்தான். லோகநாதன், லோகு

என்றால், வயதான மாதிரி, அடியாள் மாதிரி இருக்கிறது என்று எரிச்சல்படுவான். ஆனால், இந்த நிலைமையிலும், அதுவே பெரிதாகத் தோன்றும் என்று சதர்மன் நினைக்கவில்லை.

எங்கே வலிக்கிறதோ, எங்கே உறுத்துகிறதோ என்று கவலைப்பட்டுக் கேட்டால், இவன் எதைப் பற்றி கூறுகிறான்.!

கூடவே சதர்மனுக்கு சிறு கோபமும் ஏற்பட்டது!

திருமணமானதும் அந்த நண்பன் தேனிலவுக்கு புறப்பட்டுப் போய்விட்டான்.

இவர்களும், தங்கள் வழி நாடிக் கிளம்பியிருக்க வேண்டியதுதான்,

ஆனால், மணமகனான நண்பன் மனைவியோடு கிளம்பிச் சென்ற பிறகு, அவனது பைக்கை எடுத்து ஓட்டியே தீருவேன் என்று பிடிவாதம் பிடித்து, அதை வேகமாக வேறு ஓட்டி விழுந்து, பைக்கைக் காயலான் கடைச் சரக்கு மாதிரிச் செய்துவிட்டு வந்திருக்கிறான். அடுத்தவன் சொத்தை, அவனைக் கேளாமலே வீணாக்கி இருக்கிறோமே என்று, அதைப் பற்றிய கவலை இல்லை!

பெற்ற தாய்! ஒரே பிள்ளை என்று மகனிடம் உயிராக இருப்பவள்! நினைத்துக் கொண்டால் ஃபோன் பண்ணி மகனோடு பேசுவாள். என்ன நேரம், என்பதெல்லாம் கிடையாது. இரண்டு நாட்களாக மகன் செல்லை அணைத்து வைத்திருக்கிறான்.... பேச முடியாமல்தான். ஆனால், அந்த அன்னை என்ன பாடு படுவாளோ என்று அதைப் பற்றிய அக்கறையே இல்லை!

சதர்மனாக யோசித்து, லோகனின் வீட்டுக்கு ஃபோன் செய்து, லோகன் இருக்கிற இடத்தில் 'டவர்' இல்லாததால் செல் எடுக்காது. அங்கிருந்து வந்ததும் ஃபோன் செய்வான் என்று தகவலாக மட்டும் சொல்லி வைத்திருக்கிறான்.

சொந்த வேலையைப் போட்டுவிட்டு, இந்த ஊரில் இவனுக்காக மட்டுமே உட்கார்ந்திருக்கும், இந்த நண்பன் என்ன செய்கிறானோ என்று அதைப் பற்றிய எண்ணம்கூட இல்லை!

முதலில், பல் பல் என்று அதைக் காட்டிக் காட்டி தவித்தான்.

அது சரியாகிவிடும் என்று ஆனதும், இவன் பெயரை நாகரீகமாகச் சுருக்கி அழைக்கச் சொல்ல வேண்டும் என்பது மட்டும்தான் கருத்தில் இருக்கிறது! என்ன புத்தி இது?

ஆனால், எப்போதுமே லோகனுக்குத் தான் மட்டும்தான் முக்கியம்! பெற்றோர் கொடுத்த அதிகப்படிச் செல்லத்தினால் நேர்ந்த விளைவு!

சதர்மனிடம் மட்டுமே சற்று அதிகப் பற்றுதல், பற்றுதல் என்று கூட அதைச் சொல்ல முடியாது! ஒரு பிரமை!

படிக்கும்போது, கல்லூரி கிரிக்கெட் டீமுக்குக் கேப்டனாக இருந்து ஜெயித்துக் கொடுத்ததோடு, சதர்மன் படிப்பிலும் எப்போதுமே கெட்டிக்காரனாக இருந்தான். கூடவே, படிப்பில் சற்று மோசமாக



இருந்தவர்களுக்குச் சிரமம் பாராது, கற்றுக் கொடுக்கவும் செய்வான்.

கற்றுக் கொடுக்கும்போது, இன்னொரு தரம் படிப்பது போலத்தானே என்பது, அவனுக்கு.

அதில் அதிகப் பலன் பெற்றவன் இந்த லோகநாதன். கல்லூரி டீமிலும் இருந்ததால் விளையாட்டிலும் தொடர்பு இருந்தது!

அதிலும் பந்தை இந்த மாதிரி அடி என்று சதர்மன் பயிற்சி கொடுப்பான்!

அதைப் பின்பற்றி, ஒரு மாவட்ட அளவுப் போட்டியில், லோகன் நூறு ரன்னே எடுத்துவிட, கொஞ்ச காலம், குருவின் காலில் விழுந்து கும்பிடாத குறைதான்!

அதன்பிறகு படிப்பு முடிந்து, அவரவர் வழியில் போயினர்.

சதர்மன் தந்தையோடு தொழிலில் ஈடுபட, லோகனை பைக் ரேஸ் ஈர்த்தது!

கொஞ்சகாலம், பைக்கை விட்டு அவன் இறங்குவதே இல்லை... சாப்பாடு தண்ணீர் கூட, அதிலேதான் என்றெல்லாம் கூடச் சொன்னார்கள்.

எல்லாம் 'காக்காயாய் வாந்தி எடுத்த' கதையாக இருக்கும் என்று சதர்மன் அலட்சியமாகத்தான் எண்ணினான்.!

ஆனால் ஒரு நண்பனின் அனுமதி பெறக்கூட இல்லாமல் அந்த நண்பனது பைக்கை லோகன் எடுத்ததும், ஓட்டியதும், லோகனைப் பற்றி உலவிய பேச்சுக்களில், ஓரளவு உண்மையும் இருந்ததை எடுத்துரைத்தான்.!

அதிலும் அவன் பைக்கை ஓட்டிய வேகம்!

லோகன் வண்டியை ஓட்டிய வேகத்துக்கு, அவன் இந்த அளவில் தப்பிப் பிழைத்ததே அதிசயம்தான்!

திரும்பிச் செல்லும்போது, அவன் தாயிடம் இதுபற்றி ஒரு வார்த்தை போட்டு வைக்க வேண்டும் என்று மனதுள் குறித்துக் கொண்டான் சதர்மன்!

ஆனால், இத்தனை துன்பங்களையும் ஈடு செய்வதுபோல, ஒரு நல்லதும் நடந்திருக்கிறது!

அதுதான் அந்த இனிய பெண்... அல்லது, டாக்டர் மதுவந்தி என்று சொல்ல வேண்டுமோ? அவளோடான சந்திப்பு!

12.02.2009 00:14



# 3 வாழும் முறைமையடி



வரவேற்பில் நின்று கொண்டிருந்தாலும், மதுவந்தியைப் பார்த்ததுமே, சதர்மனுக்கு ஓரளவு சுமை இறங்கிய உணர்வு ஏற்பட்டுவிட்டது! இதற்கு மேல் செய்ய வேண்டியதை, இவள் கவனிப்பாள் என்பது போல!

ஏற்றாற்போல, அருகில் சென்று பார்த்தால், அவளே மருத்துவராகவும் இருந்தாள்.

விஷயம் தெரிந்தவளாக இருப்பாள் என்று அவன் எண்ணியதற்கு சரியாக, வினாடி கூட நேரத்தை வீணாக்காமல், மதுவந்தி செயல்பட்ட விதம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது!

அது மட்டுமல்ல, சிகிச்சைதானே என் பொறுப்பு என்று போய்விடாமல், லோகனின் முன்னேற்றம் பற்றித் தெரிவித்ததோடு, அவன் தங்குவதற்கான இடம் வரை விவரங்கள் கொடுத்துவிட்டுப் போனாளே!

மறுநாளும், லோகன் எப்படி இருக்கிறான் என்று முன்னதாகவே வந்து, பரிசோதித்ததோடு, சதர்மன் வந்ததுமே விவரம் தெரிவித்து, கூடவே வந்து காட்டி... லோகனின் முகத்தைத்தான் எவ்வளவு மென்மையாகத் திருப்பிக் காட்டினாள்!

அந்த மென் கரங்களில் ஒருவரின் பல்லைப் பிடுங்கும் அளவுக்கு வலு இருக்கும் என்றால் அதிசயம்தான்! நோயாளியிடம் பரிவு காட்டுவது எப்படி என்று, அவள் பாடம் எடுக்கலாம்!

நோயாளியோடு கூட வருகிறவர்களுக்கு எப்படி தென்பூட்டுவது பற்றியும்தான்...!

முழுமையாக சதர்மன் நிம்மதி மூச்சு விட்டது அப்போதுதானே?

இதுவரையுமே, லோகனின் முகம் இனி எப்படி இருக்கப் போகிறதோ என்று அவனுக்கு உள்ளூரக் கலக்கம்தான்!

லோகனைப் பொறுத்த வரையில், அவன் தன்னை நன்றாகப் பார்த்துக் கொள்ளுகிறவனே! நடை, உடை, பாவனை அத்தனையிலும், அதிகப்படியாகவே அக்கறை எடுத்துக் கொள்வான். இங்கே ஏதேனும் முகத் தோற்றத்தில் பிடிக்காத மாற்றம் என்று தோன்றினாலும், சென்னைக்குச் சென்றதுமே, அதற்கான 'சர்ஜரி' செய்து, சீர்ப்படுத்திக் கொள்ளுவான்.!

அவனது மூக்கே அப்படி மாற்றப்பட்டதுதான்!

எனவே, சதர்மனுக்கு அவனைப் பற்றி அதிகக் கவலை இருக்கவில்லை! எப்படியும், என்ன செலவு செய்தேனும், தன்னை



அழகுப்படுத்திக் கொள்வான். அந்த அளவில் திருப்தியாகியும் விடுவான்.

ஆனால், அவனுடைய அன்னை முழுக்க முழுக்க வேறு விதம்! கண்ணின் கருமணி மகன்! தப்பு செய்தது பிள்ளையே என்றாலும் அகப்பட்ட அத்தனை பேரையும் விளாசித் தள்ளி விடுவாள்.!

சும்மாவே, செல்லில் பேச முடியாதபடி 'டவர்' இல்லாத இடத்துக்கு மகனைச் செல்ல விட்டதற்காக, சதர்மனிடம் அவளுக்குக் கோபம்தான்!

லோகன் இரண்டு நாட்கள் பேச மாட்டான் என்பதற்கு, அப்படித்தானே ஏதோ கற்பனைக் காரணம் சொல்ல நேர்ந்தது?

"எவனோ ஒரு கிறுக்கன் சென்னையை விட்டு, அவ்வளவு தொலைவில் திருமணம் செய்தால், போய்த் தொலைகிறான் என்று விட்டுவிடாமல், அந்தக் கல்யாணத்துக்கு, நீங்கள் எல்லோரும் சேர்ந்துதானே போனீர்கள்? அப்புறம், நீ மட்டும் கல்லுக்குண்டு மாதிரி செல்லில் பேசுகிறாய், அவனை எங்கே ஏன் போகவிட்டாய்?" என்று அதட்டத்தான் செய்தாள்.

ஆனால், "ஒருவர் நல்லதற்குச் சொன்னால், அதைக் கேட்கிற மாதிரியா, லோகனை வளர்த்திருக்கிறீர்கள்? அவனுக்காக உங்களிடம் சொல்ல வந்ததே தப்பு!" என்று சதர்மனுக்கு சற்று விறைப்புக் காட்டிய பிறகுதான் அடங்கி "சரிப்பா... சரிப்பா! என்று அவனைத் தனியே விட்டு விடாதேப்பா! எப்படியாவது, அவன் இருக்கும் இடத்துக்கு நீயும் போய், அவனைச் சென்னைக்கு அனுப்பிவிட்டுப் போய்யா" என்று இறங்கிப் பேசினாள்.

அந்த நேரத்தில், அவளை நினைத்தாலும் பாவமாகத்தான் இருந்தது!

ஆனால் லோகன் மட்டும் இப்படி இருக்கிறான் என்று தெரிந்தால், சென்னையிலிருந்து அலறியடித்துக்கொண்டு, கிளம்பியே வந்து, பிலுபிலுவென்று சதர்மனைப் பிடித்துப் பேயாட்டி விடுவாள்! லோகனுக்கு பெருமளவு நன்றாகுமுன் அவள் கண்ணில் மகனைக் காட்டுவதே தப்பு!

நல்லவேளையாக, இப்படியோர் அழகான, அதே சமயம் நல்லவளுமான டாக்டர் கிடைத்து, லோகனுக்கும் சீக்கிரமாகக் குணமாகி வருகிறது!

அவளைப் பார்க்க வேண்டும் போல சதர்மனுக்குத் தோன்றியது! பார்த்து நன்றி சொல்ல வேண்டாமா?

லோகனின் சிகிச்சைக்காக மட்டுமின்றி, அவன் தங்குவதற்குத் தகுந்த இடமும் சொல்லி வழி காட்டினாளே!

நாளைக்கு வந்ததும்... என்று எண்ணமிட்டவாறே, லோகன் இருந்த அறை ஜன்னல்

12.02.2009 00:15

மதுவந்தியே போய்க் கொண்டிருந்தாள்.

அவளது வேகமான மென்னடை! மேலே அவளது வெண்ணிற சுடிதார்(?) இல்லாததால், இடை இன்னமும் மெல்லியதாகத் தோன்றியது! 'பொய்யோ எனும் இடையாள்' என்ற சொற்றொடர் இவளுக்குத் தான் எவ்வளவு பொருத்தம்!

பார்க்கையிலேயே, சாலையைக் குறுக்கே கடந்து, எதிர்ப்புறமாகச் சற்றுத் தள்ளியிருந்த பெரிய சூப்பர்மார்க்கெட்டினுள் அவள் செல்வது தெரிந்தது.

சுதர்மன் மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தால், கிட்டத்தட்ட பார்வையாளர் நேரம் முடிகிற சமயம்.

ஏற்கனவே, லோகனும் தூங்கப் போவது போல, வசதியாக, அரைக்கண் மூடிப் படுக்கையில் சாய்ந்திருந்தான்.

கொடுக்கப்பட்டிருந்த 'ஆண்டிபயாட்டிக்' மருந்துகளின் பலனாக இருக்கலாம்!

அல்லது, நண்பன் புத்தி சொல்லத் தொடங்கி விடக் கூடாதே என்றும் இருக்கலாம்!

அவனிடம் சென்று, அவனுக்காகக் கொண்டு வந்திருந்த புத்தகங்களையும் பழங்களையும் அலமாரித் தட்டில் இருந்து எடுத்துவந்து, லோகனின் கையெட்டும் தூரத்தில் இருந்த சிறு மேஜை மீது வைத்தான்.

அசையாமல் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டு, டீவி ரிமோட்டைக் கையால் காட்டி, எடுத்துத் தருமாறு சைகை செய்தான் லோகநாதன்.

ரிமோட்டைக் கையில் கொடுத்துவிட்டு "அவ்வப்போது கொஞ்சமேனும் நடக்க வேண்டுமாம், டாக்டர் சொன்னார். பேச்சுக் கூட முடியுமாமே. முயற்சி பண்ணு" என்றான் சுதர்மன்.

எரிச்சலாக முகம் சுளித்து, மறுப்பாகத் தலையசைத்தான் லோகநாதன்.

எதற்கோ, அந்த முயற்சி அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஆனால், முழு மனிதன். இவனிடம் சொல்லத்தான் முடியும். அதற்குமேல் செயல்பாடு அவன் கையில்தான்!

"ஓகே. நீயே யோசித்து முடிவு செய். நான் கிளம்புகிறேன். உனக்கு வேறு ஏதேனும் தேவை என்றால், நர்சிடம் எழுதிக்கொடுத்து என் செல்லுக்குத் தொடர்பு கொள்ளச் சொல்லு. வரட்டுமா?" என்றவனுக்குப் பதிலாகத் தலையாட்டிவிட்டு, படிக்கப் போவதின் அறிகுறியாக லோகன் ஒரு புத்தகத்தை எடுக்க, ஓரளவு நிம்மதியடைந்த மனதோடு சுதர்மன் கிளம்பினான்.

மருத்துவமனையைக் கடக்கும் வரைதான். அவன் லோகநாதனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தது! அங்கிருந்து



வெளியே காலடி எடுத்து வைத்ததுமே, அடடா, இவ்வளவு நேரம் ஆகிவிட்டதே.. மதுவந்தி அந்த சூப்பர் மார்க்கெட்டில் வேண்டியதை வாங்கிக்கொண்டு போயிருப்பாளோ என்று அவன் மனம் அலைபாயத் தொடங்கிவிட்டது!

என்ன இது? நானா, ஒரு பெண்ணைப் பற்றி இவ்வளவு நினைக்கிறேன் என்று சுதர்மன் தனக்குள்ளேயே வியந்தபோதும், அவனது கால்கள் வேகமாகவே நடந்து, அவனை அந்த சூப்பர் மார்க்கெட்டுக்குள் கொண்டு சேர்த்தன.!

அங்கே அவன் கண்ட காட்சி!

ஜென்மத்துக்கும் மறக்காது என்று நினைக்கும் போதே, அவனது உதடுகள் புன்சிரிப்பால் விரிந்தன.

வேலை முடிந்து வீட்டுக்குச் செல்லும்போது, தேவையான காய்கறி வாங்கிச் செல்வது, மதுவந்திக்கு வழக்கம் போலும் என்று எண்ணியவாறு அவளைப் பார்த்தவனுக்குச் சிரிப்பை அடக்குவது சிரமமாகிப் போயிற்று.!

பக்கத்தில் இருந்த பிரிக்கப் படாத காய் மூட்டை ஒன்றின் மீது, பாலிதீன் பை ஒன்றை லேசாக விரித்து வைத்து ஒரு கையால் பிடித்தபடி, மறுகையால், இளம் பீன்ஸ் காய்களைப் பொறுக்கிப் போட்டுக் கொண்டிருந்தாள் மதுவந்தி.

வேடிக்கை என்னவென்றால், பையின் கீழ்ப்புறம் பாதி சரியாக ஒட்டாமல் திறந்திருந்ததால், அவள் காயைப் பொறுக்கிப் போடப் போட, ஓட்டை வழியே, ஒவ்வொன்றாகக் கீழே விழுந்துகொண்டே இருந்தது!

மூட்டை மீது வைத்திருந்ததால், கையிலிருந்த பையின் கனம் கூடுதல் ஆகாததை அவள் கவனிக்கவும் வழியில்லை! அல்லது, வேறு யோசனையாக இருந்தாளோ?

பாவம், எவ்வளவு நேரம் பொறுக்கித் தரையில் போடுவாள், அருகில் போய்ச் சொல்லலாம் என்றெண்ணி, அவன் ஓர் எட்டு எடுத்து வைத்தபோது, தேவையான அளவு எடுத்து முடித்தாயிற்றா என்று பார்ப்பவள் போல, மதுவந்தி பையைத் தூக்கிப் பார்த்தாள்.

கனமற்றுப் பை உயரவும், ஒரு கணம் திகைத்து நோக்கியவளுக்கு உடனே விஷயம் விளங்கிவிட, சட்டெனச் சிரித்துவிட்டாள்!

ஓட்டைப் பையை வைத்துவிட்டார்களோ என்று அவள் எரிச்சல் பட்டிருக்கலாம்! இதைக் கவனியாமல் இருந்ததற்காக தன்மீதே கோபப்பட்டிருக்கலாம்! நேரம் வீணாகிவிட்டதே என்று வருத்தமும் பட்டிருக்கலாம்!

எதையுமே தப்பு சொல்ல முடியாதுதான்.

ஆனால், பொறுக்கிப் பொறுக்கி எடுத்துத் தரையில் போட்ட தன் அசட்டு வேலையை உணர்ந்[illegible]

12.02.2009 00:15



விதமே, சுதர்மனை வெகுவாகக் கவர்ந்தது!

இவளோடான வாழ்க்கை, யாருக்கும் சந்தோஷமானதாக இருக்கும்! சின்னச் சின்ன அசௌகரியங்களுக்காக எதிர்மறை உணர்ச்சிகளைக் காட்டி, தானும் வருந்தி, மற்றவர்களையும் வருத்த மாட்டாள்!

மதுவந்தியைப் பற்றிப் பாராட்டுதலாக நினைக்கும்போதே, தன்னந் தனியாக நின்று சிரிப்பதை யாரும் கண்டுவிட்டார்களோ என்று, அவசரமாகச் சுற்றிப் பார்த்தாள், அவள்.

வேகமாகச் சுழன்ற பார்வை சுதர்மனைச் சந்திக்கவும், அவளது முகத்தில் வழிந்த அசட்டு நகை, அவனுக்கு இன்னமும் சிரிப்பூட்டியது!

புன்னகையோடு மதுவந்தியை அணுகி "எடுக்கவோ, கோக்கவோ' என்று படித்திருக்கிறேன்! ஆனால், அது மேகலையில் இருந்து விழுந்த முத்துக்களை! இந்தக் காய்களை என்ன செய்வது என்று தெரியவில்லையே! பொறுக்கி எடுத்த பிஞ்சுக்கள்! அள்ளவா? தள்ளவா?" என்று கேலிக் குரலில் கேட்டான்.

அதற்குள் அவளும் சுதாரித்துக் கொண்டு "பரவாயில்லையே, மதுரைத் தமிழ் துள்ளி விளையாடுகிறதே!" என்று கிண்டல் குரலில் கூறிவிட்டு, "தள்ளி விடாதீர்கள்.. வீணாகிவிடும். வேறு பை எடுத்துவந்து அள்ளத்தான் வேண்டும். வீட்டுக்குப் போய் நன்றாகக் கழுவிக் கொள்ளலாம்" என்று அருகில் இந்த அடுக்கில் இருந்து, இன்னொரு பையை எடுத்தாள்.

ஒரு தரத்துக்கு இருமுறையாக, அது நல்ல பைதான் என்று உறுதிப்படுத்திக்கொண்டு, கீழே கிடந்த காய்களைக் கவனத்துடன் எடுத்துப் பையில் போடப் போட, இருவருக்கும் சிரிப்புத்தான்.!

காய்களைச் சேகரித்து முடித்ததும், தன் போக்கில் பில் போடத் திரும்பியவள் நின்று, சுதர்மனைக் கேள்வியாய் நோக்கி "நீங்கள் இன்னும் ஒன்றும் வாங்கவில்லையே! என்ன வாங்க இங்கே வந்தீர்கள்?" என்று கேட்டாள்.!

ஒருகணம் திகைத்து விழித்தான், அவன்.

உன்னைப் பார்க்க என்றா சொல்ல முடியும்?

இப்போது அசடு வழிவது அவனது முறையோ?

இயன்றவரை முகத்தை இயல்பாக வைத்துக்கொண்டு, அவசரமாக யோசித்து "ப..பழங்கள்! இ..இரவில் ஏதாவது ப...பழங்கள் உண்பது பழக்கம்!" என்று சமாளித்தான் அவன்.

கண் முன்னே இந்த பழ அடுக்குகளைக் கவனியாதவன் போல "இங்கே பழங்கள் எந்தப் பக்கம் இருக்கும்?" என்று சுற்றுமுற்றும் தலை திருப்பித் தேடினான்.

"இதோ, இங்கேயே!" என்று பழ அடுக்குகளைக் கைகாட்டிய



போதும், சற்று யோசித்து, "நீங்கள் தங்கியிருக்கும் ஹோட்டலில் ஒவ்வோர் அறையிலும் ஒரு மினி ஃப்ரிஜ்ஜில் தண்ணீரும், மேஜைமேல் ஒரு கூடையில் பழங்களும் இருக்கும் என்பார்களே!" என்று கேட்டு, மறுபடியும் அவனுக்கு வியர்க்க வைத்தாள் மதுவந்தி!

முன்தினம், அந்தப் பழங்களில் இரண்டை உண்டது காலம் கடந்து, அவனுக்கு நினைவு வந்தது! 'ஷேவிங் கிரீம், பற்பசை'... இப்படி ஏதாவது சொல்லியிருக்க வேண்டும்! அதிகப்படியாக வாங்கினாலும், பிறகு பயன்படுத்தியிருக்கலாம்!

இப்போது வேறு வழியின்றி "அது... எனக்குச் சற்று வித்தியாசமாய்.. மாதுளை இருந்தால் வாங்கலாம் என்று வந்தேன்" என்று சொல்லிவிட்டு, சொன்னதற்காகவே இரண்டு மாதுளம் பழங்களையும் வாங்கிக் கொண்டான் சுதர்மன்.

"இங்கத்திச் சிறப்பாக என்று வேறு என்ன கிடைக்கும்?" என்று அவன் விசாரிக்க, "பச்சை முந்திரி, கொட்டையாகச் சுட்டு, உடைத்து எடுக்காமல், பச்சையாகவே பருப்பை எடுத்து வைத்திருப்பார்கள். சில வகைச் சமையலுக்கு நன்றாக இருக்கும். வாங்கிப் போய் மனைவியிடம் கொடுங்கள். சமைத்துத் தருவார்கள்" என்றாள் மதுவந்தி!

"அடடா! இங்கே சிறப்பானது என்கிறீர்கள்! ஆனால், அநியாயமாய், வாங்க முடியாமல் பண்ணி விட்டீர்களே!" என்று வருத்தமாகக் குறைப்பட்டான் அவன்.

விற்புருவங்களை லேசாகச் சுருக்கி "நானா? எப்படி?" என்று கேட்டாள் அவள்.

"என்ன செய்வது? வாங்கிப் போய் அம்மாவிடம் கொடு..., சமையல்காரம்மாவிடம் கொடு என்றிருக்கலாம்! அதைவிட்டு, மனைவியிடம் கொடு என்றீர்களே! கொடுப்பதற்கு மனைவி இல்லாதபோது, எப்படி வாங்குவதாம்?" என்று கவலை காட்டி சுதர்மன் சொன்ன விதத்தில், மதுவந்திக்கு அடக்க மாட்டாமல் சிரிப்பு பீறிட்டது!

திருமணமே ஆகவில்லையாமே! அவனைப் போய் மனைவிடம் கொடு என்றால்...

யாரோ ஓரிருவர் திரும்பிப் பார்ப்பது தெரியவும், அவளது சிரிப்பு சட்டென நின்றது!

பொது இடத்தில் நின்று, இப்படிச் சத்தமாகச் சிரித்தால், எல்லாரும்தான் திரும்பிப் பார்ப்பார்கள்!

அதுவும், அவளது வாங்கல் வேலை முடிந்து, எப்போதோ கிளம்பியிருக்க வேண்டியவள்!

போவதற்காக ஓர் எட்டு எ[illegible]

நண்பனுக்கு உதவுவதற்காக வந்து, பழக்கமற்ற ஊரில் தனியாக

12.02.2009 00:15

மாட்டிக்கொண்டு கிடக்கிறான்! போரடித்துப் போயிருக்கும்!

இந்த ஊர்க்காரியாக இருந்துகொண்டு, உதவி பண்ண வேண்டாமா?

சூப்பர்மார்க்கெட்டின் நுழை வாயிலின் ஒரு புறத்தில், கேக் தினுசுகள், பெரிய சிறிய சமோசாக்கள், பர்கர் என்று சுவையான சிறு தீனி வகையறாக்கள் நல்ல விதமாகத் தயாரித்து, சுத்தம், சுகாதாரமாக வைத்திருப்பார்கள்.

சுதர்மனை அங்கே அழைத்துச் சென்று, அவனுக்குப் பிடித்த சிறு சமோசாப் பாக்கெட் இரண்டை வாங்கி, ஒன்றை அவனிடம் கொடுத்தாள், மதுவந்தி.

"நன்றாக இருக்கும். சாப்பிட்டுப் பாருங்கள்!" என்று தன்னதைப் பிரித்து உண்டவாறு, "இங்கே பல நல்ல திரையரங்குகள் இருக்கின்றன. எல்லா மொழிப் படங்களும் ஓடுகின்றன. தஞ்சைப் பெரிய கோவில் பார்த்துவிட்டீர்களா? இல்லை என்றால், கண்டு மகிழ அருமையான இடம்! அப்புறம், கல்லணை..." என்று சொல்லிக் கொண்டே போனவளை, "...கரிகால் சோழன் கட்டியது!" என்று இடையிட்டுச் சொன்னான், சுதர்மன்.

சற்றுத் திகைத்துவிட்டு, மெல்ல முறுவலித்தாள், மதுவந்தி "பாவம், போரடித்துப் போயிருப்பீர்களே என்று சொன்னேன்" என்று விளக்கம் கொடுத்தாள்.

"ஆனால், அதே நல்ல எண்ணம், நான் தங்கியிருக்கும் ஹோட்டல் நிர்வாகத்துக்கும் இருக்கும் போலும்! சற்று அதிகமாகவே! அறையில் குறிப்பேடுகளை வைத்திருப்பதோடு, காலையில் அறை சுத்தம் பண்ண வருகிற ஆளிலிருந்து, அங்குள்ள அத்தனை பேரும், உலா ஏற்பாடு பண்ணித் தர துடியோ துடி என்று துடிக்கிறார்கள்!" என்றான் அவன், கிண்டல் குரலில்.

"நானும் சேர்ந்து இன்னும் அதிகமாகப் போரடித்துவிட்டேன் என்று சொல்லுங்கள்"

"ஊகும்! வியாபார நோக்கோடு சொல்வதற்கும், உண்மையான அக்கறையோடு கூறுவதற்கும், வேறுபாடு இருக்கிறதல்லவா?" என்று அவன் நிறுத்தியபோது, ஏனோ அவள் முகம் கதகதத்தது.!

அன்னியமான ஆண்மகன்! அக்கறை இருப்பதாக எப்படி ஒத்துக் கொள்வது? அது உண்மையாக இருந்தாலும்?

தொடர்ந்து "அத்தோடு, சிலர் என்ன பேசினாலும், கேட்பதற்குச் சலிப்பே தட்டாது!" என்றுரைத்து, அவளது முகச் சிவப்பை மேலும் அதிகப்படுத்தினான் சுதர்மன்.

இதற்கு மேல் நின்று பேசுவது தவறு என்று தோன்றியது மதுவந்திக்கு!

அவனுக்கு இன்னும் உரிமை எடுக்கத் தூண்டுதலாகிவிடலாம்!



சமோசா வாங்குவதற்குத் தோதாக அருகில் இறக்கி வைத்திருந்த காய்கறி, மற்றும் பொருட்கள் அடங்கிய பையை எடுக்கும் பாவனையில் முகத்தை ஓரளவு மறைத்து சமாளித்து, "இனி நான் கிளம்ப வேண்டும், மிஸ்டர் சுதர்மன். நாளை மருத்துவமனையில் பார்க்கலாம்" என்று கிளம்பினாள்.

அவன் தடுக்கவில்லை.

ஆனால், கூடவே நடந்தபடி "நான் ஒன்றும், உங்களுக்குக் கோபமூட்டிவிடவில்லையே, மதுவந்தி?" என்று தணிந்த குரலில் கவலையோடு விசாரித்தான்.

கோபமா?

பார்வையில் கேள்வியை உணர்ந்து "திடுமெனக் கிளம்பிவிட்டீர்களே!" என்று காரணம் சொன்னான் அவன்.

"அதெல்லாமில்லை, சுதர்மன் சார்! வீட்டுக்கு அதிகத் தாமதம் ஆகிவிடக் கூடாதில்லையா? அதுதான்.!" என்றாள் அவள் சமாதானமாக.

தலையசைத்துச் சிரித்தான் சுதர்மன். "பாருங்களேன்! மருத்துவர்களுக்கும் வீடு, குடும்பம் இருக்கும் என்பதே மறந்து போயிற்று! வீட்டில்...." என்றவனின் முகம் மாறியது.

பெயருக்கு முன், மிஸ், மிசஸ் என்று தெளிவாகப் போடுவதுதானே? அதென்ன, எம்எஸ் என்று பொதுவாக எழுதி அறுப்பது?

"வீட்டில் கணவர் கோபப்படுவாராக்கும்?" என்று கேலி போலக் கேட்டான் சுதர்மன்.

அவளுக்கு உள்ளூரச் சிரிப்பே! ஒரு பேச்சுக்கு மனைவி என்றால், அதைப் பற்றிச் சிரித்தான் தானே? இருக்கட்டும்

"தெரியவில்லை!" என்றாள் சுருக்கமாக அவள்.

"என்ன தெரியவில்லை?"

"கோபப்படுவாரா, இல்லையா என்று தெரியவில்லை"

"தாமதமானதற்காகக் கணவர் கோபப்படுவாரா இல்லையா என்று கூடத் தெரியாதா? அது கூடத் தெரியாமல், என்ன மாதிரி மனைவி நீ?" என்று ஆத்திரமாகக் கேட்டான் சுதர்மன்.

"அதெப்படித் தெரியும்?"

"எப்படி... தெரியுமா? இதற்கெல்லாம் சோதனைச் சாலையில் லிட்மஸ் டெஸ்டா பண்ண முடியும்? பொறுப்புள்ளவரா? நம்பிக்கை உடையவரா? மருத்துவத் தொழில் பற்றி அறிந்தவரா... இதெல்லாம் வைத்து ஊகிக்க முடியாதா? அந்த அளவு ஒருவர் குணத்தை, அதுவும் கணவர் குணத்தை உன்னால் அறிய முடியாதா?" என்று எரிச்சல் பட்டான் அவன்.

"முடியும்.. முடியும்! ... ...லாம் முடியும்தான்! ஆனால்..." என்று ...



"என்ன ஆனால்?" என்று எரிச்சல் மாறாமல் கேட்டான் அவன்.

"வந்து... அதாவது... கணவர் என்று ஒருவர் வந்த பிறகுதானே, அதையெல்லாம் கண்டு பிடிக்க முடியும்? அதற்கு முன் கேட்டால்... எப்படித் தெரிந்து சொல்ல முடியும்?" என்று கேட்டுக் கண்ணால் சிரித்து வேகமாக விலகி நடக்கலானாள் அவள்.

புரிந்து கொண்டு, மிரட்டுவது போல "ஏய்... நீ..." என்றவன் மேலே பேச மாட்டாமல் நகைக்கலானான்.

நாலெட்டு நடந்தபின், அவள் திரும்பிப் பார்த்தால், அப்போது சுதர்மன் சிரித்துக் கொண்டுதான் இருந்தான்.

அவனுக்கும் சிரிப்பை நிறுத்த முடியவில்லை போல!

விரிந்த முறுவலோடு கையாட்டி விட்டு, அருகில் வந்த ஆட்டோவை நிறுத்தி ஏறினாள் மதுவந்தி.!

மறுநாள் மருத்துவமனையில் மதுவந்தியைப் பார்த்ததுமே, அவளிடம் மன்னிப்புக் கேட்டான் சுதர்மன்.

"எதற்கு?" என்று விழி விரியக் கேட்டாள் மதுவந்தி.

"பெரிய டாக்டர், என்பதை மறந்து, நீ, என்று நேற்று ஒருமையில் பேசிவிட்டேன்"

"நிறையத் திருத்தங்கள்! நான் இன்னும் பெரிய டாக்டர் ஆகவில்லை! அடுத்து, டாக்டருக்கும் நட்பு, உறவு, குடும்பம் இருக்கலாம் அல்லவா? அல்லது, எல்லோருக்கும் அவள் 'டாக்டர்' மட்டும்தானா?"

சொன்னதுமே, மனம் குழம்பிப் போயிற்று, அவளுக்கு!

அதிகப்படி நெருக்கம் காட்டுவது போலப் பேசிவிட்டாளோ?

அவனைத் தப்பாக எண்ணுவானோ என்று, மதுவந்தி உள்ளூரக் கலங்கும்போதே, அவன் பேசினான்.

"ஆனால், நட்பு, உறவு, குடும்பம் எல்லாம் மதுவந்தி என்று நீளமாகவா அழைப்பார்கள்? அடிக்கடி வேகமாக அழைப்பதற்கு வசதியாக 'மது' என்று அழகாகச் சுருக்கிவிட மாட்டார்களா? என்னை சுதா, தர்மா என்றெல்லாம்தான் உன் போல நண்பர்கள் அழைப்பது!"

இது மிகவும் அதி வேகம்தான்!

யாரோ ஒருவர், சந்தித்து இரண்டு நாட்களுக்குள் மது என்பதற்கு அனுமதி கொடுப்பதா?

பிரச்சினை என்னவென்றால், அவன் அப்படிக் கூப்பிட்டால் நன்றாக இருக்கும் என்று, அவளது மனமே சிபாரிசு செய்ததுதான்!

மறுக்க மனம் வரவில்லை! ஆனால், ஒத்துக்கொள்வதோ, ரொம்பவும் அதிகப்படி!

பதில் சொல்ல முடியாமல் அவள் தயங்கி நிற்கையில் "ஓ! இங்கேதான் நிற்கிறாயா?" என்று கேட்டபடி மாலி வந்தாள்!

"உன் முன் பல் 'தி இம்ப்ளான்ட்' உன்னைத் தவிர யாரிடமும்



பல்லைக் காட்ட மாட்டானாம்! என்னமோ, இங்கே வேறு யாரும் டாக்டரே இல்லை போல எண்ணம்! உடனே போய்ப் பார் தாயே! ஆள் வசதியுள்ளவன் போலத் தெரிகிறது! புகார் ஏதும் பண்ணி வைத்தான் என்றால், பெரியவர் நம்மை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவார்!" என்றாள் எரிச்சலோடு.

அதே எரிச்சலோடு "இந்த நீலிமா இன்னும் வந்து தொலையவில்லையா? அதை வேறு பார்க்க வேண்டுமா?" என்று வரவேற்பில் வந்து நின்றவள், சுதர்மனைப் பார்த்து முறுவலித்து, "உங்களுக்கு என்ன சார்?" என்று அவனிடம் கேட்டாள்.


"எனக்கு ஒன்றும் இல்லை டாக்டர்!" என்று சுதர்மன், அவளுக்குப் பதில் சொன்னான்தான்.!

ஆனால், கூடவே மதுவந்தியிடம் ஒரு முறுவலோடு அவனோடு செல்லவும், மாலியின் மனம் கொதித்தது!

"அதெப்படியோ தெரியவில்லை! எல்லா ஆண்களையும் கண்டு விரலில் முடிந்து வைத்துக் கொள்கிறாள்!" என்றாள் தாழ்ந்த குரலில், ஆனால் கிட்டத்தட்டத் தெளிவாகக் கேட்கும் வண்ணம்!

என்ன பேச்சு, இது?

# 4 வாழும் முறைமையடி



மாலி எப்போதுமே, சற்று அதிகம் பேசுகிறவள்தான். பேச்சில், கோபமும், குறைப்படுதலும் நிறையவே இருக்கும்!

யார் மீதாவது!

அவளுடைய அலெக்சின் ஓட்டை வாயினால், இப்போது பெரும்பாலும் மதுவந்தியின் மீதே, அவளது ஆத்திரம் பாய்ந்து கொண்டிருந்தது.!

வேலை கற்க வந்திருக்கிறோமே தவிர, வம்புச் சண்டையிட அல்ல என்று, பொதுவாக மதுவந்தி ஒதுங்கிப் போய்விடுவாள்.

அத்தோடு அந்த அலெக்சும், வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருக்கலாம். தன் காதலன், இன்னொருத்தியை அழகி என்றால், யாருக்குத்தான் எரிச்சல் வராது என்று அவள் நினைத்தது இன்னொரு காரணம்.

ஆனால், இன்று சுதர்மனின் காது கேட்க, மாலி பேசிய வார்த்தைகள், மதுவந்தியை அதிர வைத்துவிட்டன.

அவனைப் பற்றி, அவன் என்ன நினைப்பான்? யாரைப் பார்த்தாலும் இளிக்கிற ரகம் என்று எண்ண மாட்டானா?

சும்மாவே, அவனிட... ...பேசிவிட்டோமோ



12.02.2009 00:15

என்று அவள் சற்று முன்தானே தவித்துத் திண்டாடினாள்! அதற்குள் இப்படி ஒரு பேச்சா என்று மனம் கலங்கிப் போயிற்று அவளுக்கு!

அவனும் ஆவலாகப் பேசியது கூட, இனி, அவளது தூண்டுதலில் பேசியதாக ஆகிவிடும்!

இனிமையாகத் தொடங்கியதை இந்த மாலி, அனியாயமாகக் கெடுத்துவிட்டாளே!

இல்லை என்றான் சுதர்மன்.

"பாவம், அந்த டாக்டர் ஆத்திரத்தில் பேசிவிட்டாள்! லோகனின் மறுப்பு எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும்! அடுத்தவர் மனம் பற்றி நினைப்புக் கூட அவனுக்கு வராது! அவள் சற்றும் அறியாத ஒன்று! அந்த எரிச்சலோடு..." என்று இழுத்தவன், சட்டைக் காலரைத் தூக்கி விட்டு, புருவம் உயர்த்திப் புன்னகை செய்து "அங்கிருந்த ஒரே, இன்னோர் அழகனும் உன்னையே தொடரவே... பொறாமையில் வெந்து கொட்டியது! அதனால், பொருட்படுத்தவே தேவையே இல்லாதது!" என்று விளக்கம் கொடுத்தான்.

மதுவந்திக்கு ஆறுதலாகத்தான் இருந்தது!

கூடவே, அவனது புருவம் உயர்த்திய பெருமைப் புன்னகை நினைவு வர "அங்கிருந்த இன்னோர் அழகனா?" என்று வினவியவள், தேடுவது போலச் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கினாள். "என்ன தேடியும், அப்படி யாரையும் காணவே இல்லையே! ஒருவேளை, நீங்கள் எங்கேனும் பார்த்தீர்களா?"

"பல் மருத்துவமனையாகத் தொடங்கிவிட்டு, இங்கே கண் சிகிச்சைப் பிரிவையும் ஏன் தொடங்கினார்கள் என்று இப்போதல்லவா புரிகிறது! ஆறடி உயரத்தில் அருகில் நிற்பதே தெரியாதபோது... கடவுள்! முதலில் போய் கண்ணைப் பரிசோதித்துவிட்டு வாம்மா! அல்லது, பல்வலிக்காரனுக்குப் பதிலாகப் பக்கத்தில் நிற்பவனின் பல்லைப் பிடுங்கி விடப் போகிறாய்!" என்று அவளுக்கு ஆலோசனை கூறினான் சுதர்மன்.

சிரிப்பை அடக்கிக்கொண்டு, புருவத்துக்கு நேராகக் கையை வைத்து, அவன் முகத்தைக் கூர்ந்து பார்ப்பது போலப் பாவனை செய்தாள் மதுவந்தி!

"அடடா! அப்படித்தானே, ஆகிவிட்டது போல! உங்களுக்குப் பதிலாக, அந்த லோகநாதனுக்குப் பல்லை வைத்துவிட்டோம் போல இருக்கிறதே! உங்கள் வாயில் பல்லே இல்லை போல என் கண்ணுக்குத் தெரிகிறது! ஆனாலும், அப்படி எல்லாப் பல்லையுமா தட்டி விட்டார்கள்? பா...வம்" என்று அவள் பரிதாபப்பட்டு முடிக்கும் போது, இருவருக்குமே சிரிப்பு வந்துவிட்டது!

அடக்க மாட்டாத சிரிப்பு!

நகை முகத்துடன் இருவரும் அறையினுள் உள்ளே சென்றால்,



அங்கே லோகநாதனின் முகம் கடுத்திருந்தது

பார்த்ததுமே இளகி "இன்னும் வலி இருக்கிறதா, மிஸ்டர் லோகநாதன்?" என்று பரிவுடன் அவனிடம் விரைந்தாள் மதுவந்தி.

எங்கேனும் வீக்கம் இருக்கிறதா என்று ஆராய்ந்துவிட்டு, சார்ட்டை எடுத்துப் பார்த்தாள்.

"ஆன்டிபயாட்டிக்' கொடுத்திருக்கிறார்களே! சீக்கிரம் சரியாகிவிடும் சார். உடம்பில் பட்டிருக்கும் மற்ற காயங்களின் பிரதிபலிப்பாகவும் இருக்கலாம். இன்னும் வலி அதிகமாக இருந்தால் சொல்லுங்கள். வலி நிவாரணி ஒரு டோஸ் போட்டு விடலாம்! இன்னும் கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டு போடுவோமா? அல்லது வலி தாங்க முடியவில்லையா?"

'சற்றுப் பொறுத்துப் பார்க்கலாம்' என்று பக்கத்தில் இருந்த குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் காட்டினான் லோகநாதன்.

படித்துவிட்டு "ஓகே!" என்றவள் தொடர்ந்து, "உங்களால் பேச முடியும், லோகநாதன். தைரியமாகப் பேசிப் பாருங்கள். உள்ளே ஒன்றும் ஆகிவிடாது! வயர் கொண்டு உரிய இடத்தில் அழுத்தமாகப் பிடித்திருப்பதால், பல்லுக்கு ஒரு பாதிப்பும் நேராது! கவலை வேண்டாம்" என்று இதமான குரலில் எடுத்துச் சொன்னாள் மதுவந்தி.

பல் மேல் இருக்கும் வயர் தெரியும் என்பதால்தான், லோகன் பேசத் தயங்குகிறான் என்பது, சுதர்மனுக்குத் தெரிந்ததே. ஆனால், அதைச் சொல்வதும் சரியல்ல என்று எண்ணிப் பேச்சை மாற்றினான் அவன்.

"என் நண்பனை எல்லோரும் 'லோகன்' என்று அழைத்தே பழக்கமா, நீ லோகநாதன் என்றால், யாரையோ என்று நினைத்துச் சும்மா இருந்துவிடப் போகிறான்!" என்றான்.

முன்தினம் லோகனே எழுதிக் காட்டியதுதான். அதை எடுத்துச் சொல்லி, 'லோகன்' என்று அழைப்பதற்கு ஏற்பாடு செய்தால் சந்தோஷமாகி விடுவான் என்று நினைத்தால், அப்போதும் லோகனின் முகம் கடுப்பாகவே இருந்தது!

"ஐயோ, வேண்டாம்பா.! நான் லோகன் என்றே அழைத்து விடுகிறேன்! உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே, லோகன்?" என்று மதுவந்தி அவனிடம் கேட்க, முதல் தடவையாக முகம் மலர்ந்து தலையாட்டினான் லோகநாதன்.!

"பத்து மணிக்கு பெரிய டாக்டர் ரவுண்ட்ஸ்... எல்லா நோயாளிகளையும் ஒரு தரம் சுற்றிப் பார்க்க வருவார், லோகன். அதற்குள் நர்ஸ் வந்து, உங்களுக்குத் தேவையானது எல்லாம் செய்வார்கள். உடம்பு துடைத்து, காயங்களுக்கு மருந்திட்டு... எல்லாம்! நீங்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும். அல்லது பாவம், நர்சுக்குத்தான் திட்டு [illegible] லோகன்?" என்று நயந்த குரலில் கேட்டு [illegible] மதுவந்தி!



அவளது தலையசைவுக்காகக் காத்திருந்தவள் போல, சுத்தம் செய்வதற்கான உபகரணங்களுடன் ஜூனியர் நர்ஸ் உள்ளே வர, "அப்புறமாக வருகிறேன்!" என்று விடைபெற்றுச் சென்றாள் மதுவந்தி!

"சார், நீங்கள் சற்று..." என்று நர்ஸ் கேட்கத் தேவையில்லாமல், மதுவந்தியைத் தொடர்ந்து, சுதர்மனும் வெளியேறிவிட்டிருந்தான்.

லோகநாதனின் கடுத்த முகத்தைப் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் வேலையைத் தொடங்கினாள் நர்ஸ். இந்த மாதிரி ஒத்துழைப்பு தராத நோயாளிகளுக்கு பணி புரிவது எவ்வளவு கடினம் என்பது, அவள் அறியாதது இல்லையே!

பின்னோடு சுதர்மன் வருவதைப் பார்த்து மதுவந்தி நின்றுவிட, ஓர் எட்டில் அவளை நெருங்கி "என்ன? சுதாவா? தர்மாவா?" என்று புன்னகையோடு வினவினான் அவன்.

உனக்குப் பிடித்தபடி என்று சொல்லிவிடத் துடித்த நாவை, மதுவந்தி அடக்கினாள்.!

அவன் நண்பனுக்காக வந்தவன். ஒரு பொழுதுபோக்காக ஏதோ சொல்லி பேசலாம். அல்லது, மருத்துவமனையில் டாக்டர், நர்ஸ் என்றால் சிறு பிரமிப்பிலும் பேசலாம். இதை நம்பி, அவள் தன் வசமிழப்பது நல்லதல்ல என்று தனக்குத்தானே எச்சரித்துக் கொண்டாள்!

நடக்கக் கூடியதுதானே?

அத்தோடு, சுதர்மனைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்?

இப்போது மனதை அலைபாய விட்டுவிட்டுப் பிறகு வருந்தும்படி ஆகிவிடக்கூடாது!

எனவே "யோசித்துதான் முடிவு செய்ய வேண்டும்!" என்றாள் அவள் மெதுவாக.

ஆனால், அவன் ஏமாற்றத்தை வெளிப்படையாகக் காட்டி "என்ன யோசனை, மதுவந்தி? எதற்கு யோசனை? சற்று முன், என் நண்பனை 'லோகன்' எனவில்லையா? நான் மட்டும் என்ன, வேறுபாடு" என்று கேட்டான்.

இது அவளுக்குப் பழக்கமான விஷயம்!

தயக்கமின்றிப் புன்னகை செய்து "அவர் நோயாளி, சுதர்மன். உடலில் வேதனை உள்ளவர். மனநிலை நன்றாக இருப்பதற்காகச் சிலபல சலுகைகள் அளிப்பதுதான். உங்களைப் பார்த்தால்...." என்று அவனை ஏற இறங்கப் பார்த்தாள். "ஊகூம்! உங்களுக்கு ஒருவித சுகக்கேடும் இருப்பதாகத் தெரியவில்லையே! பிறகு எதற்குச் சலுகைகள் கொடுப்பது?" என்று அவள் ஆணித்தரமாகக் கேட்ட விதத்தில் "அம்பேல்!" என்று கைகளை உயர்த்தினான் சுதர்மன்.

"குடும்பத்தில் ஒரு டாக்டரம்மா இருப்பதில் வரக் கூடிய பிரச்சினைகள் பற்றி, இப்போதே தெரிந்து கொள்வது நல்லதுதான்!



தீர்வுகளையும் கூட முன்கூட்டியே திட்டமிட்டு விடலாம் அல்லவா? ஆனால் ஒன்று, எந்தச் சலுகைக்காகவும் கூட, நான் நோயாளியாகத் தயாரில்லை, அம்மணி!"

கடவுள் அருளால் வேண்டாம் என்று தன் மனம் வேண்டிக் கொண்ட வேகத்தில், மதுவந்தியே திகைத்துப் போனாள்!

எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்று அவள் எப்போதும் நினைப்பதுதான். வருமானத்துக்காக கூட, யாருக்கும் வலிக்க வேண்டும் என்று அவள் எண்ணியதில்லை. ஆனால் இந்தத் தீவிரம்...

அவளது கவனத்தையும் மீறி, சுதர்மன் அவள் மனதில் இடம் பிடித்து விட்டானா?

அவனைப் பற்றி, அவளுக்கு என்ன தெரியும் என்று அறிவு மீண்டும் கேட்டது.

என்ன தெரியாது? ஆள் அழகன். அவளே அண்ணாந்து பார்க்கும் அளவுக்கு, நல்ல உயரம்! சிரிக்கப் பேசுகிறான்.

வசதி உள்ளவன், மற்றபடி, இந்த ஹோட்டலில் தங்க முடியாது!

மதுரையில் ஏதோ தொழில் செய்கிறான்... என்றெல்லாம் மனம் அடுக்கிய விவரங்கள், அவளுக்கே போதுமானதாகத் தோன்றவில்லை!

அத்தோடு, ஜாடைமாடையாக ஏதோ பேசியபோதும், வெளிப்படையாக, தெளிவாக சுதர்மன் எதுவும் சொல்லவும் இல்லையே!

சந்தித்தே இரண்டே தினங்களில், அப்படித் தெளிவாகவும், வெளிப்படையாகவும் அவனாலும் எப்படிப் பேச முடியும் என்று ஒருபுறம் சுதர்மனுக்காக வக்காலத்து வாங்கும்பாதே, ஆனால், இந்த மாதிரி மயக்குப் பேச்சுக்கள் அவனது வட்டத்தில் பழக்கமாக இருக்கலாமே என்றும் உள்ளம் கேட்க, மதுவந்திக்கு தலை சுற்றிவிட்டது!

என்னதான் படித்து, ஒரு பல் மருத்துவராகப் பட்டம் பெற்றுவிட்ட போதும், அவளது பாதுகாப்பான உலகத்தில், இது போன்ற அனுபவம் அவளுக்கு ஏற்பட்டதே இல்லையே!

இதைப்பற்றி யாரிடம் கேட்பது?

இப்படித்தான் என்று வழி நடத்த, அவளுக்குப் பெரியவர்கள் கூட இல்லையே!

அம்மா...

மதுவந்தி திகைத்து நின்ற காரணத்தைத் தவறாக ஊகித்து "சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன், மது! அதற்குள் என்ன பயம்? எங்கள் குடும்பமே ஆரோக்கியம[illegible] என்கிட்டே கூட வராது...

சுதர்மன்.

"அவனுக்கு நோய் என்றால், அவள் கலங்குவாள் என்று எதிர்பார்க்கிறானே!

ஊகூம். இந்த யோசனை இப்போது கூடாது!

பெரு முயற்சி செய்து, சமாளித்து "எதற்கும், நோய் பற்றி அவசியமற்றுப் பேசுவானேன்? லோகநாதனின் வேலை முடிந்து, நர்ஸ் சீக்கிரமாக வந்து விடுவாள். நீங்கள் உள்ளே போய், அவரிடம் பே... பேசிக் கொண்டிருங்கள்!" என்றாள் அவள்.

"ஓ..! சாரிம்மா.! உன் வேலையைக் கெடுத்துக் கொண்டிருக்கிறேன் போல?" என்று அவன் கேட்கும்போதே, "மதுவந்திம்மா, நீங்கள் எங்கே என்று பெரிய டாக்டர் கேட்கிறார். ரூம் தயாரான்னு இன்னும் வந்து சொல்லலையாமே" என்று எடுபிடி பாலு வந்து நின்றான்.

வழக்கமான வேலையைக் கூட மறந்து, இவனுடன் பேசிக் கொண்டு இருந்துவிட்டாளே! என்ன அசட்டுத்தனம்!

இந்த அசட்டுத்தனத்துக்காகப் பின்னர் அவள் கொடுக்க இருக்கும் விலை பற்றிக் கொஞ்சமும் தெரியாத காரணத்தினால், வேகமான ஒரு தலையசைவினால் சுதர்மனிடம் விடை பெற்றுக்கொண்டு, "இதோ!" என்று பாலுவுக்கு முன்னாகப் பறந்தாள் மதுவந்தி!

நல்லவேளையாக, முன்தினம் கிளம்புமுன் நன்கு சுத்தம் செய்து வைத்திருந்தால், டாக்டர் பயன்படுத்தக் கூடிய சில கருவிகள், கையுறை போன்றவற்றை அவர் வருமுன்னரே தயாராக எடுத்து வைத்துவிட்டு, அவருக்காகக் காத்து நிற்க அவளால் முடிந்தது!

அப்போதும், "பாலு வந்து தேடுகிறவரை, எங்கே ஊர் சுற்றிக் கொண்டிருந்தாய்?" என்ற உறுமலைக் கேட்கத்தான் வேண்டியிருந்தது!

"அந்த 'ஒரிஜினல் டென்டல் ரி இம்ப்ளான்ட்' சுத்தம் செய்ய விடாமல் கொஞ்சம் தகராறு செய்தார், சார்! அவரைச் சமாதானப்படுத்தி, நீங்கள் 'ரவுண்ட்ஸ்' வருமுன் நர்ஸ் வேலை முடிக்க ஏற்பாடு செய்யப் போனேன்!" என்று ஓரளவு உண்மைக் காரணத்தையே சொல்லிச் சமாளித்த போதும், தொடர்ந்து "பெரிய பில் என்றாலும், உடனே கட்டுகிறவர், சார்!" என்று அவள் சொன்னதே, தேவராஜனின் வாயை மூடவைத்தது எனலாம்.

"பார்த்தேன்.. பார்த்தேன்! எதற்கும், கடைசி பில் கட்டுகிறவரை, அந்தாளை நல்ல மூடில் இருக்கும்படியாகவே கவனித்துக் கொள்!" என்றார் அவர்.

"ஆனால், சொல்லாமல் கொள்ளாமல் ஊர் சுற்றப் போகாதே! யாரையாவது பதிலுக்கு வைத்துவிட்டுப் போ!" என்று முடித்தார்.

அவரது பேச்சில், பாணியில் மதுவந்திக்கு எரிச்சல்தான்! ஆனால்,



தலைமைப் பதவியில் உட்கார்ந்து இருப்பவரை மறுத்துப் பேச முடியுமா? அல்லது, இப்படித் தவறாக அர்த்தம் தொனிக்கப் பேசாதே என்றுதான் சொல்ல முடியுமா?

வாயை இறுக மூடிக்கொண்டு வேலையைக் கவனித்தாள் அவள்!

சக்ஷன் போடுவதும், ஃபோகஸ் காட்டுவதும், எக்ஸ்ரே எடுப்பதும், சுத்தம் செய்வதுமாக, தனியாக இரண்டு பல் பிடுங்குவதுமாக, அவளுக்கு வேலையும் அன்று சரியாக இருந்தது!

ஓரிரு முறை சுதர்மன் அங்கங்கே கண்ணில் பட்டபோதும், அவள் அருகே சென்று அவன் பேசவே இல்லை.!

அதில் தொடங்குவதுதான். பேச்சு சுவாரசியத்தில் மற்றது மறந்துவிட, ஆபத்தாகி விடுகிறது!

எனவே, அவனை விட்டுத் தூரவே நிற்பது, அவளுக்கு நல்லது.!

குறைந்தது, வேலை நேரம் முடிகிறவரை!

எண்ணியதுபோலவே, மதுவந்தி பிடிவாதமாக இருந்துவிட்டாலும் 'தொலையாப் பகலே' என்பது போல, அன்றைப் பகல் பொழுது மிக நீண்டதாக இருப்பது போல, அவளுக்குத் தோன்றியது!

சுதர்மனுக்கும் இப்படியே தோன்றுமா?

தோன்றியிருக்கிறது என்பது, வேலை முடிந்து, மருத்துவமனைக்கு வெளியே அவள் காலடி எடுத்து வைத்ததுமே, அவளோடு சுதர்மன் வந்து சேர்ந்துகொண்ட விதத்தில் தெரிந்தது!

அன்று அவள் காய் வாங்கி முடித்ததும், சூப்பர் மார்க்கெட் அருகில் இருந்த ஐஸ்கிரீம் பார்லருக்கு, இருவருமாகப் போனார்கள்.

பேச்சுவாக்கில், பல்வேறு விஷயங்களில் இருவரின் ரசனைகளும் ஒத்திருப்பதைக் கண்டுபிடித்து இருவருமே அதிசயப்பட்டனர்.

திடுமென கைக்கடிகாரம் கண்ணில் பட "நேரமாகிவிட்டதே" என்று விழுந்தடித்துக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினாள் மதுவந்தி.

வீட்டில் பாட்டி கண் மூடிப் படுத்திருப்பவள், அப்படியே தூங்கிவிட்டதைக் காணவும் அவளது மனம் சுட்டது!

ரொம்பவும் ஓய்ந்து, பெரும்பாலும், படுக்கையிலேயே நாளைக் கழித்தபோதும், வேலை முடிந்து வரும் பேத்தியிடம் ஓரிரு வார்த்தைகளாவது பேசாமல் அவள் தூங்குவது இல்லை!

இன்று, காத்திருந்து, காத்திருந்து அது வேறு அதிகம் சோர்ந்து தூங்கிவிட்டாள் என்று வருந்தினாள் பேத்தி!

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் தாமதமாக வந்திருக்கிறாளே!

ஆனால், பாட்டியைப் பார்த்துக் கொள்ளும் பக்கத்து வீட்டுப் பின் போர்ஷன் சுந்தரி ஆன்ட்டி வேறு சொன்னாள்.

அன்று முழுவதுமே, [illegible] நினைவு அதிகமாம்! அவனைப் பற்றி [illegible] உடல்நிலையும்

12.02.2009 00:16



மிகவும் அலட்டிக் கொண்டாளாம். அந்த அலட்டலில், பேச்சுக்கு நடுவிலேயே இரண்டு முறை தூங்கிவிட்டாளாம்!

"எனக்கு என்னமோ, பாட்டிக்குச் சத்து அடங்கிக் கொண்டே வருகிறது போலத்தான் தெரியுது. மதும்மா! அந்தத் தண்டபாணிப் பையன் வந்து ஒரு தரம் தலையையாவது காட்டினால், ஏதோ கொஞ்சம் தேறக்கூடும்! ஆனால், எந்த நேரத்தில் தண்டபாணி என்று பேர் வைத்தார்களோ? அவன் வெறும் தண்டமாகவே ஆகிப் போனான்! அவன் நினைப்பிலேயே உங்க பாட்டி, உருகிகிட்டே போகிறாங்க!" என்று வருத்தத்துடன் கூறினாள்.

பாட்டியை எழுப்பிவிடாமல், மெல்ல, அவளது கையைப் பற்றி, நாடித் துடிப்பைப் பார்த்தாள் மதுவந்தி.

பலவீனமாகத்தான் தெரிந்தது!

எழுந்து சென்று, பாட்டியின் மருந்துகள் வைக்கும் அலமாரியைத் திறந்து பார்த்தாள்.

பாட்டியின் உடல்நிலையை மேம்படுத்த என்னென்ன முடியுமோ, அதற்காகக் கொடுக்கக் கூடிய அத்தனை மருந்துகளும், அங்கே இருந்தன.

தன் மருத்துவப் படிப்பையே மறந்து, ஒரு சாதாரணப் பேத்தியாகப் பாட்டியைப் பெரிய பெரிய 'ஸ்பெஷலிஸ்டு'களிடம் காட்டி, அவர்களால் கொடுக்கப்பட்ட, மிகச் சிறந்த மருந்துகள்!

வேளா வேளைக்கு என்று, அவள் எடுத்து வைத்து, சுந்தரி அம்மாளால் தவறாது கொடுக்கவும்படுகின்றன.!

ஆனால், அந்தப் பெரிய மருத்துவர்களே சொன்னது போல, மன வியாதிக்கு மருந்து ஏது?

இருக்கும் ஒரு மகனுக்காக ஏங்கும் இதயம், அவனைக் காணாமல் சோர்கிறது! இதற்கு அந்த மகன் தவிர, யார் என்ன செய்ய முடியும்?

சுந்தரி அம்மாளிடம் சென்று "ஆன்ட்டி, யாரோ உங்கள் சொந்தக்காரர், போலீசில் இருக்கிறவர் மூலமாக மாமாவைத் தேடுவதாகச் சொன்னீர்களே! இன்னும், ஒன்றுமே தெரியவில்லையா, ஆன்ட்டி?" என்று கவலையோடு கேட்டாள்.

"எங்கேம்மா.! இங்கே எங்கேயோ சுற்றுப்பட்டியிலேதான் இருக்கிறான் என்று தெரிகிறது. அங்கே பார்த்தேன், இங்கே பார்த்தேன் என்கிறார்கள். வேலை நேரம் முடிந்ததும், நீ கொடுத்த பணத்தை வைத்துக்கொண்டு, என் அண்ணன் மருமகனும் இதே வேலையாகத்தான் அலைகிறான். ஒரு துப்புக் கிடைத்து, அங்கே போகிறதுக்குள்ளே, தண்டம் இடத்தை மாற்றி விடுகிறானே! தப்பான சகவாசத்தில் என்ன தப்பு செய்தானோ? போலீஸ் என்றதும், கண் காணாமல் போய்விடுகிறான்" என்று அங்கலாய்த்தாள் அவள்.

உள்ளூரக் கணக்கிட்டு "அந்தப் பணம் செலவாகியிருக்கும்.



ஆன்ட்டி. நாளைக்கு இன்னும் கொஞ்சம் வாங்கிப் போங்கள். மாமாவைக் கூட்டி வந்து காட்டினால்தான், பாட்டிக்கு உடம்பு நன்றாக ஆகும்! அதனால், அவரைத் தேடுவதை விட்டுவிட வேண்டாம்" என்றாள் மதுவந்தி!

"என்னவோ, போம்மா..! இந்தத் தண்டத்தாலே, இது வேறு தண்டம் உனக்கு!" என்று பெருமூச்செறிந்தாள் சுந்தரியம்மாள்.

மருந்துச் செலவும் மற்றதும், அவளும் அறிந்தவைதானே?

இன்னமும் வருமானம் என்று சரியாக வரத் தொடங்காத நிலையில், கையிருப்பைக் கரைத்துக்கொண்டு, மதுவந்தி பாட்டிக்காகப் பாடுபடுவதும், சுந்தரி அறிந்ததே!

அந்தப் பரிதாபத்தினால்தான், நேரம் காலக் கணக்குப் பாராமல், மதுவந்தி வந்து சேரும்வரை, அவள் பாட்டிக்குத் துணையிருப்பதும், முடிந்தவரை, வீட்டு வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வதும்!

உலகில் நல்லவர்கள் நிறையத்தான் இருக்கிறார்கள்! இவர்களுள், பெற்ற தாயையே அலட்சியப்படுத்திக் கொண்டு, இந்த மாமா மட்டும் ஏன் இப்படி இருக்க வேண்டும் என்று மதுவந்தி வருந்தினாள்.

நேர் விரோதமாக, சுதர்மன் எவ்வளவு நல்லவனாக இருக்கிறான்!

ரத்தத் தொடர்புகூட கிடையாது! கூடப் பிடித்த நண்பன்! அவனுக்கு விபத்து என்று, வீட்டைத் தொழிலைப் போட்டுவிட்டு, இங்கே தன்னந்தனியாக ஹோட்டலில் கிடக்கிறானே!

அந்த ஹோட்டலில் செலவும் அதிகம் ஆகும்தான்.

ஆனால், பணம் கையில் இருக்கும்போது, செலவைப் பிரச்சினையாக் கருதத் தோன்றாது! அதை விடவும், செய்வதற்கு ஒன்றுமில்லாமல், தனியே போரடித்துக் கிடப்பதுதான் பெரிய துன்பமாக இருக்கும், பாவம்!

ஆனால் இருக்கிறானே...!

சுதர்மன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கக் கூடும் என்று அவனைப் பற்றிய யோசனை ஓட, ஓட, மனம் கனமிறங்கி, பஞ்சு போல லேசாவதை மதுவந்தி உணர்ந்தாள்.

இன்னும் இரண்டு நாட்களிலேயே லோகநாதன் குணமாகிக் கிளம்பும்போது, சுதர்மனும் சென்று விடுவான்தான். அதன்பிறகு, என்றேனும் அவனைச் சந்திக்க முடியுமா என்பதே சந்தேகம்தான்.

என்றாலும், சூழ இருந்து துன்பங்களுக்கு இடையே பாலைவனச் சோலையாக சுதர்மனைப் பற்றிய நினைவுகள் ஆறுதலோடு ஆனந்தத்தையும் அளிக்கவே, அந்த சுகத்தை அவளால் விட முடியவில்லை!

ஆனால், இதே [illegible] என்று மிகவும் விரும்பி, அது முடியாமல், [illegible]களால்,

12.02.2009 00:16

வெறுப்பும் வேதனையுமாக, மதுவந்தி மறுகித் துடிதுடிக்கப் போகிறாள் என்று அப்போது அவளுக்குத் தெரியாது!

## 5 வாழும் முறைமையடி



பின் வரும் காலத்தில் நடக்கப் போவதை முன் கூட்டியே அறிந்துகொள்ளும் திறன் இல்லாததாலேயே, சுதர்மனைப் பற்றிய நினைவிலேயே சுகமாகக் குளிர் காய்ந்து கொண்டிருந்தாள் மதுவந்தி!

லோகநாதன் குணமாகிக் கிளம்பினால், அப்புறம்... என்று மேலே எண்ணிப் பார்க்கவும் முடியாமல் அவள் தவித்ததை ஊகித்து அறிந்தவன் போல "இன்னும் பத்து நாட்களில், லோகனுக்குப் பல்லை இணைத்த வேர்ப் பகுதியில் ஏதாவது பிரச்சினை இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டுமாமே! அங்கேயே கூட பார்த்துக் கொள்ளலாம் என்றார், இவனுக்கு சிகிச்சை செய்த டாக்டர் மனோகரன். ஆனால், நான் எப்படியாவது, லோகனை இங்கேயே கூட்டி வந்து விட வேண்டும் என்று இருக்கிறேன், மது!" என்று மறுநாள் சந்திப்பில் சுதர்மன் கூறினான்.

உள்ளம் துள்ள "நீங்களும் கூட வருவீர்களா?" என்று வியப்பும் ஆர்வமுமாக விசாரித்தாள் மதுவந்தி!

அவனது 'மது' எப்படி இலகுவாகப் பழகிவிட்டது என்று, அது வேறு ஆச்சரியம்!

"நிச்சயமாக!" என்றான் அவன். "தஞ்சைப் பெரிய கோவில், எவ்வளவு சரித்திரப் பிரசித்தி பெற்ற இடம்! அவ்வளவு பெரிய லிங்கமும், நந்தியும், கலை நேர்த்தியுடன் கூடிய கோபுரமும்... என்னைக் காந்தமாக அல்லவா இழுக்கின்றன! அடிக்கடி அவைகளை வந்து பாராமல், என்னால் எப்படி இருக்க முடியும்?" என்று கேட்டு, அவன் கண்ணால் சிரிக்க, அவளும் அவனோடு கூடச் சேர்ந்து நகைத்தாள்.!

அப்புறம் தனியாகவும் பொங்கிப் பொங்கி நகைத்தாள்!

தஞ்சைப் பெரிய கோவில், அவனைக் காந்தம் போல இழுக்கிறதாமா?

இழுக்கும்... இழுக்கும்... என்று எண்ண எண்ண, மனம் சிறகடித்தது!...

மதுரை மீனாட்சியம்மன் கோவிலைப் பார்க்க அவளுக்கும் ஆசையாகத்தான் இருந்தது!

ஆசை நிறைவேற அந்த தெய்வம் அல்லவா, அருள் புரிய வேண்டும்!



அதற்குள் எப்படியாவது மாமாவும் வந்துவிட்டால்... பாட்டிக்கும் குணமாகி...

சீட்டுக்கட்டு மாளிகையாக, அவளுள் அழகழகாக அரண்மனைகள் எழும்பி அவளை மகிழ வைத்தன!

உள்ளூர ஓர் எல்லை வைத்திருந்ததால், சுதர்மனை நேரில் சந்திப்பதும், கேலியும் கிண்டலுமாகப் பேசுவதுமான கற்பனைகள் தான். ஆனால், அவைகளே அவளுக்கு எல்லையற்ற ஆனந்தத்தை அளித்தன.!

இந்த மகிழ்ச்சியிலேயே, சுதர்மன் விடை பெற்றுச் சென்றது கூட, அவளை அதிகம் பாதிக்கவில்லை எனலாம்!

எப்படியும்தான், இன்னும் பத்து நாட்களில் வந்துவிடப் போகிறானே!

ஆனால், பத்து நாட்கள்தானே என்று எண்ணியவளுக்கு நாலு நாள் கூடத் தாங்க முடியவில்லை.! மகனைப் பாராமல் பாட்டியின் நலம் கெடுவது ஏன் என்றுகூட, இப்போது நன்றாகப் புரிவது போல இருந்தது!

அந்த அளவுக்கு எதிலும் ஓர் அலுப்பும், சலிப்புமாக இருந்தது!

காலையில் எழும்போதே, இன்றும் சுதர்மனைப் பார்க்க முடியாதே என்ற எண்ணம் தோன்றிப் படுக்கையை விட்டு எழவே பிடிக்காமல் போயிற்று.

எழுந்துபோய், யாரைப் பார்க்க என்ற சலிப்பு, அவளைப் படுக்கையிலேயே பிடித்து வைத்தது!

இப்படி ஒருவனிடம், தான் பைத்தியமாகக் கூடுமா என்று அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது!

இந்த இருபத்திரண்டு ஆண்டுகள், சுதர்மனைப் பாராமலே அவள் வாழ்ந்துதானே இருக்கிறாள்?

அதுவும் சந்தோஷமாகவோ!

அன்னை இறந்தபிறகு கூட, வலி நீக்கும் கல்வியைக் கற்றிருக்கிறோம். இன்னோர் உயிரின் வேதனையை நீக்குகிறோம் என்று மனதில் நிறைவை ஏற்படுத்திக் கொள்ள அவளால் முடிந்ததே!

அவள் உள்ளூர உணர்ந்து திருப்திப்பட்ட அத்தனையும் அப்படியே இருக்கும்போது, பார்த்துப் பத்து நாட்கள் ஆகாத ஒருவனுக்காக இப்படி ஏங்குவதா?

மது, மது என்றான்தான்! காந்தம் என்றும், குடும்பத்தில் மருத்துவர் என்றும் சிலேடைப் பேச்சில் குறிப்புகளும் கொடுத்தான்தான்!

ஆனால், வெளிப்படையாக ஏதும் சொன்னானில்லையே!

பார்த்து நாலே நாட்களில், வெளிப்படையாக உன்னை நேசிக்கிறேன் என்று [illegible] அதை ஒப்பவும் முடியாதுதான்.

12.02.2009 00:17



ஆனால் இந்த ஏக்கம்?

நிச்சயமில்லாத ஒன்றுக்காக இதயம் இப்படி ஏங்குமா? ஏங்கலாமா?

ஒன்றிலிருந்து ஒன்று போல நூல் பிடித்துக்கொண்டு, தாயின் அரவணைப்புக்காகவும் மதுவந்தியின் மனம் தவிக்கத் தொடங்கியது.

அம்மா இருந்திருந்தால் இதைப் பற்றி கேட்கலாமே! இப்படி மனம் விட்டுப் பேசக் கூட ஆளில்லாமல், தனிமையில் அல்லல் பட நேர்ந்திராதே!

நல்லது கெட்டது கற்றுக் கொடுத்த தாயார், இந்த அல்லலைப் பற்றியும் ஏதாவது சொல்லியிருப்பாள்!

தாயின் நினைவு வேறோர் விதமாக மதுவந்தியைத் தட்டி எழுப்பியது!

தாயும் தந்தையும் எப்படி அன்றிலைப் போல ஒன்றி வாழ்ந்தார்கள் என்று, கஸ்தூரி ஆன்ட்டி சொல்லியிருக்கிறாள்.

அவரை இழந்தபோது, அதுவும் ஓரளவு சிறு வயதிலேயே கணவரை இழக்க நேர்ந்தபோது, எப்படித் துடித்திருக்க வேண்டும்?

ஆனால், அந்த தவிப்பை ஒதுக்கி, வேலை செய்து, அதில் முன்னேறி, மகளுக்கு உயர்ந்த கல்வியைக் கொடுத்து...

எவ்வளவு திடம் இருந்திருக்க வேண்டும்?

அந்தத் தாய்க்கு மகளாகப் பிறந்துவிட்டு, உறுதிதானா என்று கூட நிச்சயமாகத் தெரியாத அன்புக்காக, அவனைப் பார்க்க முடியவில்லையே என்று ஓய்ந்து ஒடிவது என்றால், கொஞ்சமும் நன்றாக இல்லையே!

இந்த எண்ணத்தையே வலுவாகப் பற்றி, தன்னைத்தானே தட்டி எழுப்பிக்கொண்டு அன்றாட வாழ்வில் ஈடுபட்டாள் மதுவந்தி.

மேலும் மூன்று தினங்களை ஒருவாறு வெற்றிகரமாகவே நெட்டி தள்ளவும் செய்தாள்.

இன்னும் மூன்று நாட்களில் சுதர்மனைச் சந்திக்கலாம் என்று உள்ளூர அவள் ஆவலாக எண்ணியதை உறுதிப்படுத்துவது போல "அந்த நாலு பல் 'ரி இம்ப்ளான்ட்' கூட வந்தவர் ஃபோன் செய்தார், அக்கா. இன்னும் மூன்று நாளில் 'செக்கப்' இருக்கிறதாமே! எத்தனை மணிக்கு வந்தால், காத்திருக்காமல் சீக்கிரமாக டாக்டரைப் பார்க்க முடியும் என்று விசாரித்தார்" என்றாள் நீலிமா.

அடுத்தவரின் சூழ்நிலை எப்படி இருக்குமோ என்று, செல்லில் தனிப்பட்ட உரையாடல்களை இருவரும் ஒருபோதும் முயன்றது இல்லை. எனவே, வருகிறேன் என்று சுதர்மன் இந்த வழியில், அவளுக்குத் தகவல் தெரிவிக்கிறான்!

வரவேற்பில் மதுவந்தி நின்றிருந்தால், அவளிடமே பேசியிருப்பான்!



உள்ளூர குதூகலம் குமிழியிடத் தொடங்கியது அவளுக்கு!

ஒருவேளை சுதர்மன் மறுபடியும் போன் செய்யக் கூடுமோ என்ற ஆசையில், நீலிமாவுக்கு உதவி செய்கிற சாக்கில், இயன்றவரை மதுவந்தி வரவேற்பிலேயே நின்று பார்த்தாள்.

நீலிமாவே கவனித்து விட்டு "யாராவது வேண்டியவர்கள் வருகிறார்களாக்கா? என்று கேட்டுவிட, "இல்லை... சும்மாதான்!" என்று அசடு வழிந்தாள் மதுவந்தி.

ஆனாலும், அந்த இடத்தை விட்டு அவள் அகலவில்லை! சிகிச்சை அறையில் தேவைப்படும் வேலைகளைச் செய்துவிட்டு, மீண்டும் மீண்டும் வரவேற்புப் பகுதியிலேயே வந்து நின்று கொண்டிருந்தாள்.!

முன் மதிய வேளையில், நோயாளிகள் கூட்டம் கொஞ்சம் குறைந்துவிட்ட வேளையில், வாயில் கதவு சற்று அகலத் திறந்தது! வேகமாகவும்!

கதவு திறந்த வேகத்தில் எல்லோரும் திரும்பிப் பார்க்க, சற்று குண்டான... சற்று அல்ல... நன்றாகவே உருண்டு திரண்ட உடலுடன் கூடிய மத்திய வயதுப் பெண்மணி ஒருத்தி, பெரிய மூச்சுக்களை விட்டபடி உள்ளே வந்து நின்றாள்.

அவளது கடுத்த முகம் எதையோ நினைவு படுத்த, என்னவென்று புரியாமலே முன்னே வந்து " உங்களுக்கு நான் என்ன உதவி செய்யக் கூடும், அம்மா?" என்று வினவினாள் மதுவந்தி.

"ஆங்! உதவியா? நல்லாப் பண்ணு! இங்கே மந்தியோ, சொந்தியோன்னு ஒரு டாக்டர் நாய் இருக்கிறதாமே! அதைக் காதைப் பிடித்து, இங்கே இழுத்து கொண்டு வந்து நிறுத்து! நான் அவளைச் செருப்பால் அடிக்க வேண்டும்!" என்று அந்தப் பெண் சீறவும், அங்கே கப்பென மயான அமைதி பரவியது!

வந்த பெண்ணின் வெறி கொண்ட கண்களைப் பார்த்ததும், கவுண்டரின் பின்னே இருந்த நீலிமா அவசரமாக வெளியே வந்து, மதுவந்தியை மறைத்தாற்போல நின்று, "மதுக்கா, நீ உள்ளே போய்விடு!" என்று எச்சரித்தாள்.

"என்னது? நீதான் அந்த மந்திப் பிசாசா?" என்று ஆத்திரத்துடன் மதுவந்தியிடம் திரும்பினாள் அவள். "ஏண்டீ, இங்கே இந்த ஆசுபத்திரியிலே என்னடீ பண்ணுகிறீர்கள்? எவனாவது பணக்காரப் பையன், பல்லில் அடி பட்டுது என்று வந்தால், வலை போட்டுப் பிடிக்கிறது மட்டும்தான், நீங்கள் எல்லாம் செய்கிறதா?"

மிரண்டுபோய் நின்று கொண்டிருந்த மதுவந்திக்குச் சட்டெனப் புரிந்தது!

இவள் லோகநாதனுடைய [illegible] நினைவு படுத்தியது மகனின் முகத்தை[illegible] முகத்தைச் சுளித்துக் கொண்டேதான் இருந்தான்! இப்போது மகனுக்குப்

12.02.2009 00:17

போட்டியாக அம்மாவும் முகத்தைச் சுளிக்கிறாளாக்கும்!

இந்த மூஞ்சியை வலை போட்டு வேறு பிடிப்பார்களாக்கும்! என்ன தரக் குறைவான பேச்சு!

"இதோ பாருங்கள் அம்மா. இது மருத்துவமனை! இங்கே இப்படியெல்லாம் கத்திப் பேசக் கூடாது!" என்றாள் மதுவந்தி, சற்று அழுத்தமான குரலில்.

"ஏன் கத்தக் கூடாது? நாலு பேர் காதில் விழுந்து, உன் வண்டவாளம், தண்டவாளம் ஏறிவிடும் என்கிற பயமா? அந்தப் பயம், என் பிள்ளையை மயக்குகிற போதில்ல இருந்திருக்கணும்? அடிபட்டு அரை மயக்கமாக வந்த பிள்ளையை, அப்படியே வளைத்துப் போட்டுவிட்டால் நீ பணக்காரியாக ஆகிவிடலாம் என்று பார்த்தியா? ஏன், பெத்தவள் நான் இல்லை? விட்டுவிடுவேனா? கண்ணை நோண்டி விடமாட்டேன்? தொட்டுத் தொட்டுப் பேசுவியாமே! ஏண்டி நாயே, என்னத் தைரியம் இருந்தா, லோகுவைத் தொட்டிருப்பே! டாக்டரில்லே? எங்கே தொட்டா எப்படி பிடிக்கலாம்னும் படிச்சிருப்பே! அதை என் பிள்ளை பணக்காரன் என்று தெரிந்ததும், அவன் கிட்டயே செய்து பார்த்தாயாக்கும்? ஆனால், இந்தக் கதையெல்லாம் என் கிட்டேயா நடக்கும்? என்னை யார் என்று நினைத்தே!"

நெருப்பு மழையாகப் பொழிந்து கொட்டியவள், மூச்செடுப்பதற்காகக் கூடத் தன் நாற்றப் பேச்சை நிறுத்தினாளில்லை!

குறுக்கிட்டுப் பேச, மதுவந்தி எவ்வளவோ முயன்றும் ஒன்றும் முடியவில்லை!

அவளுக்காக நீலிமா செய்த முயற்சியும் அப்படித்தான் பலனின்றி வீணே விருதாவாயிற்று!

இன்னும் சிகிச்சைக்காக காத்திருந்த சிலர், லோகநாதனுடைய தாயின் கத்தலை சுவாரசியமாகக் கவனிப்பதைக் காணவும், மதுவந்திக்கு மனதோடு உடம்பும் கூசியது!

மதிப்பும் மரியாதையுமாக 'டாக்டரம்மா' வாக இருப்பதை, அவ்வளவு அலட்சியமாக நாசமாக்குகிறாள்!

இதைக் காணப் பிடிக்காமல், ஓரிருவர் எழுந்து போவதும் கஷ்டமாகத்தான் இருந்தது!

அசைவு தெரிந்து திரும்பிப் பார்த்தால், கண்கள் பளபளக்க, மாலி, அலெக்கிடம் ஏதோ சொல்வது தெரிந்தது!

மருத்துவமனை வளாகத்திலேயே மருந்துக்கடை நடத்துகிறவன் என்பதால், மதிய உணவுக்கு இருவரும் சேர்ந்துதான் போவார்கள். அந்தச் சாக்கில், அவன் பாதி நேரம் அவள் அருகில்தான் இருப்பான்!

ஒருதரம் மதுவந்தி அழகாக இருப்பதாக அவன் சொல்லப் போக, [illegible]



இன்றுவரை மாலி காய்ந்து கொண்டிருப்பவள், இப்போது அவளைப் பற்றி ஒரு மட்ட ரகமான புகார் வந்தால், பயன்படுத்திக் கொள்ளாமல் விடுவாளா?

ஆனாலும், அதே மருத்துவமனையில் பணி புரிகிறவள் என்பதற்காகவேனும்... என்று பார்த்தால், அவர்கள் இருவரும் பேசியபடியே மறுபுறம் திரும்புவது தெரிந்தது!

அவர்களிடமிருந்து உதவி வர வழியில்லை என்று மதுவந்திக்கு நிச்சயமாகத் தெரிந்து போயிற்று!

ஆனால், அதுவே அவளை நிமிரவும் வைத்தது! அவளுக்கு மற்றவர்கள் என்ன உதவி செய்வது? அவளுக்கும் வாய், குரல், அறிவு எல்லாம் இருக்கிறதுதானே?

எத்தனையோ பேரின் பல்லைப் பிடுங்கி, அவர்களது துன்பம் தீர்த்தவள்! அவளது தொல்லையை அகற்ற, அடுத்தவர் உதவி வேண்டுமா?

சட்டெனத் திரும்பி, வரவேற்புக் கவுண்டர் மீது, கையால் ஓங்கி ஒரு தட்டுத் தட்டினாள்.

ப்ளைவுட் டாப் மீது ஓங்கித் தட்டியதால் எழுந்த ஓசையிலும், எதிர்பாராத இந்தச் செய்கையிலுமாக லோகநாதனுடைய தாயார் திகைத்து ஒரு கணம் வாயை மூட, அந்தக் கணத்தைப் பயன்படுத்தி, "இதோ பாருங்கள் மேடம், சும்மா லபோ திபோ என்று கூச்சல் போடாமல், மற்றவர்கள் சொல்வதையும் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள்.! உங்கள் பையன் அடிபட்டு வந்த நோயாளி என்பது தவிர, அவர்மீது எனக்கு எந்த எண்ணமும் கிடையாது! பல்லிலே பிரச்சினை எனும்போது, தொடாமல் சிகிச்சை செய்ய முடியாது! அவ்வளவுதான் விஷயம்! அதற்கு மேலே அவரே இந்த மாதிரி ஏதாவது சொல்லிக்கொண்டு வந்தால், கழுத்தை பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன். எச்சரித்து வையுங்கள்! இப்போது, இதற்கு மேல் ஏதாவது அர்த்தமில்லாமல் கத்தினால் உங்களுக்கும் அதேகதிதான்!" என்று அதட்டலாகக் கூறியவள், "பாலு!" என்று உரக்க அழைத்தாள்.

அடுத்த அறை வாயிலில் அவன் நிற்பது தெரியும்தான்.

ஆனால், அவளது அதட்டலில் "என்னங்கம்மா?" என்று அவன் ஓடிவர "இந்தம்மா சும்மாக் கத்தினால், வெளியே போக வழியைக் காட்டு! என்று கம்பீரமாக உத்திரவிட்டாள்.

சொல்லும்போதே, அவளுக்கு உள்ளூர உதைப்புதான்.

நோயாளிகள், அவர்களைச் சார்ந்தவர்களை இப்படி விரட்டும் உரிமை, தேவராஜனைத் தவிர யாருக்கும் கிடையாது. அதிலும் பயிற்சி மருத்துவரான [illegible] கிடையாது என்பது, மருத்துவமனையைச் சா[illegible]

12.02.2009 00:17



ஆனாலும், பாலுவோ நீலிமாவோ தன்னைக் கைவிட்டுவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது!

அத்தோடு, லோகநாதனுடைய தாயாரையும் அவளது பேச்சு சற்றேனும் எட்டி, அவளாகவே வாயை மூடி விடமாட்டாளா என்கிற ஆசையும்!

கூடவே நல்ல வார்த்தைக்கு அடங்காதவள், அதட்டலுக்காவது அஞ்சுவாளா என்று முயன்று பார்ப்பதும்தான்.

பொதுவாக, பிறரை அதட்டி மிரட்டிப் பணிய வைக்கிறவர்கள், அவர்களிடம் யாரும் ஓங்கிப் பேசினால், குழம்பிப் போவதும் உண்டு.

இத்தனையிலும் ஏதாவது ஒன்று பலிக்காதா?

லோகநாதனுடைய தாயார் அஞ்சுகிற ஆள் போல இல்லை என்றாலும், அவள் குழம்பிவிட்டது நன்றாகவே தெரிந்தது.!

சந்தேகமாகப் பார்த்து "நிஜமாக என் மகன் மேல் உனக்கு வேறு அபிப்பிராயம்... ஆசை இல்லவே இல்லை என்றா சொல்லுகிறாய்?" என்று குழப்பத்துடன் கேட்டாள் அவள்.

விரும்பியவாறு ஒரு வழி கிடைத்துவிட, "யார் மீது சத்தியம் செய்யட்டும்? என் தலை மேலேயே அடித்துச் சொன்னால் நம்புவீர்களா?" என்று கேட்டவள், மெய்யாகவே தன் தலை மீது கையை வைத்து, "கடவுள் சத்தியமாக, உங்கள் மகன் மேல், அடிபட்டு வந்த நோயாளி என்ற பரிவு தவிர, காதல், கண்ணராவி எதுவும் எனக்குக் கிடையாது! போதுமா?" என்று அழுத்தம் திருத்தமாக கூறவும், வயதால் பெரியவள், ஒருவாறு அடங்கினாள்.

அப்போதுமே "நான் எங்க பையனிடம் போய்த் தெளிவாகக் கேட்டுவிடுகிறேன்! ஆனால் நீ சொன்னது மட்டும் பொய்யாக இருக்குமானால், சாமி உன் கண்ணைக் குத்துமோ, என்னவோ நான் வந்து, உன் குடலை உருவி மாலையாகப் போட்டுக் கொள்வேன்! இதுவும் சத்தியம், தெரிஞ்சுக்க!" என்று படபடவென்று பொழிந்துவிட்டுத்தான் வெளியே சென்றாள்!

பாத்திரக்கடையில் யானை புகுந்தாற்போல என்று சொல்வார்கள்! அந்தம்மாள் வெளியே சென்றதும் அங்கே பரவிய நிசப்தத்தில் அந்த உதாரணம் மட்டும்தான், மதுவந்தியின் மனதுள் தோன்றியது!

அப்பாடி என்று ஓய்ந்து வரவேற்பு கவுண்டர் மீது சாயப் போனவளை, "நீ இன்னும் பயிற்சிப் பணியில்தான் இருக்கிறாய், நினைவிருக்கிறதா?" என்று தலைமை டாக்டர் தேவராஜனின் குரல் தூக்கி வாரிப்போட, அவசரமாக நிமிர்ந்து நேராக நின்றாள் அவள்.

அருகிலேயே நின்ற மாலியின் திருட்டுப் பூனைத் தோற்றம், தேவராஜன் எப்படி அங்கே வந்தார் என்று புரிய வைக்க, மதுவந்தி இன்னும் பதறிப் போனாள்!

மாலி நல்லவிதச் சொல்லி அழைத்து வந்திருக்க மாட்டானே!



"சார்..." என்றாள் அச்சத்துடன் "எ...என்மேல் தப்பு இல்லை சார்!" என்று கலக்கத்துடன் எடுத்துச் சொல்லலானாள்.

ஆனால், அதில் குறுக்கிட்டு, "அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை! நீ வெளியே போய் எப்படி நாறினாலும், அதைப்பற்றி, நான் கொஞ்சமும் கவலைப்பட மாட்டேன். ஆனால், இணைப்பு வேலைகள் மிக நெருங்கி வந்திருக்கும் இந்த நேரத்தில், மருத்துவமனையின் நல்ல பெயர் கெடுவதை, நான் அனுமதிக்க மாட்டேன்.! தயவு தாட்சண்யமே பாராமல், விரட்டியடித்து விடுவேன்" என்று கடுமையான குரலில் எச்சரித்தார் பெரிய மருத்துவர்!

"இனிமேல் கவனமாக இருக்கிறேன், சார்!" என்று சின்னக் குரலில் கூறினாள் மதுவந்தி.

உள்ளே செல்லத் திரும்பிய தேவராஜன் நின்று "கவனமாக இருந்துதான் ஆக வேண்டும்!" என்றார் அழுத்தம் திருத்தமாக! "நீ ஒன்றும் மகா உத்தமமாக நடந்து கொள்ளவில்லை என்று எனக்குத் தெரியும்!"

"சார், மெய்யாகவே நான்..." என்று மதுவந்தி ஏதோ சொல்லத் தொடங்கியதைக் கை உயர்த்தி அடக்கிவிட்டுத் தேவராஜன் தொடர்ந்தார்.

"அந்த லோகநாதன் இங்கே இருந்தபோது, நீ ஓடி ஓடிச் சென்று அந்த அறையிலேயே நின்றது, எனக்கு நன்றாகத் தெரியும்! ஓரிரு முறை, அங்கிருந்து உன்னை நானே, வரவழைத்தும் இருக்கிறேன்.! ஆனால் அப்போதெல்லாம் இப்படி ஒரு கத்தலை நானே எதிர்பார்க்கவில்லை. அதனால், எப்படியோ போய்த் தொலைகிறது என்று சும்மா இருந்துவிட்டேன்! ஆனால் இது போல அசிங்கம் இன்னொரு தரம் நேருமானால், உன்னைத் தொலைத்துக் கட்டி விடுவேன். ஜாக்கிரதை!" என்று கடுமையாக எச்சரித்துவிட்டு போய்விட்டார்.

அநியாயமான குற்றச்சாட்டு என்று பொருமியபோதும், மதுவந்தியால் எதையும் மறுத்துக் கூறவும் முடியவில்லை!

சுதர்மனுக்காக, அவளுமே லோகநாதனின் சிகிச்சையில் சற்று அதிகமான ஆர்வம் காட்டியது உண்மைதானே? அதை இல்லை என்று சொல்ல முடியாதுதானே?

ஆனால், அதை உண்மையாகவே, லோகநாதன் தவறாக எண்ணிக் கொண்டிருந்தால்?

அதன் விளைவாகவே அவனுடைய தாயார் இந்த மாதிரி நடந்திருந்தால்?

இன்னொரு முறை இப்படி நடந்தால் என்ன ஆகும் என்று தலைமை வைத்தியர் மிர[illegible] கலங்கியது!

12.02.2009 00:17

அவளானால், மகனிடம் தெளிவாகக் கேட்டு வருவதாகப் போயிருக்கிறாள்!

மகனே, தவறாக எண்ணிக் கொண்டிருந்தால், அதையேதானே சொல்லுவான்? அப்புறம் என்ன ஆகும்?

அதை நினைத்துப் பார்க்க கூட முடியாமல் மதுவந்தியின் நெஞ்சு நடுங்கியது!

அந்த மாதிரி எதுவும் நடந்துவிடாமல், தடுத்தே ஆக வேண்டுமே!

ஆனால், எப்படி? லோகநாதன், அல்லது அவனுடைய தாயாரின் செயல்களின் மீது, அவளுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இருவருமே எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்கிறவர்களாகவும் தெரியவில்லையே!

கலக்கத்துடன் கூடிய யோசனையில் ஆழ்ந்திருந்த அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "அந்தம்மாவைப் பார்த்தாலே பயமாக இருக்கிறதே! அவள் திரும்பவும் வந்தால் என்னக்கா, செய்யப் போகிறீர்கள்?" என்று நீலிமா கவலையுடன் கேட்டாள்.

என்ன செய்வது என்று அவளுக்கே தெரிந்தால் அல்லவா, இந்தப் பரிவுக்குமே பதில் சொல்ல முடியும்?

செய்வது அறியாமல் வெகு நேரம் திண்டாடிய பிறகே, சுதர்மனின் நினைவு மதுவந்திக்கு வந்தது!

தவித்த வாய்க்கு தண்ணீர் கிடைத்தது போலப் பெரும் ஆறுதலும் கிட்டியது!

## 6 வாழும் முறைமையடி



சுதர்மனின் நினைவு மதுவந்திக்கு அதுவரை இல்லாமலே இருந்தது என்று சொல்ல முடியாது! கல்லில் பொறித்த எழுத்து போல, நெஞ்சின் ஒரு பகுதியில் அவன் முகம் எப்போதுமே நிலைத்திருந்தது!

ஆனால், லோகநாதன், அவனுடைய தாயாரோடு சேர்ந்து, அவனை நினைக்க, அவளுக்கு அதுவரை தோன்றவில்லை!

நினைத்த பிறகே, மலையாக மருட்டிய பிரச்சினை, கடுகாய்ச் சிறுத்து காணாமலே போய்விட, மதுவந்தியின் உதடுகளில் பழைய புன்னகை மீண்டும் வந்து ஒட்டிக்கொண்டது!

பிரச்சினைக்குரிய தாய், மகனோடு பழகி, அவர்களின் குணம் அறிந்தவன், சுதர்மன்.! மதுவந்தியின் நிலை பற்றி எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கக் கூடியவன்!

புரியவைத்து, இந்தப் பிரச்சினை பெரிதாகாமல் தடுத்து



நிறுத்தவும் கூடியவன்!

கேட்டால், செய்கிறவனும் கூட! கட்டாயம் செய்வான்!

பிரச்சினை தீர்ந்தே விட்ட மகிழ்ச்சியோடு, பதிவுப் புத்தகத்தில் இருந்து, சுதர்மனின் செல் எண்ணைத் தேடி எடுத்து, தன் செல்லில் குறித்துக் கொண்டாள்.

அதுவரை, செல்லில் சுதர்மனை அழைத்து, அவனுடன் பேசி அரட்டையடிக்கும் எண்ணம் அவளுக்குத் தோன்றியது இல்லை! அப்படியே மதுவந்தி அவனோடு பேச நினைத்தாலுமே, அந்த நேரத்தில் அவனது சூழ்நிலை எப்படி இருக்குமோ? பேசுவது யார் என்ன என்று பெற்றோர், நண்பர் யாரேனும் கேட்டால், தெளிவாக விவரம் சொல்ல முடியாமல், அவனுக்குச் சங்கடமாகி விடக் கூடும் அல்லவா?

வேலை நேரத்தில் வெளியாருடன் ஃபோன் பேசக் கூடாது, என்பது மருத்துவமனையின் கண்டிப்பான விதிகளில் ஒன்று என்பது சுதர்மனுக்கும் தெரியும்.

மற்றபடியும், அவளுக்கு உள்ள நிலைதானே, அவனுக்கும்?

இருவருமே, இன்னும் ஓர் எட்டு நெருக்கத்துக்காக காத்திருந்தார்கள் எனலாம்.

அதனாலேயே லோகநாதனின் செக்கப்பின் போதான சந்திப்பை, வெகு ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டும் இருந்தார்கள்.!

ஆனால், இடையிலே மதுவந்திக்கு நேர்ந்த இக்கட்டு, அவளது மற்ற தயக்கங்களைப் பின்னே தள்ளிவிட்டது!

அப்போதும், உணவு இடைவேளை நேரத்தில், சுதர்மனும் ஓய்வாகத்தான் இருப்பான் என்று எண்ணி, அந்த நேரத்தில்தான் மதுவந்தி அழைத்தாள்.

அவனுக்கு ஆச்சரியமே! ஆச்சரியப்பட்டாலும் சுதர்மனால் உடனே பேச முடியவில்லை!

ஒரு தொழில்முறை 'லஞ்ச்'சின் நடுவில் இருந்தான் அவன்.

அப்போதும், அவசரப் பிரச்சினை எதுமா என்று மட்டும் கேட்டு, அப்படியில்லை என்று அவள் சொன்னதும் முடிந்தவரை சீக்கிரமாக கூப்பிடுவதாகச் சொல்லி வைத்துவிட்டான்!

சுதர்மன் அப்படி அழைத்தநேரம், அவளுக்கு வேலை நேரமாக இருந்தது!

கடைசியாக, வேலை முடிந்து வீடு செல்லும் நேரத்தில் லோகநாதனுக்காக சுதர்மன் தஞ்சையில் காத்து கிடந்தபோது, இருவருமாகப் பேசி மகிழ்ந்த பின்மாலை நேரத்தில் அவனை அழைத்து நடந்த விவரத்தைச் சொன்னாள் மதுவந்தி.

"மீனா ஆண்ட்டி நேரில் [illegible] [illegible] எப்படி இருந்திருக்கும் என்று [illegible] என்றான்

12.02.2009 00:17



சுதர்மன் பரிவுடன்.

அவளது 'மது'வே அவளுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்கையில் "மீனா ஆண்ட்டிக்கு கோபம் வந்தால், பேசக் கூடாத வார்த்தையே கிடையாது! குரலும், காது ஜவ்வு கிழிந்து போகும்" என்றான் தொடர்ந்து!

"கிட்டத்தட்ட அப்படித்தான் நடந்தது! அந்தக் குரலும் வார்த்தைகளும்... எனக்கு ரொம்ப அசிங்கமாகிப் போயிற்று, சுதர்மன்! ஆனால் சர்வ நிச்சயமாக எங்களுக்குள் ஒன்றுமே கிடையாது, கிடையவே கிடையாது, சுதர்மன், நீங்கள்தான் பார்த்திருக்கிறீர்களே! வலி, வேதனையில் இருக்கும் எந்த ஒரு நோயாளியிடமும் நடந்து கொள்வது போன்ற பரிவுதான் எனக்கு! அதைப் போய்த் தப்பாக ஒருவர் எப்படி எண்ண முடியும்? அல்லது மிஸ்டர் லோகநாதன் சாதாரணமாக சொன்னதை உங்கள் மீனா ஆண்ட்டிதான் தப்பாகப் பொருள் கொண்டிருப்பார்களோ? எனக்கென்னவோ, அப்படித்தான் தோன்றுகிறது, சுதர்மன்! தயவு பண்ணி, அவர்களுடைய மகனுக்கும் எனக்கும் ஒன்றும் இல்லை என்று, அவர்களுக்கு புரிய வையுங்கள்! இன்னொருதரம் இப்படி நடந்தால், அப்புறம் என் வேலையே போய்விடும்! தேவராஜன் சார் மிகவும் கண்டிப்பாக எச்சரித்திருக்கிறார்! இந்த விஷயத்தில் அவர் சும்மாவேனும் மிரட்டுவதற்காகச் சொல்லவில்லை என்பதும், ரொம்பவே நிச்சயம்!" என்றாள் அவள் கவலைக் குரலில்.

"நான் பேசுகிறேன் மது! நாளைக்கே கிளம்பிச் சென்னைக்கே போய், மீனா ஆண்ட்டியிடம் பேசி, அவர்கள் தஞ்சைப் பக்கமே வராமல் தடுத்து விடுகிறேன்! அப்புறமாக லோகன் செக்கப்புக்கு வரும்போது, அவனோடு அவனுக்குத் துணையாக, நானும் தஞ்சைக்கு வருகிறேன், தெரியும் அல்லவா? வந்தபின் நேரிலேயே எல்லா விவரமும் சொல்லுகிறேன்! போதுமா?"

போதுமாவா? இதற்கு மேல் அவளுக்கு என்ன வேண்டும்?

பிரச்சினை தீர்வதோடு, அவனை நேரிலும் பார்க்கும் வாய்ப்பு! அவளுக்கு எவ்வளவு பெரிய போனஸ்.!

முன்பே வருகிறேன் என்றான்தான். ஆனால், இப்போது அவனது வரவு, இன்றியமையாதது என்பார்களே, அதுபோல முக்கியமானதாகி விட்டது!

"ரொம்பவும் நன்றி சுதர்மன்!" என்றாள் குரலில் நன்றி தொனிக்க.

ஆனால், "நன்றியெல்லாம் வார்த்தையில் மட்டும்தானே இருக்கிறது!" என்று அவன் குறைப்படவும் மதுவந்தி திடுக்கிட்டு போனாள்.

அவளது உள்ளத்து உணர்ச்சியை, அவனுக்கேச் சரிவரப் புரிய வைக்கத் தவறிவிட்டாளா?



"அப்படியில்லை சுதர்மன்! நிஜமாகவே என் மனம் முழுவதும் இப்போது நிறைந்திருக்கிறது. உங்களுக்கான நன்றிதான்! லோகநாதனுடைய அம்மா வந்து போனதிலிருந்து, நான் சரிவர மூச்சு விடுவதே, உங்களிடம் பேசியபிறகு, இப்போதுதான்! அவ்வளவு ஆறுதல்! அது, உங்களால்தானே?" என்று மனதை மறையாது அவனிடம் கொட்டினாள்.

"நீ சொன்னதெல்லாம் நிஜம் என்றால், அப்புறம் எதற்கு, யாரோ மாதிரி, நீளமாக அந்த 'சுதர்மன்?' என்று முயன்று வருவித்த பெண் குரலில், அவளைப் போலவே அவன் பெயரைச் சொல்லிக் காட்டவும், அவளுக்குச் சட்டெனச் சிரிப்பு வந்தது.!

இதற்காகத்தானே இந்தப் பீடிகை?

பிகு பண்ணாமல், உடனேயே "நன்றி சுதா!" என்றாள் அவள், "ஆயிரம் பத்தாயிரம், லட்சம் நன்றி! அத்தனைக்கும் ஒரு சுதாவையும் சேர்த்துக் கொள்ளுங்கள் சுதா!" என்றாள் புன்னகைக் குரலில்.!

"ஓகே! இப்போது உன் நன்றி ஏற்றுக் கொள்ளப்படுகிறது!" என்று அவன் படு அமர்த்தலாகச் சொன்ன விதத்தில் இருவருக்குமே இன்னும் சிரிப்பு வந்தது!

"நான் கிளம்பட்டுமா, சுதா? வீட்டுக்குச் செல்ல வேண்டும்" என்று கேட்டபோது, மதுவந்தியின் குரல் தழைந்து குழைந்தது!

"வீட்டுக்கா? இப்போதேபோக வேண்டுமா, என்ன?" என்று உல்லாசமாகக் கேள்வி கேட்டான் சுதர்மன்.

அவளுக்கும் கவலை தீர்ந்த ஆனந்தமே!

சலுகைக் குரலில் "இன்னும் தாமதமாகப் போனால், பாட்டி கவலைப்படுவார்களே!" என்று காரணத்தைச் சொன்னாள்.

"ஓஹோஹோ! பாட்டியைக் கவலைப்பட வைக்கக் கூடாதுதான்! அதனால் ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டால், டாக்டரம்மாவைப் பாட்டியம்மாவிடம் போகச் சொல்லி விடலாமா?" என்று உரக்க யோசித்தான் சுதர்மன்.

"தேர்வுகள் எல்லாம் முடிந்துவிட்டது என்று பார்த்தால், இன்னும் கேள்வியா? சரி, ஒரே ஒரு கேள்வி மட்டும்தான். கேளுங்கள்!" என்றாள் அவளும், அவனை ஒத்த விதமாய் இலகுவாகவே!

"ஒரே ஒருகேள்வி! என்ன. கேள்வி இதுதான்! இப்போது லோகனுடைய தாயார் வந்து கேட்ட மாதிரி என் அம்மாவும், உன்னிடம் வந்து, 'என் மகனை மயக்குகிறாயா' என்று கேட்டால், என்ன பதில் சொல்வாய்?" என்று வினவினான் சுதர்மன்.!

கேள்வியினால் ஏற்பட்ட [illegible] அவளது குரலில் இருந்த உல்லாசம் மறக்கடித்தது!

ஒருகணம் யோசித்தவளின் முகத்தில் குறும்பு [illegible]!

12.02.2009 00:18

"ஆஹா. இதுவா சின்னக் கேள்வி? பள்ளிப் படிப்பில் பத்து மதிப்பெண் தரும் விரிவான பதிலுக்கான கேள்வி போல அல்லவா இருக்கிறது! சரி, எப்படியோ நமக்குத் தெரிந்த அளவில், பதில் சொல்லிப் பார்க்க வேண்டியதுதான்! சுதா அம்மாவும் வந்து மயக்க... மயக்கப் பார்க்கிறாயா என்று கேட்பதா? இதற்கு... அடடா. இந்தக் கேள்வியே சரியில்லையே, இதற்கு எப்படிப் பதில் சொல்வது? யார் மயக்கியது என்று கூடத் தெரியாமல் கேள்வி கேட்க வந்து விட்டீர்களே என்று, அவர்களைத் திருப்பிக் கேட்டுவிட வேண்டியதுதான்" என்று மிடுக்காக உரைத்து, உடனேயே கலகலவென்று சிரித்தாள் அவள்.!

இணைந்து நகைத்துவிட்டு, "உன்னை எப்போது பார்ப்போம் என்று இருக்கிறது, மது! ஆனால், இன்னும் இரண்டு நாட்கள்! இருக்கட்டும் அதுவரை 'பை'மா!"என்று விடை கொடுத்தான் சுதர்மன்.

இன்னும் இரண்டு நாட்களா என்றுதான் அவளுக்கும் இருந்தது! 'சுதா' என்ற பெயர் எவ்வளவு எளிதாக வாயில் வந்தது என்று அவளுக்கே வியப்பாக இருந்தது!

இத்தனைக்கும் பாட்டி, பற்றிய கடமையை நினைத்து, வேறு எந்த விதக் கனவுக்கும் அவள் மனதில் இடம் கொடுக்கவே இல்லையே! ஏதோ அதிகப்படியாக நினைவு ஓடினால் கூட, பிடிவாதமாக வேறு ஏதாவது யோசித்து, மனதை மாற்றிக் கொள்வாளே!

அல்லது, மாமாவைப் பற்றி நினைத்து, அப்படியே பாட்டியையும், கடமையையும் நினைவுறுத்திக் கொள்வாள்!

இப்போது, அது மேலும் மேலும் கடினமாகிக் கொண்டே வந்தது! மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது, கிட்டத்தட்ட முடியவில்லை என்கிற நிலைக்குப் போயிற்று!

அன்று இரவு முழுவதும் தீவிரமாக யோசித்துவிட்டுக் கையில் இருந்த சொந்தப் பணம் முழுவதையும் எடுத்துப் போய், சுந்தரி அம்மாளிடம் கொடுத்தாள்.

"ஆன்ட்டி, இரண்டு நாட்கள் வேலையில் இருந்து விடுப்பு எடுத்துக் கொண்டாவது, மாமாவைத் தேடும்படி, உங்கள் அண்ணன் மருமகனிடம் எனக்காகக் கேளுங்களேன். எப்படியாவது அவரைச் சீக்கிரமாகக் கண்டுபிடித்து வீட்டுக்குக் கூட்டி வரச் சொல்லுங்கள், ஆன்ட்டி!" என்று அவளிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

முகம் வெளுத்து, "ஏன் மதும்மா, பாட்டி உடம்பு ரொம்பவும் மோசமாகிவிட்டதா? முகமுழியாவது கிடைக்க வேண்டும் என்று நினைத்து அவசரமாகத் தேடச் சொல்கிறாயா?" என்று சுந்தரி அம்மாள் கவலையுடன் கேட்கவும் மதுவந்திக்கு உள்ளே கூசிவிட்டது!



அவள் அப்படி நினைத்துச் சொல்லவில்லையே!

மாமன் திரும்பி வந்துவிட்டால், மகனைப் பார்த்ததும் பாட்டியின் மனம் தேறிவிடும். அதன் விளைவாக உடல் நிலையும் தேறிவிடும் என்பது ஒருபுறம்!

அதன்பிறகு, கனவுகளைக் கூட கட்டுப்படுத்தும் இந்த நிலை மாறி, அந்த விருப்பம்போல கனவு காணவும், அந்தக் கனவுகள் நிறைவேறுவதற்கும் தடையிராது என்றும் சேர்த்துநினைத்தல்லவோ மதுவந்தி இந்த முயற்சி செய்தாள்!

எவ்வளவு சுயநலக்காரி நான் என்று நினைத்து, சற்று நேரம் மனம் குன்றிப் போனாள் அவள்!

இதே பாட்டிக்குப் பணிவிடை புரிவதற்காக வி.ஆர்.எஸ் பெற்றுக்கொண்டு வந்து உழைத்த தாயை நினைக்கையில், மதுவந்திக்கு ரொம்பவே அவமானமாக இருந்தது!

அப்படித் தன் சுகத்துக்காகப் பொறுப்பை தட்டிக் கழித்து ஓடுகிறவளா, அவள்?

நல்லவேளையாக, சுற்று வேலை செய்யும் பெண் அந்த நேரம் பார்த்துக் கூப்பிடவும் மீந்த சாதத்தை அவளுக்குக் கொடுப்பதற்காக சுந்தரியம்மாள் எழுந்து செல்ல நேர்ந்தது!

மதுவந்தியால் சற்று அமைதியாகவும் யோசிக்கவும் முடிந்தது!

இல்லை! அவள் அப்படிப்பட்டவள் இல்லை! அம்மா போன பிறகு, பாட்டிக்காக, அவள் வேலைக்குக் கூட போகாமல் பாட்டிக்கு பணி புரியத்தான் செய்தாள்.

அப்போது பாட்டிதானே அவளை வேலைக்கு அனுப்பியது!

அதன்பிறகும், இன்றளவும் பெரிய மருந்துச் செலவு தவிர, பாட்டியின் பணத்தைத் தொடாமல் வீட்டுச் செலவு முழுவதும் மதுவந்தியின் வருமானத்தில்தானே நடக்கிறது?

அதற்குமேல், மாமாவைத் தேடுவதற்காகச் செலவாகும் பணமும், அவளதுதான்.

இதையெல்லாம் ஒரு கணம் கூடப் பெரிதாக நினைத்துப் பார்த்ததே கிடையாதே!

இப்போதும், அவள் செய்யும் முயற்சிகள் அத்தனையும் வீணாகி, மகன் ஏக்கத்தில் பாட்டியின் உடம்பு மேலும் மேலும் மோசமாகத்தானே போய்க் கொண்டிருக்கிறது?

இந்த முயற்சி செய்யாவிட்டால், பாட்டியின் உயிரை நாள் கணக்கில் பிடித்து வைத்திருப்பது கூடக் கடினமே!

எனவே, இது ஒரு செய்தே பார்க்க வேண்டியதான கடைசி முயற்சி!

இந்த முயற்சி பலித்[illegible] 12.02.2009 00:18 [illegible]யைப் இளகித் தாயிடம் அன்பு கா[illegible]



பார்த்து, எந்தவிதமான ரத்தத் தொடர்பும் இல்லாத சுந்தரி ஆன்ட்டியே இப்படி உருகும்போது, பெற்ற மகனின் மனம் கட்டாயம் கனிந்துதான் தீரும்! பாசத்தோடு மகன் பழகும்போது, பாட்டிக்கு உடம்பு நன்றாகி விட, ஒரு பெரிய வாய்ப்பு இருக்கிறது!

பாட்டி பிழைத்து எழுவதற்கான ஒரே வாய்ப்பும்கூட!

இந்த முயற்சியில் அவளுக்கும் ஒரு நல்லது நடக்கக் கூடும் என்றால், அதைச் சுயநலம் என்று, பாட்டிக்காக எத்தனையோ தியாகம் செய்த அவளுடைய அன்னையே சொல்ல மாட்டாள்.

பாட்டியும் நிச்சயமாகத் தவறாக எண்ண மாட்டாள்.

தனக்காகப் படிப்பை, தொழிலை வீணாக்கிக் கொள்ளாதே என்கிற பாட்டி "வயதான இந்தச் சருகை விடு... இளந்தளிரான உன் வாழ்வைப் பார்ப்போம்" என்றுதான் கூறுவாளே தவிர, நிச்சயமாக மதுவந்தியைத் தப்பு சொல்லவே மாட்டாள்!

அத்தோடு மதுவந்தியும் அப்படித் தன்னை மட்டுமே நினைத்துச் செயல்படவில்லையே! 'நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் கசிவது' போலப் பாட்டியின் நலத்துக்காகச் செய்வதில், அவளுக்கும் ஒரு நன்மை ஏற்படக் கூடுமோ என்பதுதான்!

ஆனால் அது பற்றி, எந்தவிதமான உறுதியும் கிடையாது!

லோகநாதனுடைய தாயின் தன்மையில், பத்தில் ஒரு பங்கு, சுதர்மனுடைய அன்னைக்கு இருந்தாலும், நன்மை என்கிற சொல்லுக்கே அங்கே இடம் இராது!

இதையெல்லாம் தாண்டி, ஒரு நல்லது நேர்ந்தால், மதுவந்தி சுயநலமாக அதை ஏற்படுத்திக் கொண்டாள் என்று எப்படிச் சொல்ல முடியும்?

இவ்வளவு யோசித்து முடித்த பிறகுதான், மதுவந்தியால், நல்லபடியாக மூச்சே விட முடிந்தது!

வேலைக்காரியை அனுப்பிவிட்டுத் திரும்பி வந்த சுந்தரியம்மாளிடம் தேவைப்பட்ட விவரம் சொல்லி, அவளுடைய அண்ணன் மகனிடம் குற்றமற்ற மனதோடு, அவளை அனுப்பவும் மதுவந்தியால் முடிந்தது!

"இரண்டு நாட்கள் விடுப்பு எடுத்துவிட்டேன்! அல்லும் பகலும் அலைந்தேனும், தண்டபாணியைக் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறேன்" என்று அண்ணன் பையன் சூளுரைத்துச் சென்றிருப்பதாக சுந்தரி அம்மாள் வந்து சொல்ல, அதுவே மதுவந்திக்கு ஆறுதலாக இருந்தது!

அன்று மாலையே அவளை அழைத்து, அப்போது அவன் சென்னைக்குப் போய்க் கொண்டிருப்பதாக, சுதர்மன் தெரிவித்தான்.

என்ன திடீர்ப் பயணம் என்று அவளுடைய தந்தை வினவினாராம்!



"ஆனால் மது, இது 'காற்றில் ஏறி, அவ்விண்ணையும் சாடுகிற' பயணம் என்று சொன்னால் அப்பாவிடம் சொல்ல முடியவில்லை! அங்கே உன் சூழல் தெரியாததால், லோகனின் பெயரைச் சொல்லித்தான் சமாளிக்க வேண்டியதாயிற்று! கொஞ்சம் வாயை விட்டேன் என்று வைத்துக்கொள்... சுபஸ்ய சீக்கிரம் என்று இருவருமே வற்புறுத்தத் தொடங்கி விடுவார்கள்! ஆனால் ஒன்று மது! இந்தப் பத்து நாட்களில், எனக்குமே எப்போது எப்போது என்றுதான் இருக்கிறது!" என்று சுதர்மன் குரலில் ஏக்கமும் சன்னச் சிரிப்புமாகக் கூறியபோது, மதுவந்தியின் மனம் 'ஜிவ்'வென்று சிறகடித்துப் பறக்கலாயிற்று!

அவள் செய்ய வேண்டிய கடமை, பாட்டிக்கு மட்டுமா? இதோ, இவ்வளவு அன்பு காட்டும் இவனுக்காக, அவள் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லையா?

தாய் மாமனைத் தேடச் செய்த தீவிர ஏற்பாடு, நூறு சதவீதமாக நியாயப்படுத்தப்பட்டு விட்டதாக மதுவந்திக்கு அப்போது தோன்றியது!

அன்றிரவில் சுதர்மனுடைய பெற்றோரைப் பற்றி, மதுவந்தி யோசித்துப் பார்த்தாள்.

வருவது போலவும், பேசுவது போலவும் சில அற்புதக் கற்பனைகளும் தோன்ற, அவற்றைத் தடுக்க முயற்சிக்காமல், சந்தோஷமாக அனுபவித்தாள்!

சென்னைப் பயணம் பற்றிய விவரம், மறுநாள் மாலையில் கிடைத்தது!

லோகநாதனுடைய தாயாரிடம் பேசி விட்டதாகவும், அவன் சொன்னதை அந்தப் பெண்மணி ஏற்றுக் கொண்டதாகவும் சொன்னான்.

"இப்போதுதான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறது, சுதர்.... சுதா.. ஆனால் அடிப்படையே இல்லாமல், அங்கே இருந்து கிளம்பி வந்து, கண்டபடி திட்டுவது என்றால், இன்னமும் சற்றுப் பயமாகவும் இருக்கிறது" என்றாள் மதுவந்தி.

"அடிப்படையே இல்லை என்று சொல்ல முடியாது, மது. லோகன் தன் செல்லில் 'ஸ்க்ரீன் சேவராக உன் படத்தை வைத்திருக்கிறான்" என்றுரைத்து, அவளைத் திடுக்கிட வைத்தான் சுதர்மன்.

"என்னது?" என்று திகைத்துவிட்டு, "எனக்குத் தெரியாதே, சுதா! என் படம் ஏது... ஓ. செல்லை வைத்து எடுத்திருப்பார் போலும்! ஆனால் படம் எடுக்க என்னிடம் அனுமதி கேட்கவே இல்லை! அதற்கு மேல் செல்லில் [illegible] 12.02.2009 00:18 இப்படிச் செய்யலாம்?" என்று சிறு [illegible]

"ஏய், அமைதி! அமைதிடா! இதெல்லாம் இந்த நாளில் பெரிய

விஷயமா? கீழே விழுந்ததில் முன் பற்கள் விழுந்ததும், லோகன் எப்படிக் கலங்கிப் போனான் தெரியுமா? தோற்றத்தில் ரொம்பக் கவனம், அவனுக்கு. மறுபடியும், அவன் முகத்தை சீர் செய்து தந்த மருத்துவர் என்ற நன்றியில் கூட, உன் படத்தை வைத்திருக்கலாமே! மீனா ஆண்ட்டி செல்லில் படத்தைப் பார்த்ததும் தப்பாக நினைத்தார்கள் என்றால், அது நடக்கக் கூடிய... எதிர்பார்க்க வேண்டிய ஒன்றுதான். நீயெல்லாம், இதைப் போய்... கண்டு கொள்ளவே தேவை இல்லைம்மா!"

சுதர்மனின் பேச்சிலும், குரலிலுமாக அமைதியடைந்த போதும் "ஆனால், உங்கள் மீனா ஆண்ட்டி, இப்படி மீண்டும் வந்து நின்றால்? அதுதான் என் பயம்!" என்றாள் மதுவந்தி, அன்றைய நினைவில் இப்போதும் லேசான பதற்றத்துடன்.

"வரவே மாட்டார்கள்! உனக்கு வேறு இடத்தில் நிச்சயமாகிவிட்டது என்று அவர்களிடம் சொல்லிவிட்டேன்! சொல்லலாம்தானே?"

இவன் நிஜமாகவே வேகமாகத்தான் போகிறான்! ஆனால், பாட்டி, மாமா பற்றி ஒன்றும் தெரியாமல், அவள் எப்படி இதை ஒத்துக் கொள்ள முடியும்?

மறுக்கவும் மாட்டாமல், "ம்ம்... அது... அவ்வளவு தூரத்தில் இருந்து கேட்டால், எப்படிச் சொல்வதாம்?" என்று குழைந்தாள் அவளும்.

"நாங்கள் எல்லாம் வாயால்தான் சொல்வது! அவ்விடத்தில் வேறு யோசனை இருக்கிறது போல? அதனால்தான் நேரில் வரச் சொல்கிறாயா? ஆனாலும், அம்மணி அதி வேகம்தான்!" என்று சுதர்மன் கிண்டலடிக்க, மதுவந்தியின் முகம் செக்கச் சிவந்து போயிற்று!

சொல்வதையும் அவளே சொல்லிவிட்டு, அவளை வேகம் என்கிறானே!

"ச்ச..! சுதா! நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை!" என்று சிணுங்கினாள் அவள்.

வேண்டும் என்றே புரியாதவன் போல "அப்படி என்றால், எப்படிம்மா? அதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் தேவலையே!" என்று அவன் உல்லாசச் சிரிப்புடன் வினவ, பதில் சொல்ல முடியாமல், மதுவந்தி திணறித் திண்டாடிப் போனாள்.

அன்று வரை அனுபவித்து அறியாத இனிய திணறல்!

திணறலை மறைத்து "சுதா இப்படியே பேசினீர்கள் என்றால் செல்லைக் கட் பண்ணி விடுவேனாக்கும்" என்று போலியாக மிரட்டினாள்.

அவன் மேலும் சிரித்துவிட்டு, "இன்னும் கொஞ்ச நேரம் இப்படிப் பேச ஆசைதான் என்றாலும் கட் பண்ணத்தான் வேண்டும் போல!



லோகன் வந்து கொண்டிருக்கிறான். கிளம்ப வேண்டும், நாளை நேரில் சந்திப்போம். அப்போது முகத்தைப் பார்த்தவாறே, இன்னும் நிறையப் பேசுவோம்!" என்று பேச்சை முடித்தான் சுதர்மன்.

காற்றில் மிதந்தவாறே வீட்டுக்குப் போனால், தண்டபாணி இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டதாகவும் இயன்றவரை சீக்கிரமாக அவனை வீட்டுக்குக் கூட்டி வருவதாகவும் தன் அண்ணன் மகன் தெரிவித்ததாக சுந்தரி ஆண்ட்டி கூற, மதுவந்தியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாது போயிற்று!

மாமா எப்போது வந்தாலும், மருத்துவமனை எண்ணுக்குத் தெரிவிக்குமாறு சுந்தரி அம்மாளிடம் கூறிவிட்டு, மறுநாள் மதுவந்தி மருத்துவமனைக்குக் கிளம்பிச் சென்றாள்.

அங்கே, அவளுக்கு இன்னொரு சந்தோஷம் கிடைக்கப் போகிறதே!

இப்படி மகிழ்ச்சியை எதிர்பார்த்துதான், அன்று மதுவந்தி மருத்துவமனைக்கு வேலைக்குச் சென்றாள்.

ஆனால், அவள் எண்ணியதற்கு வெகு தாமதமாக அங்கே வந்து சேர்ந்த சுதர்மன், தீ விழி விழித்து அவளைப் பெண்ணா பேயா என்று கேட்டான்!

கிட்டத்தட்ட லோகநாதனுடைய தாயார் சொன்ன கருத்தையே இன்னும் கொஞ்சம் நாகரீகமாக, ஆனால், இதயத்தைக் குத்திக் கிழித்து, மரணகாயம் ஏற்படுத்தும் கூர்மையுடன் கூறினான்!

## 7 வாழும் முறைமையடி

முன்தினம் சுதர்மனுடன் பேசிய பிறகு, மதுவந்திக்குத் தரையில் கால் பாவாத நிலைதான். நடப்பதே காற்றில் மிதப்பது போலத்தான் இருந்தது!

வீடு வந்து சேரும் வரை இருந்த ஆரவார மகிழ்ச்சி, வீட்டுக்குள் செல்லும்போது, சற்றே அமர்ந்து அடங்கியது!

சுதர்மன் என்னதான் அவசரப்பட்டாலும், பாட்டி நன்கு எழும்வரை, அவளது பொறுப்பும், இருப்பும் இங்கேதானே? பாட்டியைத் தனியே விட்டுவிட்டு, அவளால் வீட்டை விட்டு ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாதே!

அவள் நல்வினை செய்திருந்தால், மாமா சீக்கிரமாகத் திரும்பி வந்து, பாட்டிக்கும் உடம்பு [illegible] நிலை என்றும் மாறப் போவ[illegible]

இதில் ஏக்கம் தோன்றவில்லை என்றால் அவள் மனிதப் பிறவியே



அல்ல.

உள்ளிருந்த மகிழ்ச்சி மாறி, சோர்வு சூழும்போதே, வாயெல்லாம் பல்லாக சுந்தரி அம்மாள் வந்துவிட்டாள்.

"யாரு மதும்மாவா? வர லேட்டாகுதே என்று பார்த்தேன்! உட்கார் காஃபி கலந்து தர்றேன். அதுக்கு முன்னாலே நல்ல சேதியைக் கேட்டுக்கொள்!" என்று தொடங்கி, தண்டபாணியைப் பற்றிய செய்தியைச் சொன்னாள்.

நல்லதோ, கெட்டதோ, அதது சேர்ந்துதான் வரும் என்று சொல்வது மெய்தான் போலும், என்று எண்ணிய சின்னவளின் முகம் பூவாய் மலர்ந்தது!

பார்த்துவிட்டு, "இப்படி நீ சிரித்துப் பார்த்து எவ்வளவு காலம் ஆயிற்று" என்று அவள் முகத்தைத் தடவி, நெட்டி முறித்த சுந்தரி அம்மாள், பாட்டிக்கு இன்னும் மகன் பற்றிய விவரம் சொல்லவில்லை என்றாள்.

"எத்தனையோ நாம் கண்ணிலே பட்டுக் காணாமல் போய்விட்டானா? இந்தத் தடவை, அண்ணன் மகன் எவ்வளவு உறுதி சொன்னாலும், அவனைக் கண்ணாலே பார்த்த பிறகு அப்புறமாகச் சொல்லலாம் என்று இருந்து விட்டேன். சரிதானே, மதும்மா?" என்ற அபிப்பிராயம் கேட்டாள்.

மதுவந்தி தலையாட்டவும், "ஆனால் இந்தத் தடவை வேலைக்கார மருமகப்பிள்ளை இடையிலே திரும்பிப் போகிறது இல்லையே! அதே கவனமாக இருந்து, தண்டத்தைக் கூட்டிக் கொண்டே வருவதாகச் சொல்லிவிட்டான்!" என்று மேலும் விவரம் சொன்னாள் பெரியவள்.

எண்ணிறந்த கற்பனைகளில் இரவெல்லாம் தூக்கமின்றி இனிமையாகத் தவித்தாள் மதுவந்தி!

மறுநாள் பணிக்குச் செல்லும்போதும், அந்தக் கனவுகள் அவளது கருத்தை விட்டு அகலவே இல்லை!

காலையில் இருந்தே சுதர்மன் வரவுக்காக வாயிலையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தால், அவன் வந்து சேர, முன் மாலைப் பொழுதே ஆகிவிட்டது!

என்னவோ, ஏதோ என்றுப் பயந்து, அவனது செல்லுக்கு ரகசியமாக முயன்று பார்த்தால், அவன் அதை எடுக்கவே இல்லை!

"சார்ஜ்" இல்லையோ என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக்கொண்டு வேலையில் கவனம் பதிக்க முயன்றாள் அவள்.

கடைசியாக அவன் மருத்துவமனையின் உள்ளே வரவும், சுற்றுப்புறம் மறந்து, மதுவந்தி ஆவலாக அவனிடம் ஓடிச் சென்றால், சிவந்த விழிகளால் அவளை உறுத்து நோக்கினான் சுதர்மன்.

அன்றிலிருந்து பல காலமாக அவளைத் தொடர்ந்து வாட்டி



வதைத்துக் கொண்டிருக்கும் பயங்கரக் கனவு தொடங்கியது அப்போதுதான்! அந்த வினாடியில் இருந்துதான்!

உல்லாசப் புன்னகையை எதிர்பார்த்து ஓடியவள், இந்தத் தீவிழியைக் கண்டு திகைத்து நிற்க, அருவருப்புடன் பார்த்து "ச்சீ! நீயெல்லாம் ஒரு பெண்ணா? உள்ளே பேய்க் குணத்தை மறைத்து, உத்தமி போல வேஷம் போடுகிறாயா?" என்று சீறினான் அவன்.!

"சு... சுதா?" என்றாள் அவள் ஒன்றும் புரியாமல்.

அரைக்கணம் அவன் பேச்சு தயங்கியது.

ஆனால் உடனேயே "ஆஹா! ஒன்றும் அறியாத பச்சைக் குழந்தை போல, என்ன பாவனை! கண்ணாடி முன்னே நின்று எத்தனை மணி நேரம் பயிற்சி செய்தாய்? வெற்றிகரமான பயிற்சியில்லை? இந்த முகத்தைக் கொண்டு, என்னையும் லோகனையும் போல, இன்னும் எத்தனை பேரை, முட்டாளடித்திருப்பாய்? பத்து? இருபது? அல்லது, உன்னிடம் உயிரை விட்ட விட்டில் பூச்சிகளின் எண்ணிக்கையே மறந்துவிட்டதா?" என்று சரமாரியாக பொழிந்தான்.

கேலியாகவோ, கிண்டலாகவோ அல்ல!

ஏளனமாக! இளக்காரமாக! ஆங்காரமாகவும் கூட!

ஏன்? அவனுக்கு என்ன கோபம்? முந்திய நாள் செல்லில் பேசியது இவனேதானா என்றிருந்தது மதுவந்திக்கு!

வேறிடத்தில் நிச்சயமாகிவிட்டது என்று சொல்லிவிட்டேன். சொல்லலாம்தானே என்று உல்லாசமாக மொழிந்து இருபத்திநாலு மணி நேரம் ஆகவில்லையே!

இடையே என்ன நடந்திருக்கும்?

என்னவோ நடந்திருக்கிறது! அதை அமைதியாக கேட்க வேண்டும்.

அமைதியாக என்று எண்ணியதுமே, அவனை வரவேற்க ஓடியபோது மறந்திருந்த சுற்றுப்புறம், அவளுக்கு நினைவு வந்தது!

அன்று லோகனுடைய தாயார் வந்து கத்தியபோது இருந்ததைவிடவும் அதிகமாக இருந்த நோயாளிகள் கூட்டம் இப்போது 'ஆ'வென்று சுதர்மனையும் அவளையும் பார்த்தது!

நீலிமா அதைக் கவனித்து, கம்ப்யூட்டரை விட்டுவிட்டு மதுவந்தியிடம் ஓடி வந்து, "அக்கா, எல்லோரும் பார்க்கிறார்கள்" என்று தணிந்த குரலில் எச்சரித்தாள்.

"ஏன் பார்த்தால் என்ன? உங்கள் டாக்டரம்மாவின் சாயம் இப்போதுதான் முதல் முறையாக வெளுக்கிறதா, என்ன?" என்று ஏகத்தாளமாகக் கேட்டான் சுதர்மன் "அதுதான் பூசியிருந்த அரிதாரம் அவ்வளவும் அழிந்து, உள்ளிருக்கும் அழுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிட்டதே! குப்[illegible] இங்கே டாக்டர் என்ற பெயரில் [illegible] கொண்டு இருக்கிறது!



12.02.2009 00:18

தாங்க மாட்டாமல், "போதும் நிறுத்துங்கள் சுதர்மன்!" என்று கத்திவிட்டாள் மதுவந்தி!

"ஏன் நிறுத்துவது? உண்மையைச் சொன்னால், உடம்பு எரிகிறதோ? நன்றாக எரியட்டும்! எத்தனை பேர் மனதை எரி நெருப்பாய்ச் சுட்டுக் கொண்டு இருக்கிறாய்! நீயும் கொஞ்சம் எரிய வேண்டாம்? வேண்டுமானால் ஒரு டன் பெட்ரோல் வாங்கித் தருகிறேன். ஊற்றிக்கொண்டு முழுசாக..." என்றவன் அதற்கு மேல் சொல்ல மாட்டாமல் நிறுத்தி, அந்தப் பலவீனத்துக்கும் அவளையே குற்றவாளியாக்கி "சீ, உன்னைக் கண்ணால் பார்ப்பதும் பாவம்" என்று சீறினான்.

என்ன தப்பாக எண்ணினாலும், இவ்வளவு கொடுமையாக சுதர்மனால் பேச முடியுமா?

நெஞ்சை அடைத்ததை விழுங்கிக் கொண்டு, "நான் எரிப்பதும், எரிவதும் இருக்கட்டும், ஏதோ உண்மை என்றீர்களே, அது என்ன உண்மை? அதைச் சொல்லுங்கள்" என்று கேட்டாள் மதுவந்தி.

பிரச்சினை என்னவென்று தெரிந்தால் ஒருவேளை, அதைச் சீர்படுத்தக் கூடுமோ... என்று அப்போதும் ஏங்கியது அவள் மனது.

"அக்கா, 'ரவுண்ட்ஸ்' முடிந்துக்கொண்டு, பெரியவர் கீழே வருகிற நேரம். இதையெல்லாம் பிறகு..." என்ற நீலிமாவை அலட்சியம் செய்து "ஒன்றும் தெரியாதவள் போலவே, இன்னமும் கேட்கிறாயே, உனக்கு என்ன திண்ணக்கம் இருக்க வேண்டும்!" என்று ஆத்திரம் காட்டினான் சுதர்மன்.

என்னவென்று கூடச் சொல்லாமல் திட்டிக் கொண்டே இருப்பதா என்று அவளும் சீற்றமுற்று "அந்த உண்மை என்னவென்று, இன்னமும் நீங்கள் சொல்லக் காணோமே! ஒருவேளை, அப்படிச் சொல்வதற்கு ஒன்றுமே இல்லையோ, எதிலிருந்து மீள்வதற்காகச் சும்மாச் சொல்வதோ என்றல்லவா தோன்றுகிறது" என்றாள் சற்று மிடுக்காகவே.

மெய்யாகவே அப்படித்தானோ என்று கூடத் தோன்றியது அவளுக்கு! ஓர் இளம் பெண்ணுடன் உற்சாகமாக பேசுகிற போதையில், வாயை விட்டுவிட்டு, அதில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று, இப்போது, இப்படிப் பேசுகிறானோ?

இவன் பேச்சை நம்பி, என்னென்ன கனவுகள் கண்டுவிட்டாள்!

ஆனால், சும்மாவே சீறிக் கொண்டிருந்தவனுக்கு, அவளது பேச்சு மேலும் சினமூட்ட, "அறியாதவள் போல, இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால், எனக்கே உன் பேச்சு மெய்தானோ என்று சந்தேகம் வந்துவிடும் என்று நினைத்தாயா? இனி அது, இந்தப் பிறவியில் இல்லை. தெரிந்துகொள்! உண்மைப் பற்றிக் கேட்டாயல்லவா? இதோ, அதையும் ஆசை தீரக் கேட்டுக்கொள்! நீ போட்ட இரட்டை



வேஷம் முழுதாகக் கலைந்துவிட்டது! சிகிச்சை செய்கிறவள் போல, லோகனிடமும், உத்தமி போல என்னிடமும் நடித்து, இருவரிடமும் நீ காதல் நாடகம் நடத்தியது, அம்பலத்துக்கு வந்துவிட்டது" என்றான் அவன்.

சட்டென விஷயம் புரிந்தது மதுவந்திக்கு!

எல்லாம் லோகனின் வேலை! தாயிடம் எப்படி உசுப்பேற்றி விட்டானோ, அதே கதையை சுதர்மனிடமும் நம்பும்படி சொல்லியிருக்கிறான்.!

ஆனால் அவன் என்ன சொன்னாலுமே, இவன் எப்படி அதை நம்பலாம்?

"உங்கள் லோகன் சொன்ன பொய்யை நம்பிக்கொண்டு நீங்கள் பேசுவது..."

"மூடு வாயை!" என்று உறுமினான் சுதர்மன். "லோகன் சொன்னது பொய்யா? பாதகி! அவன் என்னிடம் பொய் சொல்லக் காரணமே இல்லையே, நீ வளைத்துப் பிடித்த இன்னொருவன் நான் என்று, அவனுக்குத் தெரியவே, தெரியாதே! இப்போதும், அவன் உன்னை ஒன்றுமே சொல்லவில்லையடி! உன்னை நம்பிய பாவத்துக்காக தன் உயிரைத்தான் விட்டுவிட இருந்தான். தற்கொலை செய்ய முயன்று, அவன் இப்போது உயிருக்கு மன்றாடிக் கொண்டு இருக்கிறான்! அவனைப் பற்றி ஒரு வார்த்தை தப்பாகப் பேசினால், உன் மூஞ்சி, முகம் எல்லாம் எகிறிவிடும்!"

கொதித்துக் கத்திய அவனது உரத்த குரல், நீலிமா அஞ்சியதை நிகழ வைத்தது!

'ரவுண்ட்ஸ்' போய்க் கொண்டிருந்த பெரிய மருத்துவர் தேவராஜனை எட்டி, அவரை இங்கே கொணர்ந்து சேர்த்தது!

வந்து நின்று, "என்ன சத்தம் இங்கே? இது என் மருத்துவமனை! இங்கே யாரும் சத்தம் போடக் கூடாது" என்று தன் அதிகாரத்தை, சுதர்மனிடம் காட்ட முயன்றார் அவர்!

ஆனால், அவனும் உச்ச கட்ட ஆத்திரத்தில் இருந்தானே!

"ஏன் கூடாது? இங்கே மருத்துவமனைதான் நடத்துகிறீர்களா, வேறே ஏதாவதுமா என்று எல்லோருக்கும் சந்தேகம் வந்துவிடும் என்கிற பயமா? மெய்யாகத்தான் கேட்கிறேன். நீங்கள் நடத்துவது மருத்துவமனைதானா? அல்லது, டாக்டர் என்ற பெயரில் சின்ன பெண்களை வைத்து வேறு தொழிலா?" என்று திருப்பிக் கேட்டான்.

"ஏய், எ...என்ன நீ... நீ என்ன சொல்கிறாய்..." என்று குதித்தவருக்கு, அவரை விடவும் இருபது சென்டிமீட்டர் அதிக உயரத்தில் நின்ற சுதர்மனிடம் அதட்டிப் பேச தைரியம் வரவில்லை!

அவனுக்குப் பதிலாக, [illegible] சுதா!" என்று கதறிய மது[illegible]

12.02.2009 00:18



"ஏ பொண்ணு, உன்னாலே எப்போது பார்த்தாலும் தகராறாகவே இருக்கிறதே! நீ என்ன இங்கே பல் மருத்துவப் பயிற்சிக்கு வந்தாயா? அல்லது, உள்ளே வேறே ஏதேனும் திட்டத்தில் வந்தாயா?" என்று கத்தினார்.

"நல்ல கேள்வி!" என்றான் சுதர்மன் ஏளனமாக! "இந்தக் கேள்விக்கு எனக்குப் பதில் எப்போதோ கிடைத்துவிட்டது! உங்களுக்கு மூளை இருந்தால், இப்போதேனும் கண்டு பிடியுங்கள்! சேச்சே, என்ன கேவலம், இந்தச் சாக்கடைக்குள் எனக்கு மூச்சு முட்டுகிறதே!" என்று அருவருப்புடன் முகம் திருப்பி, வெளிப்புறம் நோக்கி வேகமாக நடந்தான்!

அவனது முதுகை ஆத்திரமுடன் வெறித்துவிட்டு, மீண்டும் மதுவந்தியிடம் கோபத்துடன் திரும்பினார் தேவராஜன். "உன்னாலே எப்போதும் தகராறுதான். இதற்குத் தண்டனையாக, உனக்கு இந்த மாதப் பயிற்சிப் படி கிடையாது!" என்று அறிவித்தார்.

எந்நேரம் பணக் கணக்கில் இருக்கும் அவரது கண்டனம் எப்போதும் பணப் பிடிப்பில்தான் முடியும்!

ஆனால், அவரது பேச்சைக் கவனியாமல், மதுவந்தியுடம் வேக நடையுடன் சென்ற சுதர்மனின் முதுகைத்தான் வெறித்துக் கொண்டிருந்தாள்.

அவனுக்குப் பின்னே அந்த 'ஸ்பிரிங்' கதவு சாத்திக் கொண்டதும் 'ஐயோ' என்று நெஞ்சை அடைத்தது அவளுக்கு!

போய்விட்டானே! போய்விட்டானே! அவளிடம் ஒரு வார்த்தை என்ன என்று கேளாமல், வெறுமனே குற்றம் மட்டும் சாட்டி, வெறுத்து ஒக்கிவிட்டுப் போய்விட்டானே என்று அதே வேதனையாகத் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு, தேவராஜனின் தண்டனை பெரிதாக மனதில் படக்கூட இல்லை!

அது மட்டுமல்ல!

காத்திருக்கும் நோயாளிகள் அமர்ந்திருந்த இடத்திலிருந்து இரண்டு பேர் எழுந்து, தேவராஜனை அணுகியதும் அப்படித்தான்.

கோபத்தில் இருந்த தேவராஜன் அவர்களிடமும் எரிந்துதான் விழுந்தார்.

"என்னப்பா, மெடிகல் ரெப்பா? நேரம் காலம் பாராமல் வந்து விடுவீர்களே! உங்கள் மருந்து, கிருந்து ஒன்றும் வேண்டாம், போங்கள், போங்கள் இடத்தைக் காலி பண்ணுங்கள்" என்றார் உதாசீனமாக.

"டாக்டர், உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு..." என்று அவர்களில் ஒருவர் தொடங்கியதில் குறுக்கிட்டு, "ஒரு வார்த்தையும் வேண்டாம்! உங்கள் சங்காத்தமே வேண்டாம் என்றுதானே சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதற்குமேல் என்ன தொணதொணப்பு?



போங்களப்பா! போய்த் தொலையுங்கள்!" என்று விரட்டினார் பெரிய டாக்டர்.

ஒரு விதமான புன்னகையுடன் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு, அவர்கள் இருவருமே தலையாட்டினர்.

பிறகு, முதலில் பேசியவரே தொடங்கினார் "எங்களுக்கும் அதே கருத்துதான், டாக்டர்., உங்கள் சங்காத்தமே வேண்டாம் என்பது! இரண்டு வாரங்களாக, இங்கே இருந்து உங்கள் மருத்துவ மனையைக் கவனித்துக் கொண்டிருக்கிறோம். இங்கே எதுவும் சரியாக நடப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை! எங்கள் அன்றாட அறிக்கைகளிலேயே, மேலிடம் முடிவு எடுத்து விட்டார்களாம். அனேகமாக அடுத்த வாரம், எங்களுக்கு இந்த இணைப்பு வேண்டாம் என்று, நிறுவனத்திலிருந்து உங்களுக்கு அதிகாரப் பூர்வமாகக் கடிதம் வரும்."

"ஐயோ, ஐயோ, ஐயோ... இ..இ...இணைப்பா? இணைப்பு வேண்டாம் என்றா, நீ...நீங்கள் யார்? தயவு பண்ணி, இந்த அறிக்கையை கொஞ்சம் மாற்றி... அதற்காக என்ன வேண்டுமானாலும்... எதற்கும் நாம் அறையில் போய்ப் பேசுவோம்! உங்களுக்கு வேண்டியதைச் செய்ய நான் காத்துக் கொண்டிருக்கிறேன்! அவசரப்பட்டு எதுவும்..." என்று வாயில் வந்ததை, உளறிக் கொட்டியவரைக் கை உயர்த்தி நிறுத்தினான் ஒருவன்.

"எங்களுக்கு வேண்டியதைப் பெற்றுக்கொண்டு, அறிக்கையை மாற்றி எழுதுகிற ரகம் நாங்கள் அல்ல, மிஸ்டர் தேவராஜன்! வருகிறோம், அடுத்த வாரம் உங்களுக்குத் தகவல் வரும்!" என்று முடித்துவிட்டு, இருவருமாக வெளியே சென்றுவிட்டனர்.!

இந்த மருத்துவமனை இணைப்பில் பெரிதாக குளிர்காய எண்ணியிருந்த தேவராஜனுக்கு ஏமாற்றத்தில் உடம்பு நடுங்கியது!

ஒட்டு மொத்தமாகத் தன் ஆங்காரத்தை எங்கே காட்டுவது என்று பார்த்தவரின் கண்களில், மதுவந்தி மறுபடியும் தென்பட்டாள்.

அவ்வளவுதான்! கோபாவேசத்துடன் ஒரு பேயாட்டமே ஆடித் தீர்த்துவிட்டார்!

நடந்த நஷ்டத்துக்கும், கஷ்டத்துக்கும் மதுவந்திதான் காரணம்! ரொம்பத் தப்பான பெண் அவள்! அவள் நடந்து கொள்கிற விதத்தைப் பார்த்து, எல்லோரும் மருத்துவமனையையே தப்பாக நினைக்கிறார்கள்!

தப்பாக நினைத்து கிட்டத்தட்ட முடிவாகிவிட்டிருந்த இணைப்பை, விலக்கிக் கொண்டு போய் விட்டார்கள்!

இந்த நஷ்டம் வந்தது அவளால்தான்! அவளோ, தாய் தகப்பன் இல்லாத துரதிர்ஷ்டம் [illegible]

12.02.2009 00:19

இப்படிப்பட்ட பெண் இருக்கிற மருத்துவமனைக்கு நோயாளிகளே வரமாட்டார்கள்!

அதுவேறு வருமானம் நஷ்டமாகும்!

இன்னும் அவள் இந்த வளாகத்துக்குள் இருக்கிற ஒவ்வொரு வினாடியும், இன்னும் என்னென்ன கஷ்டங்கள் வருமோ?

"அப்படியே திரும்பி, வெளியே போ! சீக்கிரம் நடையைக் கட்டு!" என்றார் தேவராஜன்!

சும்மா என்றால் எப்படியோ?

சுதர்மன் தன்னை வெறுத்து உதறிவிட்டுப் போய்விட்டானே என்று இந்த இழப்பிலேயே உழன்று, தவித்துக் கொண்டிருந்தவளுக்கு தேவராஜனின் பேச்சு பெரும்பகுதி, செவிப்பறையைத் தாண்டி, உள்ளே போகவே இல்லை எனலாம்!

அப்படியே திரும்பி வெளியே போகச் சொன்னதும்தான், அவள் உடம்பில் சுரணை வந்தது.

இப்போது, வேலையும் போகப் போகிறதா என்று அவள் எண்ணமிடும் போதே, அப்படித்தான் என்று முடித்தார் தேவராஜன்.

வேலையும் போயிற்று என்றால் இனி அவள் என்ன செய்வாள்?

பாட்டிக்குப் பாரமாக இருக்கக் கூடாது என்று, ஏற்கனவே தாயார் சொல்லியிருக்கிறாளே!

சுதர்மனைப் பற்றிய வேதனை நெஞ்சைக் கசக்கிக் கொண்டிருந்தபோதும், அதை முடிந்தவரை ஒதுக்கி, "நான் எந்தத் தப்பும் செய்யவில்லை டாக்டர் சார்" என்று அவரிடம் எடுத்துச் சொல்ல முயன்றாள் மதுவந்தி.

"ஓஹோ! நீ தப்பே செய்யவில்லையாக்கும். ஆனால் வேலை கெட்டு, இப்போ போனானே, அந்த நெட்டையன் வந்து, சும்மாப் பொழுது போகிறதுக்காக, உன்னைத் திட்டிக் கத்திவிட்டுப் போனானாக்கும்? இன்றைக்கு, இந்த நெடுமாறன், இரண்டு நாள் முன்னே, அந்தக் குண்டு பொம்பளை! நாளைக்கு என்ன மாதிரி ஒட்டடைக் குச்சி வந்து நிற்குமோ? போதும்மா, போதும்! உன்னை இங்கே வேலைக்கு சேர்த்ததற்கு இந்த மருத்துவமனையைப் பெரிய அளவில் கொண்டு வரும் வாய்ப்பை அடியோடு அழித்துவிட்டாய்! இன்னும், இதை அடியோடு தரை மட்டமாக்கி விடாமல், தயவு பண்ணி வெளியேறு!" என்று குத்தலும் நக்கலுமாக அவளை மட்டம் தட்டிப் பேசியவர், திடுமெனக் குரலை உயர்த்தினார்.

"அட, வெளியே போ என்றால், உனக்குக் காது கேட்கவில்லை?" என்று அவளை அதட்டிவிட்டு, "டேய் பாலு... பாலு!" என்று எடுபிடி ஆளை அழைத்தார்.

அவன் ஓட்டோடி வந்து நிற்கவும், "இதோ இந்தத் துக்கிரியின் பையை எடுத்து வந்து, இவள் மூஞ்சியில் விட்டெறிந்து வெளியே



தள்ளு! சரியாக ஐந்து நிமிஷத்துக்கு மேல் இவள் உள்ளே இருந்தால், நீயும் வெளியே போக வேண்டியதுதான்! ஓடு!" என்று அவனை மிரட்டினார்.

உள்ளே ஓடிப்போய், மதுவந்தியின் பையை எடுத்துவந்து, அவளிடம் நீட்டி, கெஞ்சுவது போலப் பார்த்தான் பாலு!

சம்பளம் கொடுப்பவரை மீற முடியாமல் அவன் தவிப்பது புரிய, மௌனமாகப் பையை வாங்கிக்கொண்டு, மதுவந்தி வெளியே நடந்தாள்.!

இனிக்கும் என்று நினைத்த எதிர்காலம் போயிற்று! அன்றாட வயிற்றுப்பாட்டைக் கழிக்க உதவிய வேலையும் போயிற்று!

இனி?

இனிப் பெரிதாக என்ன?

பல் மருத்துவம் படித்திருக்கிறாள், தனியாகத் தொழில் தொடங்குவதற்கான உபகரணங்கள், இடத்துக்கான செலவுக்கு அவளிடம் பணம் கிடையாது. ஆனால், 'புன்னகை'யில் போலவே வேறு ஏதாவது மருத்துவமனையில், அவளுக்கு வேலை கிடைக்காமல் போகாது!

அதுவும் அவளது சான்றிதழ்கள் அவளை உயர்வாகவே சொல்லும்போது, வேலை பெரிய பிரச்சினை ஆகாது!

ஆனால்....

ஆனால் சுதர்மன்? அந்தக் காயம் என்றேனும் ஆறக் கூடுமா?

எப்படி முடியும்? பச்சை ரணமாய் வாழ்க்கை பூராவும் இருக்கப் போகிறது என்றுதான், அப்போது அவளுக்குத் தோன்றியது.

ஆனாலும் என்னென்ன சொல்லிவிட்டான்! இதை, இப்படியே, எப்படி விடுவது? விட்டு விட்டால், ஒத்துக் கொள்வது போல ஆகிவிடாதா?

லோகனின் வேலையாக இருக்குமா?

முட்டாளைப் போல, அவளது படத்தை செல்லில் வைத்துக்கொண்டு...

அதைத் தப்பாக நினைக்கக் கூடாது என்று, அவளுக்கே எடுத்துச் சொன்னவன், சுதர்மன்!

இப்போது, எதைக்கொண்டு, அவளைத் தப்பானவளாகக் கருதியிருப்பான்?

ஏதோ ஒரு வகையில், இது லோகநாதனின் வழியில் வந்ததுதான் என்று மதுவந்திக்கு, நிச்சயமாகத் தோன்றியது!

அவனிடமே போய்க் கேட்கலாமா?

தவறாக நினைக்கும்படியாக, நான் ஒரு பார்வையேனும் உன்னைப் பார்த்தது உண்டா? எப்படி இது போல எண்ணினாய் என்று நேரிலேயே கேட்டுவிட்டால்?

12.02.2009 00:19



கேட்க வேண்டியதுதான்! இதை இப்படியே விட்டுவிட்டு ஒதுங்க முடியாது! அவனிடம் விசாரித்து, சுதர்மனுக்குத் தன்னை நிரூபித்தே ஆக வேண்டும் என்று முடிவெடுத்த மதுவந்தி, உடனே தொய்ந்தாள்!

லோகநாதன் ஏதோ மரணப் படுக்கையில் கிடப்பதாக, சுதர்மன் சொன்னானே! அவனை எங்கே பார்த்து, என்ன கேட்பது?

ஆனால் முயற்சி பண்ணிப் பாராமல் விட மனமின்றி, லோகநாதனின் விவரம் அறிவதற்காக, சுதர்மனின் செல்லுடன் தொடர்பு கொள்ள முயன்றாள்.

செல் திரையில் அவளது எண்ணைப் பார்த்ததுமே, அவன் கட் செய்துவிட, அந்த ஒரு முறைக்கு மேல், அந்த முயற்சியைக் கைவிட்டாள்!

நீலிமாவுடன் தொடர்புகொண்டு, லோகநாதன் பரிசோதனைக்காக வரும்போது தகவல் சொல்லச் சொல்லலாமா என்று யோசித்துவிட்டு, அதுவும் பயனற்றது என்று ஒதுக்கினாள்.

மரணப் படுக்கையில் கிடப்பவன், பல் பரிசோதனைக்கு எப்படி வருவான்?

இந்த மரணப்படுக்கை விஷயத்தில், சும்மாவேனும் சுதர்மன் பொய் சொல்லக் கூடும் என்று மதுவந்திக்குத் தோன்றவில்லை!

ஆனால், அவளிடம் இருந்து விலக வேண்டும் என்பதற்காக, ஒரு வேளைப் பொய்யும் சொல்லியிருந்தால்... அப்புறம் அவனிடம், அவள் தன்னை நிரூபிப்பதற்கு அவசியம் என்ன?

தேவையற்று சுதர்மன் காலடியில் போய் விழுவதற்கு, அவன் கடவுளுமல்ல! விலகிப் போகிறவனிடம் கெஞ்சுவதற்கு, அவள் அடியோடு ரோஷமற்றவளும் இல்லை!

சொல்லப் போனால், அந்த ரோஷமே, அவளது முதுகெலும்பை நிமிர்த்தி, எதிர்காலம் பற்றி யோசிக்க வைத்தது!

என்ன பெரிய எதிர்காலம்! இவ்வளவு நாள் போல இருந்துவிட்டால் போகிறது!

தலைக்கு மேல், பாட்டி வீட்டுக் கூரை இருக்கிறது! அங்கிருந்து மாமா வெளியேறச் சொல்லப் போவதில்லை! பாட்டி, அப்படிச் சொல்ல விடவும் மாட்டாள்.

பண விஷயத்தில் மாமா ஒரு மாதிரி என்பது அவள் அறிந்ததே!

தம்பி என்றாவது வந்து கேட்கக் கூடும் என்பதற்காகவே, தாயார் பணத்தைச் சிறிதும் தொடாமல், வீட்டுச் செலவுக்குத் தங்கள் பணத்தையே காயத்ரி செலவு செய்ததே!

தாயாருக்குப் பிறகு, மதுவந்தியும் அதேபோலத்தான் செய்து வந்தாள்!

இது, பாட்டிக்கும் தெரியும் என்பதே, பேத்தியின் அனுமானம். தெரிந்தும் தடுத்தது இல்லை!



தன் மருந்துச் செலவு, வாடகை வருமானம் போன்றவற்றைக் கட்டாயம் கணக்கு மட்டும் எழுதச் சொல்லுவாள்! மதுவந்தியும் எழுதி வைப்பாள்.

இன்று கூட, மாமா வந்ததும் விரும்பினால் பார்க்கட்டும் என்று, அந்தக் கணக்கு நோட்டை வெளியே எடுத்து வைத்து விட்டுத்தான் பணிக்குக் கிளம்பிச் சென்றாள்.

கைப்பையில் இந்த சில நூறுகள், பாங்கில் இருந்த வெகு சில ஆயிரங்கள் எல்லாம் செலவாகுமுன், இன்னொரு வேலை கிடைத்து, எப்போதும் போல வீட்டுச் செலவை அவள் பார்த்துக் கொண்டால், அப்புறம், அந்த வீட்டில் மதுவந்தி வசிப்பதில், அவளுடைய மாமனுக்கு எதிர்ப்பு ஏதும் இருக்கப் போவதில்லை!

அவரைப் பொறுத்த வரையிலும் இதுதானே வசதியும் கூட?

பிறகென்ன?

வாழும் காலம் முழுவதும், பாட்டிக்குப் பணிவிடை செய்வதும், மருத்துவத்தை முழுக் கவனக் குவிப்புடன் செய்வதுமாகக் காலம் கழிந்து விடப் போகிறது! இதற்கு மேல் இனி அவளுக்கு வாழ்க்கையில் எதுவும் தேவையும் இல்லை.! காதல், கல்யாணம்... இன்னும் எந்தக் கண்றாவியும்!

இடையில் ஓயாது சுதர்மனிடம் ஓடிய மனதைப் பிடிவாதமாகக் கட்டுப்படுத்தி, தன் எதிர்காலத்தைப் பற்றி ஒரு வழியாக மதுவந்தி யோசித்து முடித்தாள்.

அதன்பிறகே, ஓய்ந்து சரிந்திருந்த பூங்கா இருக்கையை விட்டு எழுந்து, மதுவந்தி வீட்டை நோக்கிச் செல்லலானாள்.

அடுத்த வேலை கிடைக்கும்வரை, செலவைச் சுருக்கிச் செய்ய வேண்டும் என்று எண்ணி, பஸ் பிடித்து, மதுவந்தி வீட்டுக்குச் சென்றபோது, வீட்டு முன் நாலைந்து பேர் நிற்பதைக் கண்டாள்.

மாமா வந்துவிட்டான் போலும்., அவனைப் பார்க்க வந்திருக்கக் கூடும் என்று எண்ணியவாறு வீட்டை நெருங்கினால், நடு வீட்டில் ஐஸ் பெட்டியுள் பாட்டி படுக்க வைக்கப்பட்டிருந்தாள்.

காலையில் சன்னமாய் முறுவலித்துத் தலையசைவால் விடை கொடுத்து அனுப்பியவள்!

எதையெதையோ யோசித்துக் கொண்டு நேரம் போக்காமல், மருத்துவமனையிலிருந்து நேராக வீட்டுக்கு வந்திருந்தால், பாட்டியை உயிரோடு பார்த்திருக்கலாமோ?

நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்த அழுகையைப் பிறர் முன் காட்டக் கூசி, தன் அறையை நோக்கி நகர்ந்தவளை, "எங்கே போகிறாய்?" என்று கேட்டு நிறுத்தினான் தண்டபாணி.

"ஏ...என் அறைக்கு..." என்றாள் மதுவந்தி கண்ணீர் அடைத்த கம்மிய குரலில்.

12.02.2009 00:19

"இந்த வீட்டில் உனக்கு எந்த அறையையும் தந்ததாக எனக்கு நினைவு இல்லையே!" என்றான் அவன் நக்கலாக.

# 8 வாழும் முறைமையடி

தண்டபாணி சொன்னது. மதுவந்திக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை!

இந்த வீட்டில் அவளுக்கு, தண்டபாணி என்ன இடம் தருவது?

பத்து ஆண்டுகளாக அவள் வசிக்கும் அவளது வீடு... இல்லை., அவளுடைய பாட்டி வீடு... பா... பாட்டி இல்லாது போனதால், இப்போது மாமாவின் வீடா?

உனக்கு இடம் தந்த நினைவு இல்லை என்றால், இங்கே இடம் கிடையாது என்றுதானே பொருள்?

இது என்ன பைத்தியக்காரத்தனம்! யாருமற்ற அக்கா மகள் எங்கே போவாள் என்று யோசிக்க வேண்டாமா?

அல்லது வேடிக்கை பேசுகிறானா? வேடிக்கை பேசுகிற நேரமா இது?

ஆனால், கூடப் பிறந்தவளின் மறைவுக்கே வராதவன், அந்த அக்கா மகளிடம் வேடிக்கை பேசுவானா?

கூடவே, அந்த அக்கா மகளைப் பற்றிய அக்கறையையும் அவனிடம் எதிர்பார்க்க முடியாதுதானே?

பின்னே?

திகைத்து நோக்கும்போதுதான், சூழ இருந்தோரின் அமைதியும் மனதில் பட்டது! பேச்சற்றுப் பார்த்துக் கொண்டிருந்த விதம்!

முக்கியமாக, சுந்தரி ஆன்ட்டியின் பரிதாபமும் பயமும் கலந்த பார்வை!

அவள் அருகில் நின்ற, உறவுக்காரக் காவலரின் சங்கடப்படும் முகத்தோற்றம்! என்னடா இது... கின்னு வெட்ட பூதம் கிளம்பியதே' என்பது போல.

அப்படியானால், இங்கே என்னவோ நடந்திருக்கிறது! மாமா சற்றும் மாறாமல் புத்தியைக் காட்டிவிட்டாரா?

"சுத்திச் சுத்தி என்ன பார்வை? என்னைப் பார்த்து, எனக்குப் பதில் சொல்லு! உனக்கு இந்த வீட்டிலே இருக்க, நான் எப்போது இடம் கொடுத்தேன்?"

அத்துமீறியவளாக அவளை நிற்க வைத்து கேள்வி கேட்டான் தண்டபாணி.

அனிச்சை போலத் தன்னை மீறி மதுவந்தியின் பார்வை



பாட்டியிடம் பாய்ந்து மீண்டது.

பாட்டியின் பேச்சில் சூசகமாக எதையோ சொல்வது போலச் சில சமயம் அவளுக்குத் தோன்றுவது உண்டே! அது, இதுதானோ? உரிமைக்குரியவன் என் முகட்டுப்பிள்ளைதான்., எனவே பிறகு உனக்கு, இங்கே ஒன்றும் இராது என்றுதான் உணர்த்தினாளோ?

வாயாலும் சொல்லியிருக்கலாமே! இந்த அதிர்ச்சியேனும் இருந்திராதே!

"கேட்கிறது நான். அங்கே என்ன பார்வை? அந்தச் சவம் எழுந்து வந்து, உனக்காகப் பதில் பேசும் என்று நினைத்தாயா?"

சவம்!

பெற்ற தாயை இப்படிப் பேசுகிற மூர்க்கனிடம் என்ன நியாயம் எடுபடும்? தணிந்துதான் போயாக வேண்டும்.

கலங்கிய மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு, "சாரி, மாமா. பாட்டி விஷயம் அதிர்ச்சியாக இருந்ததில்.." என்றவளைக் குறுக்கிட்டு, "என்ன அதிர்ச்சி? ரொம்ப நாளாகக் கிழவி படுக்கைதானே? இன்றைக்குப் பொட்டென்று போய்விட்டது! ஒரு டாக்டராக இருந்துகொண்டு, அதிர்ச்சி, அது இது என்று கதை விடாதே! கதை விட்டுப் பேச்சையும் மாற்றாதே! இந்த வீடு என்னது! இங்கே, இத்தனை நாள் உட்கார்ந்திருந்து, என் சொத்தை, உன் தாயும் நீயுமாக உறிஞ்சித் தின்றது போதும். வெளியே போ!" என்றான் அவன் இளக்கமற்ற குரலில்.

வீட்டினுள் வந்ததும் தண்டபாணி பேசிய முதல் வாக்கியத்திலேயே குறிப்பை உணர்ந்துவிட்ட, மதுவந்திக்கு, அவன் வெளியேறச் சொன்னது ஒன்றும் பெரிய அதிர்ச்சியாக இருக்கவில்லை!

ஆனால், வெறும் இரண்டு மணி நேரத்தில், இது இரண்டாவது வெளியேற்றம்!

இல்லை! சரியாகச் சொல்வதானால் மூன்றாவது!

சுதர்மனின் வாழ்விலிருந்து வெளியேற்றப்பட்டதல்லவா முதலாவது?

அதனோடு ஒப்பிடும் போது, இது ஒன்றுமே இல்லை என்றாலும், இப்படித் திடுமென வீட்டை விட்டு வெளியே போ என்றால், அவள் எங்கே போவாள்?

"மாமா, ப்ளீஸ்! என்னைத் தப்பாக நினைத்துப் போகச் சொல்லாதீர்கள். பாட்டி பணத்தை, அம்மாவோ, நானோ எடுத்துக் கொண்டதே இல்லை! நீங்கள் வந்ததும் பார்க்க வசதியாக, வரவு செலவுக் கணக்கு எழுதியே நோட்டுப் புத்தகத்தைக் கூட எடுத்து வைத்திருந்தேனே!" என்றாள் மதுவந்தி மெதுவாக.

இத்தனை பேரை வைத்துக் கொண்டுதானா, தண்டபாணி, இந்தப் பேச்சுப் பேச வேண்டும் [illegible]



பாட்டியின் காரியம் முடிந்து, இவர்கள் எல்லோரும் போன பிறகு கேட்டால் எவ்வளவு கண்ணியமாக இருந்திருக்கும்?

"பார்த்தேன்... பார்த்தேன்" என்றான் அவன் அசுவாரசியமாக, "எல்லாம் நீ எழுதிய கணக்குத்தானே? அம்மாவின் மருந்துச் செலவு இவ்வளவு ஆயிற்று என்றால் நம்புகிறவன் முட்டாளாகத்தான் இருக்க வேண்டும்!"

இவனை எப்படி உண்மையை ஒத்துக் கொள்ள வைப்பது?

சொல்வது அறியாமல் மதுவந்தி தவித்தபோது, சுந்தரி அம்மாள் முன்னே வந்து, "தண்டபாணி தம்பி, நம்ப மதுவந்தி பொய் சொல்லாதுப்பா! மெய்யாலுமே, பாட்டியம்மாவின் மருந்துச் செலவு ரொம்ப அதிகம்தான். மருந்து அட்டையிலே, நானே பார்த்திருக்கிறேனே!" என்று மதுவந்தியை ஆதரித்துப் பேசச் சின்னவளுக்கு ஆறுதலாக இருந்தது!

ஆனால், "கூட்டுக் களவாணித்தனமா? திருட்டில் எத்தனை சதவீதம் உங்களுக்கு?" என்று தண்டபாணி கேட்கவும், அந்த அம்மாளின் வாய் முகம் வெளுத்துப் போயிற்று!

வெற்றிகரமாகப் பக்கத்து வீட்டுப் பெண்மணியை வாய் மூட வைத்துவிட்டு, மறுபடியும் தமக்கை மகளிடம் திரும்பினான் தண்டபாணி.

"வக்காலத்து வாங்க ஆளெல்லாம், முன்னேற்பாடாகத் தயார் பண்ணி வைத்திருக்கிறாயே! கெட்டிக்காரிதான்! பரவாயில்லை! ஆனால், இதெல்லாம் அன்றாடச் செலவு! ஓர் அளவுக்கு மேல், திருட முடியாது! போய்த் தொலைகிறது என்று விட்டுவிடவும் செய்யலாம்! ஆனால், லட்சக்கணக்கில் நடந்திருக்கும் பெரிய திருட்டு? அதை, எப்படிச் சும்மா விட முடியும்?"

திகைத்து "பெரிய திருட்டா? அப்படி ஒன்றும் இங்கே நடந்தது இல்லையே!" என்றாள் அவள் மெல்லிய குரலில் தவிப்புடன்.

"ஏன் நடக்கவில்லை? நீ இந்தப் படிப்புக்காகச் செலவு செய்தது, எத்தனை லட்சம்? அது, என் சொத்தைத் திருடிக் கட்டியதுதானே?" என்று தண்டபாணி கேட்ட பிறகுதான், மதுவந்திக்கு விஷயம் புரிந்தது!

பாட்டியின் பணத்தில் அவள் படித்ததாகக் கருதியே, தண்டபாணிக்கு இவ்வளவு கோபம்! அப்படியானால், அது இல்லையென்று தெரிவித்தாலே, அவனது ஆத்திரம் அடங்கிவிடும்!

"ஐயோ, அப்படி இல்லை, மாமா. என் அம்மா வேலை பார்த்தார்கள். பாட்டிக்காக வி.ஆர்.எஸ் வாங்கிய பணத்தில்தான் நான் படித்தேன்!" என்று மதுவந்தி விளக்கியதைத் தண்டபாணி காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை!

"ஏ...ய்! மூடுடி வாயை! ஒரு சில்லிசிக்கன் சரியாகச் செய்யத்



தெரியாத முட்டாள் உன் அம்மா! அவள் போய் வேலை பார்த்து உன்னை டாக்டராக்கினாளாமா? இந்தக் கதையெல்லாம் என்னிடம் விடாதே! முதலில் என் பணத்துக்கு என்ன வழி? அதைச் சொல்லு! குறைந்தாலும், பத்துப் பதினைந்து லட்சமேனும் செலவாகி இருக்காது? அது, இப்போது இப்பவே என் கைக்கு வந்தாகணும்!"

இந்த முகட்டுப் பேச்சுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் மதுவந்தி திகைத்து நின்றாள், உண்மையைச் சொன்னால் ஒத்துக் கொள்ளவும் மாட்டேன் என்கிறான்!

எங்கேனும் திரும்பக் கிடைத்துவிடும் என்பதாலோ என்னவோ வேலை போனது, மதுவந்திக்கு, அப்போது பெரிதாகத் தெரியவில்லை! ஆனால், மற்ற இரு இழப்புகளும், தாங்க முடியாத சுமையாக நெஞ்சை அழுத்தலாயின.

சுதர்மனின் புறக்கணிப்புக்காக ஒரு மூச்சு, பாட்டியின் மறைவுக்காக ஒரு மூச்சு அழுது தீர்த்தால், இதயத்தைச் சுற்றிலும் அழுத்தும் இந்த இறுக்கம் கொஞ்சம் குறையக் கூடும்!

ஆனால், இந்த நேரத்தில் பணக் கணக்கிலேயே மூழ்கியிருக்கும் மாமனுக்கு, இப்படியோர் உயிர் துடிப்பது புரிவது கூட கடினம்தான்!

அக்கம் பக்கத்திலிருந்து, இந்த மரணத்துக்காக வந்து, தண்டபாணியின் போக்கையும் பொறுத்து, இன்னமும் சிலர் நின்றிருந்தனர்.

அவர்கள் எல்லோருமே பாட்டியிடமும் மதுவந்தியிடமும் அன்பு காட்டுகிறவர்கள். ஒரு சிலருக்கு, மதுவந்தி இலவசமாக வைத்தியமும் பார்த்திருக்கிறாள். அதற்காக இல்லை என்றாலும், ஆண்டுக் கணக்காக அதே இடத்தில் இருந்து, பார்த்துப் பழகியவர்கள் என்பதும் இருந்தது!

அவர்களுள் ஒருவர், முன்னே வந்து "தண்டபாணி, பணக் கணக்குப் பேசுகிற நேரமாப்பா, இது? முதலிலே அம்மாவை நல்லபடியாக அடக்கம் செய்கிறதைப் பாரப்பா! அப்புறமாக உன் கணக்கு வழக்கைத் தீர்த்துக் கொள்!" என்றார்.

"எல்லாம் அவனவன் பணமாக இருந்தால் தெரியும்!" என்று முணுமுணுத்தபோதும், அவரை ஒரேடியாகத் தூக்கி எறிந்து பேசத் தண்டபாணி தயங்கினான்.

ஏற்கனவே, துக்கம் என்று வந்த பலரும், அவனது பேச்சுப் பிடிக்காமல், உடனே கிளம்பிப் போய்விட்டது, அவன் அறிந்ததே.

இவர்கள், அவன் தாய்க்கும், கூடவே அந்த மதுவந்திக்கும் கொஞ்சம் நெருங்கிய சுற்று என்பதால், பொறுமையாக இருக்கிறார்கள்!

இந்த நெருக்கம் [illegible]
இல்லாவிட்டாலும், இவ[illegible]

பணத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் படியாக ஆகிவிடும் என்பதால், அப்போதைக்கு தண்டபாணி தன் நாவை அடக்கிக் கொண்டான்.

எனவே, ஏதோ விட்டுக் கொடுப்பது போன்ற பாவனையில் "சரி, சரி உங்கள் இஷ்டம்! எனக்கு இந்த மாதிரி விஷயத்தில் ஒருகண்ணை... ஒரு விவரமும் தெரியாது! அதனால், அடக்கத்துக்குத் தேவையான ஏற்பாடுகளை, நீங்களே செய்யுங்கள்! ஆனால், சிக்கனமாகச் செய்யுங்கள். செத்தவர்களுக்காக வீணாக அதிகச் செலவு செய்ய, எனக்கு விருப்பம் இல்லை" என்று அரைகுறையாக, ஓர் அனுமதி கொடுத்தான்.

சிறு வயது தண்டபாணியை அறிந்தவர்கள், அவர்களில் இருந்தார்கள். அவனுக்காக மட்டும் என்றால் எட்டிக்கூட பார்த்திருக்க மாட்டார்கள்.

ஆனால், சுந்தரி அம்மாளைப் போலவே மதிப்புக்குரியவளாய் அவன் தாயையும், குணவதியாக அவன் சகோதரி காயத்ரியையும் பார்த்துப் பழகியவர்கள்.

இப்போது, தாயின் மறு வடிவே போல வளர்ந்து, பதுமையாய் நடமாடும் மதுவந்தியிடமும் அவர்கள் எல்லோருக்கும் பிரியம்தான்.

ஆனால் இன்னொரு குடும்ப விவகாரத்துக்குள் தலையை நீட்ட முடியுமா?

பெரியவளின் கடைசிக் காரியங்களைத் தண்டபாணியின் விருப்பம் போலச் சிக்கனமாக முடித்துவிட்டு, எல்லாரும் அவரவர் வழி சென்றனர்.

இதில், மதுவந்தியின் நிலைமைதான் பரிதாபமாகிப் போனது!

குளித்துத் துணி மாற்றக் கூட வழியின்றி, அவளது அறையைத் தண்டபாணி பூட்டி விட்டுத்தான் தாயின் கடைசிக் காரியத்துக்காகப் போயிருந்தான்.

சுந்தரி அம்மாளின் வற்புறுத்தலுக்காகத் தலையில் தண்ணீர் ஊற்றி, துவைத்துக் காயப் போட்டிருந்த ஒரு சுடியை அணிந்த மதுவந்திக்கு, நெற்றியில் ஒரு பொட்டு வைக்கக் கூட வழியில்லாமல் போயிற்று.!

அவளது அறை மட்டுமல்ல, பாட்டியின் அறை, துணிமணி போன்றவைகளை வைக்கும் அறை எல்லாமே பூட்டப் பட்டிருப்பதைப் பார்க்கையில், மதுவந்தி மிகவும் அவமானமாக உணர்ந்தாள்!

அவள் எதையாவது எடுத்துவிட... அதாவது அவன் கணிப்பில் திருடி விடக் கூடும் என்றுதானே, மாமா இப்படி செய்திருக்கிறான்!

அப்படி திருடிச் சேர்க்கிறவள், அவனை அழைத்துவர, இவ்வளவு தூரம் முயற்சி செய்வாளா? கிட்டத்தட்டப் படுக்கையிலேயே கிடந்த



தாயாரால் இதெல்லாம் இயலாது என்பதாவது தெரிந்திருக்கும் தானே?

செலவு அவளது என்று வேண்டுமானால், தண்டபாணிக்கு தெரியாதிருக்கலாம். ஆனால், அவள்தான் முயற்சி செய்தாள் என்பதை, நிச்சயமாக அறிந்துதான் இருப்பான்?

எவ்வளவு முயற்சி, அதுவும் கடைசியில் என்னென்ன ஆசைகளோடு என்ன மாதிரி முயற்சி செய்தாள் என்று எண்ணம் ஓடுகையில், தானாகக் கண்ணீர் பொங்கி வழியலாயிற்று!

ஐயோ பாட்டி, எனக்கு எதுவுமே இல்லாது போயிற்றே என்று முகத்தைக் கைகளில் புதைத்து விசித்தவளை, முதுகை வருடி எழுப்பினாள் சுந்தரி அம்மாள்.

"கண்ணு சீக்கிரமாக, இந்தத் தோசையை வாயிலே போட்டு விழுங்கிவிட்டு, இந்தக் காஃபியை குடித்துவிடும்மா. தண்டம் உன் சாப்பாட்டைக் கவனிப்பான் என்று எனக்குத் தெரியவில்லை! அதனாலே, நம்ம வீட்டிலேயே போட்டு கொண்டு வந்தேன். ஆனால், அந்தக் கடங்காரன், அதைச் சொன்னால் நம்பக் கூட மாட்டான். சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டு, தட்டைக் கொடும்மா. அவன் திரும்பி வரதுக்குள்ளே, நான் போயாகணும். இன்னொரு தரம், கூட்டுத் திருட்டு, அது, இது என்று சொன்னான் என்றால் தாங்க முடியாது, செல்லம்!" என்றாள் கெஞ்சுதலாக!

மதுவந்திக்கும் தாங்க முடியாதுதான்! ஆனால், சுந்தரி அம்மாளைப் போலப் போவதற்கு, அவளுக்கு இடம் இல்லையே!

இடம் இருக்கும் என்று நினைத்தது எல்லாம் பொய்த்துப் போயிற்று!

ஆனாலும் எப்படி...

இல்லை! அதெல்லாம் பயனற்ற வெறும் கனவு. இப்போது அதை நினைப்பதே நேர விரயம்! யோசிப்பதற்கும், யோசித்து அதை உடனடியாகச் செய்வதற்கும் எத்தனையோ காரியங்கள் வரிசையில் காத்து நின்றன.

மீண்டும் பொங்கிய கண்ணீரை அடக்கிக்கொண்டு, செய்ய வேண்டியவை பற்றி, மதுவந்தி திட்டமிடலானாள்.

முக்கியமாக, அடுத்து உடனே செய்ய வேண்டியது வசிப்பதற்கு, ஓர் இருப்பிடம் தேடுவது!

அப்புறம், அடுத்த வேலை தேடுவது! எங்காவது ஒரு சின்ன 'கிளினிக்'கில் சொற்பச் சம்பளத்தில் என்றாலும்... இப்போதென்ன, பெரிய மருத்துவமனை என்பதால், தேவராஜன் சார் அதிகமாகவே ஊதியம் கொடுத்தார்?

12.02.2009 00:20

எங்கேயுமே, அந்த அள [illegible] பல் மருத்துவம் படித்து முடித்ததாக அவள் பெற்றிருந்த



சான்றிதழையும் அவளது துணிமணிகளையும் எடுத்துக்கொண்டு, வேறு எதையும் எடுத்துப் போகவில்லை என்று, மாமாவுக்கு அவைகளை உதறிக் காட்டிவிட்டு எடுத்துப் போக வேண்டும்...

தன்னை நம்பாமல் அறைகளைப் பூட்டிச் சென்றிருப்பவனின் வீட்டுக்குள் இருக்கவும் மனமற்று, வெளிவாயில் வராந்தாவிலேயே தான் சுவரில் சாய்ந்து கிடந்தாள் அவள்!

தெருவில் சென்ற ஓரிருவரின் பார்வை, வேதனையாகத்தான் இருந்தது! ஆனால் உள்ளிருப்பது அசிங்கம் ஆயிற்றே!

அவளுடைய தாயார், பாட்டி, அவள் மூவருமாக எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்று மதுவந்தியின் கைப்பையில் இருந்தது! அதை எடுத்துப் பார்த்து ஆறுதல் அடைய முயன்றபடி, சோர்வுடன் அங்கேயே கிடந்தாள் அவள்.

சுந்தரி சொன்னது போலவே, திரும்பி வந்த தண்டபாணி, உடையை மாற்றிக்கொண்டு, உடனே வெளியே செல்லக் கிளம்பி விட்டான்.

கிளம்பிச் செல்கிறவன் எப்போது திரும்பி வருவான்., வருவானா அல்லது, வரமாட்டானா என்று எதுவும் தெரியாமல், எவ்வளவு நேரம் இப்படி உட்கார்ந்திருப்பது.

"உங்களிடம் பேச வேண்டும், மாமா!" என்றாள் மதுவந்தி மெதுவாக.

"தாராளமாய்! சொல்லு என் பணத்தை எப்போது திருப்பித் தரப் போகிறாய்?" என்று அதிலேயே நின்றான் அவன்.

"தயவு பண்ணி இப்படியே பேசாதீர்கள் மாமா, நான் படித்தது, அம்மாவின் பணத்தில்தான். பாட்டிக்காக அம்மாவும் நானும் இந்த வீட்டில் இருந்தோமே தவிர, எங்கள் செலவுக்குப் பாட்டி பணத்தை எடுத்தது இல்லை! செலவுக் கணக்கு நான் எழுதியது என்று நம்பாவிட்டாலும் அக்கம், பக்கம் யாரிடம் வேண்டுமானாலும் நீங்கள் கேட்டுப் பாருங்கள். உங்களைத் தேடி அழைத்து வருவதற்குக் கூட செலவுக்கு என் சம்பளத்தில்தான் கொடுத்திருக்கிறேன்! உங்களை கூட்டி வந்த போலீஸ்காரரிடம் வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள்!" என்று தெளிவாக எடுத்துரைத்துத் தண்டபாணிக்கு, உண்மையைப் புரிய வைக்க முயன்றாள் மதுவந்தி.

ஆனால், "யாரிடம் கேட்டாலும் என்ன பிரயோஜனம்? எல்லாம் நீ எழுதி வைத்தது போல நீயே சொல்லி வைத்ததும்தானே? அதைத்தானே, அவர்களும் சொல்லுவார்கள்? அத்தோடு, கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு எனக்கு மூளையில்லையா? என் பணம் பத்து லட்சத்தையும், எப்போது தரப் போகிறாய்? அதை மட்டும் சொல்லு. மற்ற உன் பிலாக்கணத்தைக் கேட்டுக் கொண்டிருக்க, இப்போது எனக்கு நேரம் இல்லை



பசிக்கிறது. சாப்பிடப் போக வேண்டும். சீக்கிரம் சொல்லு!" என்று தன் கருத்திலேயே பிடிவாதமாக நின்று அவசரப்படுத்தியவனை ஒரு கணம் வெறித்துப் பார்த்தாள் அவள்.

அவனுக்கு மட்டும்தான் பசிக்குமா?

சுந்தரி ஆன்ட்டியின் அன்பான முன் யோசனை இல்லையென்றால் இப்போது மதுவந்தி பட்டினிதானே கிடக்க வேண்டும்?

உறவு என்கிற அன்பு இல்லாவிட்டால் போகிறது! மனிதாபிமானம், சாதாரண நாகரீகம் எதுவுமே இல்லாதவனிடம் என்ன சொல்லியும், எந்தப் பயனும் இராது!


இவனிடம் பேசுவது வீணே!

"நான் சொல்வது உண்மை மாமா. அதை நம்புவதும், நம்பாததும் உங்கள் விருப்பம்! இப்போது, என் அறைக் கதவைத் திறந்து தந்தால், என் பொருட்களை எடுத்துக் கொண்டு, நான் இங்கிருந்து கிளம்பிப் போய் விடுகிறேன்" என்றாள் அவள்.

"நன்றாகத்தான் ஜோக்கடிக்கிறாய்!"என்றான் தண்டபாணி இளக்காரமாக! "நான் உனக்குக் கதவைத் திறந்து விடுவேன். நீ உன்னால் முடிந்த கொள்ளை அடிப்பாயாக்கும்? எனக்கென்ன பைத்தியமா? அதெல்லாம் பேச்சே கிடையாது! முதலில் என் பணம் வரட்டும். அதற்குப் பிறகு உன்... உன் என்ன? எல்லாம் என் அம்மாவை உறிஞ்சி வாங்கியதுதானே? இப்போது, என்னது! அதில் ஒன்றிரண்டு துணி பிச்சை போடுகிறேன் எடுத்துப் போ! ஆனால், முதலில் என் பணத்துக்கு வகை செய்யாமல் எதுவும் பெயராது!" என்று இளக்கமற்ற குரலில் கூறி முடித்தான்.

முதல் முறையாக, கவலை, வருத்தத்தை மீறி மதுவந்தி பயந்து போனாள்.

## 9 வாழும் முறைமையடி



மற்றவர் என்ன சொல்கிறார் என்பதைக் கொஞ்சம் கருத்தில் ஏற்காமல், பழுதுபட்ட இசைத்தட்டு போல, தண்டபாணி, தன் சொன்னதையே சொல்லவும் செய்வது அறியாமல், மதுவந்தி சற்று நேரம் திணறிப் போனாள்.

அவளது படிப்பு, அவளைப் பெற்றவளின் வியர்வையும், ரத்தமும் என்பது, ஊரே அறிந்த விஷயம்!

12.02.2009 00:20

ஆனால், மாமன் ஒத்து [illegible]

அப்படிப் பாட்டியின் ப [illegible] ய

தாயும் வாழ்ந்திருந்தால், பாங்கில், பாட்டியின் கணக்கில் இத்தனை

லட்சங்கள் இருக்குமா என்று யோசிக்கவே மறுக்கிறானே!

போகிறான்... என்ன வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட்டும் என்று விட்டுவிடலாம் என்று பார்த்தால், படிப்புக்கான செலவு என்று, அவனே ஒரு தொகைக் கணக்கிட்டு, அதைத் திருப்பித் தந்தே ஆக வேண்டும் என்று கத்தல்!

எல்லாவற்றுக்கும் மேலாக, பணத்தைத் திருப்பித் தருமுன் அவளது பொருட்களைக் கூடத் தொட விட மாட்டேன் என்று, அது வேறு அழிச்சாட்டியம்!

அவளது ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்கள் பற்றிக் கூட, அவளுக்குக் கவலை இல்லை! எதுவுமே இல்லாது போனாலும், பரவாயில்லை... போகட்டும் என்பதுதான்!

ஆனால் அவளது 'கோர்ஸ் கம்ப்ளீஷன் சர்ட்டிஃபிகேட்' அவளுக்குக் கட்டாயம் வேண்டுமே! அது இல்லாமல், அவளால் ஒன்றுமே செய்ய முடியாதே!

சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கும் இந்த மூர்க்கனிடம் இருந்து, இதை எப்படி வாங்குவது?

பன்னிரண்டு வயதில், அவள் பார்த்த மாமன். அவன் எப்படிப்பட்டவனாக இருக்கக் கூடும் என்பதே யோசியாமல், பாட்டியின் நலன் ஒன்றை மட்டுமே நினைத்து அவனைத் தேடிக் கூட்டிவர அவள் செய்த ஏற்பாடுதான்!

அது, அவளுக்கே இவ்வளவு பெரிய இடும்பையாக முடியக் கூடும் என்று யாருக்குத் தெரியும்?

அல்லது, தெரிந்துதான், அவளுடைய தாயார் காயத்ரி அதற்கு ஏற்பாடு செய்யவே இல்லையோ?

எப்படியோ, கடைசியாக மகளைப் பார்த்துவிட்ட திருப்தியோடு பாட்டியின் உயிர் அடங்கியிருக்கிறது!

அந்த வரையில் ஆறுதல் பட்டுக் கொள்ள வேண்டியதுதான்!

மெய்யாகவும், அந்த வகையில் அவளுக்குத் திருப்திதான்!

அந்த திருப்தியே, மதுவந்திக்கு இன்னும் எவ்வளவோ பெரிதாகத் தோன்றியிருக்கக் கூடும்!

ஆனால், அன்றளவில் மலையாக நின்ற பிரச்சினையில், அந்த இனிய, இதமான உணர்வு, கடலில் கரைத்த பெருங்காயமாக, கரைந்த அடையாளமே இல்லாது, காணாமல் போயிற்று!

இப்போது அவளது சர்ட்டிஃபிகேட்டை, தண்டபாணியிடம் இருந்து எப்படி வாங்குவது என்று, அது ஒன்றுதான்... அது ஒன்று மட்டுமேதான்... மற்றதையெல்லாம் மறைத்து, அவள் முன்னே பூதாகரமாக எழுந்து நின்றது!

சுதாமனின் அநியாயக் குற்றச்சாட்டு கூட, அப்போது அவளுக்கு மறந்து போயிற்று எனலாம்.



இவனிடமிருந்து, சான்றிதழை எப்படி வாங்குவது என்று, அதே யோசனை! எவ்வளவு யோசித்தும் ஒன்றும் தோன்றாமல், கடைசியாக உண்மையையே சொல்லிக் கேட்டாள்.

ஆனால் அவனுக்கு உவப்பாயிருக்கும் என்று அவள் ஊகித்த விதமாக!

"பாருங்கள் மாமா, என்னிடம் மெய்யாகவே, ஓர் இரண்டு மூன்று ஆயிரங்களுக்கு மேலாக பணம் கிடையாது. பார்த்துக் கொண்டிருந்த வேலையில் இருந்தும் வெளியேறும்படி ஆகிவிட்டது! அதனால் என்... அதாவது, அலமாரியில் இருக்கும் என் சர்ட்டிஃபிகேட்டை மட்டும் எடுத்துத் தந்தீர்களானால், சீக்கிரமே இன்னொரு வேலை தேடிக்கொண்டு, அந்த வருமானத்தில் இருந்து, மாதாமாதம் உங்களுக்கு ஒரு தொகை தந்து விடுகிறேன்... அதனால்..."

"அடடா..! இப்போதுள்ள வேலை போய் விட்டதா?" என்று தண்டபாணி வருத்தப்பட்டது அவளுக்கே ஆச்சரியம்தான்!

ஏதோ கொஞ்சம் ஈரம் இருக்குமோ? இந்த வழியில் பேசிப் பார்க்கலாமோ?

"ஆமாம் மாமா. ஆனால், என் படிப்புக்கு உடனே வேலை கிடைத்துவிடும். அதனால் சீக்கிரமே உங்களுக்குப் பணம் தரவும் முடியும்"

லேசாகத் துளிர்த்த இரக்கத்தோடு, தனக்குப் பணம் வரும் என்பதும் சேர்ந்துகொண்டால், சான்றிதழைத் தடையின்றித் தந்துவிடக் கூடும் என்று மதுவந்தி நினைத்தாள்.

ஆனால், "அந்த சர்ட்டிஃபிகேட் இருந்தால், உடனே வேலை கிடைக்கும்! அதாவது, சர்ட்டிஃபிகேட் இல்லை என்றால், வேலையும் கிடைக்காது! அதாவது உன் எதிர்காலப் பிழைப்புக்கே, இந்த சர்ட்டிஃபிகேட் உனக்கு மிகவும் தேவை! அப்படித்தானே?" என்று தண்டபாணி விவரம் கேட்ட விதமே, அவளுக்குக் கொஞ்சம் நெருடலாக இருந்தது!

ஆனால், இதில் மறுப்பதற்கு ஒன்றும் இல்லையே?

அவள் யோசனையோடு மெல்லத் தலையாட்டவும், அவன் திருப்தியோடு நிமிர்ந்தான். "ரொம்ப நல்லது. அந்தத் துண்டுக் காகிதம் உனக்கு அவ்வளவு முக்கியமா? ரைட்டோ! நானும் கொஞ்சம் ஓர் ஐந்தைக் குறைத்துக் கொள்ளுகிறேன். ஒரு பத்து லட்சம் ரூபாயைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிட்டு, உன் சர்ட்டிஃபிகேட்டை வாங்கிக் கொண்டு போ! இப்போது நான் சாப்பிடப் போகி..." என்றவன் சற்று யோசித்து "ஊகூம், உன்னை வீட்டுக்குள் போக விட [illegible] அந்தக் காகிதத்தை எடுத்து [illegible] வராந்தாவில் இருந்து வீட்டினுள் செல்லும் கதவைச் சாவி கொண்டு



பூட்டிவிட்டுக் கிளம்பினான்.

பதறிபோய் "மாமா, இது என்ன பேச்சு? சான்றிதழ் இல்லாமல் எனக்கு எப்படி வேலை கிடைக்கும்? உங்களுக்கும் பணம் தரவே, எனக்கு வேலை அவசியம். அதனால் தயவு பண்ணி, அந்த சர்ட்டிஃபிகேட்டை மட்டும் தந்து விடுங்கள் மாமா!" என்று ஓரளவு கெஞ்சலாகவே கேட்டாள் மதுவந்தி.

வேறு வழியில்லையே

பத்து லட்சம் பதினைந்து லட்சம் என்று இல்லாத, உரிமையும் இல்லாத பணத்துக்கு நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு நிற்பவனிடம் கெஞ்சித்தானே ஆக வேண்டும்?

இந்த சில மணி நேரத்தில் தண்டபாணியிடம் கண்ட மூடத்தனமான மூர்க்கம், அவன் சான்றிதழைத் தராமல் போய்விடுவானோ என்று அவளை அஞ்சவும் வைத்திருந்தது!

அவன் சான்றிதழைத் தராவிட்டாலும், ஒரேடியாக எல்லாம் அழிந்து போகாது! அதன் உண்மை நகலாக ஒன்றைப் பெற்றுப் பயன்படுத்த முடியும்தான். ஆனால், அதற்கு ரொம்பவும் காலதாமதம் ஆகும்!

அந்த இடைப்பட்ட காலத்தில் அவள் உண்டு உடுத்துப் பிழைப்பதற்கு வேறு வழி? இந்தப் பல் மருத்துவம் தவிர, பொருள் ஈட்டும் தொழில் என்று அவளுக்கு வேறு என்ன தெரியும்?

ஒன்றுமே கிடையாதே!

எனவேதான், அந்தச் சான்றிதழை, தண்டபாணி நல்ல விதமாகத் தந்து விட வேண்டுமே என்று அவள் ஏங்கித் தவித்தது!

ஆனால், அவன், பத்து லட்சத்திலிருந்து அசைவதாக இல்லை!

எவ்வளவோ சொல்லிப் பார்த்து, காலில் விழாத குறையாகக் கெஞ்சி, அலுத்து சலித்துப் போனாள் மதுவந்தி.

கடைசியாகப் பொறுமை தீர்ந்துவிட, "என்னிடம் இல்லாத பணத்தை, உடனே கொண்டுவா, கொண்டு வா என்று மிரட்டுகிறீர்களே! அவ்வளவு பணத்தை நான் எங்கிருந்து, எப்படிக் கொண்டு வருவேன்? நீங்களே சொல்லுங்களேன்!" என்று எரிச்சலுடன் அவள் கூற, தண்டபாணி என்கிற பாம்பு விஷத்தைக் கக்கியது.

அவளை ஏற, இறங்கப் பார்த்துவிட்டு தமக்கை பெண் தன் பெண்ணைப் போல என்ற எண்ணமே இல்லாமல் "ஏன், ஆள் பார்க்க அழகாகத்தானே இருக்கிறாய்? இடம் நான் காட்டுகிறேன்! ஆறு மாதத்தில் அள்ள முடியாமல் சம்பாதித்துவிடலாம்! போகிறாயா?" என்று வாய் கூசாமல் கேட்டான் அவன்.

அவனது சொற்கள் தந்த அதிர்ச்சியில் வாயடைத்து நின்றாள் மதுவந்தி.



மற்ற எப்போதையும் விட, மாமனுக்குச் சொந்த பந்தம் என்கிற உணர்வு அறவே இல்லை என்பது, அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது அப்போதுதான்.

சிறு வயதிலேயே, மதுவந்தி தந்தையை இழந்தவள்தான். ஆனால், அந்த குறை தெரிய, அவளுடைய தாயார் விட்டதில்லை!

ஒரேடியாகச் செல்லம் கொடுத்தது இல்லை என்றாலும், அன்பும் அரவணைப்பும் எப்போதும் இருக்கும்! பாதுகாப்பும்.

சுற்றுப்புறத்தில் இருந்தோரை விடவும் சற்று நிலை உயர்ந்த குடும்பம் என்றாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல், தேவையென்று வருவோர்க்கு சிறு சிறு உதவிகளைச் செய்துகொண்டு, பண்போடு வாழ்ந்த அந்தக் குடும்பத்தின் மீது எல்லோருக்குமே மதிப்பு இருந்தது!

இதுவும் மதுவந்திக்கு ஒரு பாதுகாப்புக் கவசத்தையும், மரியாதையையும் ஈட்டித் தந்திருந்தது! தாயின் வழிகாட்டுதலில் வளர்ந்த அவள் நடந்துகொண்ட முறையில், அவளுக்கே தனி மரியாதையும் இருந்தது!

எனவே, மதுவந்தி அதிர்ச்சியில் வாயடைத்து நின்றபோதும், அவளுக்காக இந்த வீட்டின் மீது ஒரு கண்ணையும் காதையும் வைத்திருந்த பக்கத்து வீட்டுப் பெரியவர், "அடப்பாவி! மனிதனாடா நீ?" என்று கேட்டபடி அருகில் வந்தார்.

"மதிப்பும் மரியாதையுமா, எப்படி வாழுகிற குடும்பம் இது! புல்லுருவி மாதிரி நீ ஒருத்தன் இருக்கிறது மட்டும் இல்லாமல், அந்த நல்ல பெண்ணையும் நாசமாக்கப் பார்க்கிறியே! நீதான், ஒரு சாங்கியமும் ஒழுங்காகச் செய்யலையே! உங்க அம்மாவோட ஆவி, இன்னமும், இங்கேதான் சுற்றிக்கிட்டு இருக்கும்! இத்தனை நாள் அவர்களைப் படுத்தினது போதும்! ஆவி ரூபத்திலேகூட, அந்தம்மாவை வேதனைப்பட வைக்காதேடா, பாவி!" என்று கொதித்தார்.

"ஆமாம், எங்கம்மாவோட ஆவி அழுகிறது. உன் கண்ணுக்கு மட்டும் தெரிகிறதாக்கும்! யோவ் எங்கம்மா ஆவி, இவ்வளவு காலம், அவர்களை உறிஞ்சித் தின்ற இந்த ஒட்டுண்ணிக்காக அழலையா! இத்தனை நாள் பக்கத்திலேயே இருக்கும் இந்த வீட்டில் குறைந்த வாடகைக்குக் குடியிருந்த முட்டாள் கிழவன், இனிமேல் நடுத்தெருவிலே நிற்கப் போகிறானே என்று, உனக்காகத்தான் அழுகிறது! போய் மூட்டையைக் கட்டு.., போ.. போய்யா!" என்று தண்டம் மிரட்டவும், அவர் நடுங்கிப் போய்விட்டார்.

வலியப்போய், இப்படியொரு வம்பை இழுத்துக்கொண்டார் என்று தெரிந்தால், மருமகள் அ[illegible]?

"தம்பி.. தம்பி! மன்[illegible]

பொண்ணு! அது கண் கலங்கவும், கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன், மன்னித்துக் கொள்ளப்பா!" என்று தண்டபாணியிடம் கெஞ்சலானார்.

அவரை ஏளனமாகப் பார்த்துக் கொண்டிருந்த தண்டபாணி, சட்டெனச் சிரித்தான்! இளக்காரமாகத்தான்.

"போய்யா. போய் இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்துத் தூங்கு! அப்படி, அடுத்தவர்கள் வீட்டு விஷயத்திலே எல்லாம் சம்மன் இல்லாமல் வந்து நிற்காதே! போ!" என்று அவரை விரட்டினான்.

பார்வையால் அவளிடம் மன்னிப்புக் கோரிவிட்டு, அங்கிருந்து அகன்றார் அவர்.

மதுவந்திக்குப் புரிந்து கொள்ள முடிந்தது!

சுந்தரி ஆன்ட்டி மாதிரி, இவர்களது ஆதரவெல்லாம், ஓர் அளவுக்குள் அடங்கியதுதான்.

அவரவருக்கு இருக்கும் ஆயிரம் தளைகளை மீறி, அவளுக்காக வரிந்து கட்டிக்கொண்டு வந்து நிற்க முடியாது!

அப்படியே அவர்கள் வந்து நின்றாலும், தண்டபாணியைச் சமாளிக்க அவர்களால் முடியாது! ஆளுக்குத் தக்கபடி அல்லவா, ஆட்டம் காட்டுகிறான்!

இப்போது அவளையே என்ன பேச்சுப் பேசி அதிர வைத்து விட்டான்!

சரி, போய்த் தொலைகிறான்! எப்படியும் பாட்டியுடைய பிள்ளை! இந்த வீட்டில் வசித்ததற்கு வாடகை மாதிரி நினைத்துக் கொடுத்து விடலாம் என்றாலும், அப்படிக் கொடுக்கக் கூடிய அளவிலா இவன் கேட்கிறான்?

பத்து லட்சம் அல்லவா, வேண்டுமாம்?

எங்கே போவது?

சர்ட்டிஃபிகேட்டைப் பெறுவதற்கு, வேறு வழிதான் தேடியாக வேண்டும்!

எப்படி... அவள் யோசிக்கத் தொடங்குமுன், தண்டபாணி மேலே பேசலானான்.

"இதைச் சற்றுக் கவனித்துக் கேள், மதுவந்தி, சரி, நாமே கேட்டால்தானே, மிரட்டுகிறான், வேறு வழியில் அந்தச் சான்றிதழை எப்படி பெறலாம் என்று, ஏதாவது அசட்டுத்தனமாகத் திட்டம் போடாதே! அப்புறம் உனக்கும், எனக்கும் இல்லாமல், அது இடை வழியில் அழிந்தே போகும்! போலீசுக்கு போனாலும், அப்படித்தான்! எரிந்து சாம்பலாக்கிக் கழிவு நீர் வழியில் போட்டுவிட்டால், அப்புறமாக எரிந்து சாம்பலில் எது உன் சர்ட்டிஃபிகேட் சாம்பல் என்று கண்டுபிடிக்க முடியாதுதானே? என்ன செய்வதானாலும், இதை நினைவில் வைத்துக்கொண்டு செய்" என்று இன்னொரு



மிரட்டலுடன் தண்டபாணி, சாப்பிடுவதற்காகக் கிளம்பிப் போனான்!

தப்பான செயல்களிலேயே ஊறிப் போனவனின் மிரட்டல்!

தரையைத் தேய்த்து நடந்த மாமனது காலடி ஓசை தேய்ந்து மறைந்தது!

மதுவந்தியின் உடம்பில் இருந்த சக்தியெல்லாம் வடிந்து விட்டது போன்ற ஓர் உணர்வு அவளைப் பீடிக்க அப்படியே தொய்ந்து தரையில் அமர்ந்தாள் அவள்.

செய்வது அறியாத திகைப்பு அவளுக்கு!

சுதர்மன், லோகநாதன், தேவராஜன் யார் பெயரும் அவளுக்கு நினைவு கூட வரவில்லை!

இருக்கும் பயங்கரமான நிலைமையில் இருந்து, எப்படி மீள்வது என்று அதே சிந்தனை!

ஆனால், எப்படி யோசித்தாலும், சிக்கலில் இருந்தே மீட்சி கிடைக்காமல் போகவே, மனதோடு சேர்ந்து, உடம்பும் சோர்ந்தாள் அவள்.

அவளது பல் மருத்துவப் படிப்புச் சான்றிதழின் அதிகாரப் பூர்வமான பிரதியைப் பெறுவதற்கும், அதைப் பெறும்வரை மானத்துடன் வாழ்வதற்கும் என்ன வழி?

ஒரே ஒரு கேள்விதான்!

ஆனால், ஒரு வழியும் காணாமல் அவள் சோர்ந்தபோது "அக்கா!" என்று நீலிமாவின் குரல் கேட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தால், மெய்யாகவே நீலிமாதான் நின்றாள்!

இவள் எப்படி, இப்போது இங்கே வந்தாள்?

மதுவந்தியின் திகைத்த பார்வையின் பதிலாக மற்றவள் விவரம் தெரிவித்தாள்.

மதுவந்தி கிளம்பிச் சிறிது நேரத்தில் அவளுடைய பாட்டி பற்றிய துக்கச் செய்தி தெரிவித்து மருத்துவமனைக்கு ஃபோன் வந்தது.

வெளியே வந்து அருகே இருந்த சூப்பர் மார்க்கெட், பூங்கா முதலிய மதுவந்தி உட்கார்ந்து இருக்கக் கூடிய இடங்களில் அவளைத் தேடிக் கண்டுபிடித்துச் சொல்லி விடத்தான், பாலு, நீலிமா இருவருக்கும் ஆசை!

ஏனெனில், திடுமென வேலை போன செய்தியோடு, படுக்கையாகக் கிடந்த பாட்டியிடம் அவள் நேராகப் போயிருக்க மாட்டாள் என்று இருவருமே கருதினர்.

ஆனால், கொக்கரித்துக் கொண்டிருந்த மாலி, கொதித்து வெடித்துக் கொண்டிருந்த பெரிய டாக்டர் இருவரையும் தாண்டி இதைச் செய்ய இருவருக்குமே தைரியம் இருக்கவில்லை!

ஒரு வழியாக வேலை[illegible] நேரம் ஆகிவிட்டது! அதற்குள் [illegible]

12.02.2009 00:20



தெரிந்திருக்கும்!

அப்போதும், துக்கம் கேட்க வர வேண்டும் என்று இருவருக்கும் எண்ணம்தான்!

ஆனால், பாலுவுக்கு அலெக்ஸ் இன்னொரு வேலை வைத்துவிடவே, அதை மீறத் தைரியமின்றி, அவன் நின்றுவிட, நீலிமா மட்டுமாகக் கிளம்பி வந்தாள்.

வந்த இடத்தில், அவளுடைய மதிப்புக்கும் அன்புக்கும் உரிய மதுவந்தியிடம் அவளுடைய மாமன்காரன் பேசிய பேச்சு, அவளையுமே அதிர வைத்துவிட்டது! கூடவே, அச்சமும் வைத்தது!

ஆனால், மதுவந்திக்கு ஆறுதலாவது சொல்லாமல் எப்படிப் போவது?

எனவே, அவன் கண் மறையும்வரை காத்திருந்து, மதுவந்தியிடம் ஓடி வந்தாள் அவள்!

## 10 வாழும் முறைமையடி



சுதர்மன் மிகவும் கொதித்துப் போயிருந்தான்.

பொதுவாக, அவனுக்குக் கெட்டிக்காரன் என்று பெயர்.

படிப்போடு, விளையாட்டிலும் சிறந்திருந்ததால், அதிலும் விளையாட்டு டீம் தலைவனாகவே இருந்ததால், விவேகமும் நிதானமுமாகச் செயல்படுகிறவன், மனிதர்களை எடை போடுவதிலும் கெட்டிக்காரன் என்பார்கள்!

இப்போது, லோகனைப் பற்றியே, அவனது குற்றம் குறைகளை, சுதர்மன் அறியாதவன் அல்லவே!

தன்னையே நினைப்பவன்! பிடிவாதக்காரன்! தாயிடம் கூட மரியாதை கிடையாது!

எல்லாம் தெரிந்துதான், அதன் பிறகும் அவனுடைய நண்பனாக இருக்கிறான்.

தன் பிழைகளை, லோகன் மறைக்க முயல்வதும் கிடையாது! குறைந்த பட்சமாக நண்பனிடம்!

அப்படிப் பார்த்தால், குற்றம் குறை இல்லாத மனிதர் யார்?

ஒவ்வொரு குற்றத்துக்காக, ஒவ்வொருவராகக் கழித்துக்கொண்டே போனால், அப்புறம் தன்னந்தனியாக காட்டில் ஒளிந்து வாழ வேண்டியதுதான்!

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை!

ஆனால், குற்றத்தைத் தெரிந்து கொண்டே பழகுவது வேறு. குற்றமே இல்லாத மாதிரி நடிப்பவரை நம்பி ஏமாறுவது வேறு!



ஆனாலும், ஓர் அழகான முகத்தைப் பார்த்து, சுதர்மன் எப்படி ஏமாந்துவிட்டான்!

அதுதான், அவனுக்குத் தாங்க முடியாததாக இருந்தது!

ஒழுக்க சிகரம் போல, மதுவந்தி நடித்ததை, அப்படியே நம்பிவிட்டானே!

நோயாளியிடம் மகாப் பரிவு மாதிரியும், அடுத்தவருக்கு உதவுகிற மாதிரியும் நகைச்சுவை உள்ளவள் மாதிரியும்...

அன்று அந்த பீன்சைக் கூட, அவனைத் தூரத்திலே பார்த்துவிட்டுத்தான், கீழே போட்டாளோ என்னவோ?

அப்படி இராது என்று நிச்சயமாக நினைப்பதற்கும் இல்லை எனும்போது... இன்னும் இப்படியொரு குழப்பமா என்று, சுதர்மனுக்கு அவள் மீதே கோபம் வந்தது!

மதுவந்தி முழுக்க முழுக்க மோசக்காரி என்று தெரிந்த பிறகும், அப்படி இராதோ, என்னவோ என்று சந்தேகம் வேறா?

அன்று சூப்பர்மார்க்கெட்டில் முன்னதாகவே, அவன் வருவதைப் பார்த்துவிட்டுத்தான், இப்படிப் புது விதமாக, அவனது கவனத்தைக் கவர்ந்திருக்கிறாள்!

அப்போதே அவனிடம் ஏமாறத் தொடங்கிவிட்டான் சுதர்மன்!

இல்லை அதற்கு முன்பே!

அவனுக்குத் தங்குவதற்கு ஹோட்டல் சொன்னபோதே, இவ்வளவு செலவழிக்கக் கூடியவனா என்று நோட்டம் பார்த்ததோடு, அவனை இங்கேயே பிடித்து வைக்கவும் வழி வகுத்திருக்கிறாள்!

அவனுக்காகச் சீக்கிரமே வந்து, நோயாளியைப் பரிசோதித்து விவரம் சொல்வதாகக் காட்டியவள், அதையே, லோகனுடன் காதல் நாடகம் ஆடவும் பயன்படுத்தியிருக்கிறாள்!

இருவருமே எளிமையாக ஏமாந்திருக்கிறார்கள்!

சுதர்மனை விடவும், லோகனுக்குப் பயங்கரமான பாதிப்பு!

தற்கொலை செய்யும் அளவுக்குப் போய்விட்டானே!

"இன்னும் இரண்டு மாத்திரைகள் அதிகம் விழுங்கியிருந்தால், ஆபத்தாகவே போயிருக்கலாம்! இது இந்த 'டிரிப்ஸ்'லேயே சரியாகிவிடும்." என்று மருத்துவர் சொல்லும்வரை, சுதர்மன் எளிமையாகப் பயந்து போயிருந்தான்!

உயிர் போவதற்கு, இன்னமும் இரண்டு மாத்திரைகள் அதிகம் தேவை என்று அவனுக்கு முன்னமே தெரிந்திருந்து, அவைகளை லோகன் கூடுதலாகப் போட்டிருந்தான் என்றால், என்ன ஆகியிருக்கும்?

அப்புறம் மீனா ஆன்ட்டியின் முகத்தில், மற்றவன் விழிக்க முடியுமா?

மீனா ஆன்ட்டியின் மு[illegible]

12.02.2009 00:21

சந்தோஷமான விஷயம் அல்ல என்றாலும் ஒரு தாயின் சோகத்துக்காக அவன் காரணமாகிப் போயிருப்பானே!

அவன்தானே, அந்த மருத்துவமனையில் லோகனைக் கொண்டு சேர்த்தது!

சேர்த்தது மட்டுமின்றி, லோகனுக்குச் சமமான செல்வ நிலையில், அவளிடம் மயங்கிய இன்னொருவனாக இருந்தவனும் அவன்தானே? அவனுக்குப் பதிலாக இவனைப் பிடித்துவிட்ட தைரியத்தில் அல்லவா, லோகனை அவ்வளவு அலட்சியமாக மதுவந்தி நிராகரித்திருக்கிறாள்!

அன்று தூக்க மாத்திரையின் வேகத்தில் மயங்கி விழுமுன் லோகன் சொன்னது வார்த்தை வார்த்தையாக எழுத்து எழுத்தாகவே சுதர்மனுக்கு நினைவு இருந்தது!

"எங்களுக்குள் காதல் சுதா! மருத்துவமனையில், அவளுக்கு வேலை நேரம் இல்லாவிட்டால் கூட ஓடி ஓடி வந்து எனக்குச் செய்வாள். எப்படி என்னைத் தொட்டுத் தொட்டுப் பேசுவாள் என்று, நீயும் பார்த்திருக்கிறாய்தானே? அம்மா வந்து, இப்படிப் பேசிய பிறகு, இவ்வளவு உரிமை பாராட்டுகிற மாமியாரோடு என்னால் வாழ முடியாது... உங்களுக்குச் சமமாகவே, நான் வேறு ஆள் பார்த்துவிட்டேன். என்னை மறந்து விடுங்கள் என்று முடிவாகச் சொல்லிவிட்டாள் சுதா! அவளை மறப்பதா? என்னால் தாங்க முடியவில்லையே, சுதா! அதை விடச் செத்துவிடலாம் என்று..." என்று சொன்னபடியே சரிந்தானே!

"என்ன லோகன்?" என்று குழப்பத்துடன் சுதர்மன் கேட்டதற்கு "தூக்க மாத்திரை" என்று குழறியபடியே, முழுதாக மயங்கி விழுந்தானே?

என்ன மோசமான நேரம், அது!

சந்தோஷமாக மதுவந்தியைச் சந்திக்கப் போவதாக இருந்த நேரத்தில் லோகனை அருகில் வேறொரு மருத்துவமனையில் சேர்த்து, பிழைப்பானா என்று தவிக்கும்படி ஆயிற்று!

ஆனால், ஒரு விஷ நாகத்திடம் அவன் சிக்கிக் கொள்ளாமல் கிட்டத்தட்ட உயிரைக் கொடுத்து, லோகன் அவனைக் காப்பாற்றி இருக்கிறான்!

அந்த வகையில், லோகநாதனுக்கு, சுதர்மன் பெரும் நன்றிக் கடன் பட்டிருக்கிறான்!

அதற்காகவே, லோகனை மீண்டும் சென்னை வரை கொண்டு விட்டுவிட்டே அவன் வீட்டுக்குத் திரும்பிப் போனான்.

இதில் சுதர்மனுக்கு இன்னோர் ஆறுதல்! மதுவந்தியிடம் மயங்கியிருந்த அந்த வேறு ஆள் அந்த இன்னொருவன், சுதர்மனே என்பது லோகனுக்குத் தெரியாது!

அடிபட்ட வலியும், பல்லுக்கான சிகிச்சையுமாக லோகன்



கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில், அவனிடம் தன் காதல் பற்றிச் சொல்ல சுதர்மன் விரும்பவில்லை என்றால், மதுவந்தி சாமர்த்தியமாக நாடகமாடியதில், அவளுமே அதை லோகனுக்குத் தெரியாமல் மறைத்தது விட்டிருந்தாள்.

கை தேர்ந்த ஏமாற்றுக்காரி!

மதுவந்தியின் நெஞ்சுத் திண்ணக்கத்துக்குச் சரியான சான்றாக அவன், அன்று அவ்வளவு மிரட்டிய பிறகும், அவளது செல்லுக்கு தொடர்பு கொள்ள முயன்றிருந்தான் அவன்!

இரண்டு பேரைச் சுண்டுவிரலில் கட்டி வைத்திருந்தவளுக்கு, ஒருவன் கூட தக்காமல் போனது தாங்க முடியவில்லையாக்கும்!

இப்போது தன்னை அழைக்கும் காரணம், இருவரில் எளிதாக ஏமாறுகிறவன் இவன்தான் என்கிற கணிப்புதானே என்று எண்ணியவனுக்கு கோபத்தோடு, அவமானமாகவும் இருந்தது!

எவ்வளவு அசடனாக அவனை எண்ணியிருக்கிறாள்!

நேரில் போய், 'நான் ஒன்றும் முட்டாள் அல்லடி' என்று கத்திவிட்டு வரலாமா என்று உள்ளூர ஒரு துடிப்பு சுதர்மனுக்கு ஏற்பட்டது.!

ஆனால், உடனேயே, இந்த வேகம் அவளிடம் கத்துவதற்காகவா? அல்லது அவளை இன்னொரு தரம் கண்ணால் காண்பதற்காகவா என்ற கேள்வியும் தோன்றிவிட்டது!

'தன்னெஞ்சறிய பொய்யற்க' அல்லவா?

அன்று நண்பனின் உயிருக்காகக் கடுங்கோபத்தில் இருந்தபோது கூட, பெட்ரோலை ஊற்றிக்கொண்டு 'எரிந்துபோ' என்று அவளிடம் அவனால் சொல்ல முடியவில்லையே!

இப்போது, அவள் எதையாவது சொல்லி, அழுது கிழுது மாய்மாலம் செய்து, அவனுக்கும் அவளை நம்பத் தோன்றிவிட்டால்?

கண்ணோடு, கருத்தையும் கண்டி இழுக்கிற அவளது அழகு அப்படியேதானே இருக்கும்? மதுவந்தி என்ற பெயருக்கு ஏற்றபடி, மதுவின் மயக்கம் தரும் அழகு!

அந்த அழகின் மீது கொண்ட ஆசையில், அவனது மனமே, அவள் பக்கம் சாய்ந்துவிடுமோ என்று அஞ்சினான் சுதர்மன்.

'நான் ஒன்றும் அவ்வளவு பலவீனமானவன் அல்ல' என்று, தனக்குத்தானே பலமுறை சொல்லிக்கொண்ட போதும், விஷப்பரீட்சை செய்ய மனமில்லாததால், மதுவந்தியின் அழைப்பை அலட்சியம் செய்து ஒதுக்கினான்.

நல்லவேளையாக, 'இவனிடம் நம் பப்பு வேகாது' என்ற முடிவுக்கு வந்தவிட்டவள் போல, மதுவந்தியும் மறுபடி அவனுடன் தொடர்பு கொள்ளவே இல்லை!

இன்னொரு முட்டாளை [illegible]

12.02.2009 00:21



உலகில் முட்டாள்களுக்கா பஞ்சம்?!

உதாரணத்துக்குத் தேடினால் அவனே இல்லையா? அவன்... லோகநாதன்!

திடும், திடும் என்று அவளையே நினைத்துக்கொண்டு, மதுவந்தி மிகவும் கெட்டவள் என்று நிச்சயமாகத் தெரிந்த பிறகும், அப்படி இராதோ, வேறு விளக்கம் இருக்குமோ என்று அலை பாய்ந்துகொண்டு....

இந்த அசட்டு அலைபாய்தல், அளவு மீறிப் போய், அதற்காகச் சில வேலைகளைச் செய்தும் பார்த்தான்.

செய்து, தோற்றுவிட்டு "உள்ளங்கை நெல்லிக்கனி" என்பார்கள். அதுபோலத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்த பிறகும் இப்படி அலைகிறோமே என்று அதற்காக அவமானமும் பட்டுக் கொண்டான்.

ஆனால், கெட்டவள், கொடியவளாகவே இருந்தாலும், மதுவந்தியை மறப்பது, சுதர்மனுக்குக் கடினமாகவே இருந்தது! முடியாதோ என்று அவனுக்கே சந்தேகம்தான்!

ஆனாலும், சுதர்மன் தோல்வியை ஒத்துக் கொள்ளுகிறவன் அல்ல என்பதால், தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருந்தான்.!

இந்நிலையில் வீட்டில் சுதர்மனது திருமணப் பேச்சு உச்ச கட்டத்தை அடைந்தது!

கெட்டிக்காரன், படித்தவன், செல்வத்தோடு, செல்வாக்கும் உள்ள குடும்பம். கெட்ட பழக்கம் இல்லாதவன், கூடவே நல்ல தோற்றமும் உடையவன் எனும்போது, பெண் வீட்டார் பலர் விரும்பி வருவது இயல்புதானே?

பெற்றோருக்கும் மகனுக்குத் திருமணம் செய்து பார்க்கும் ஆசை இருக்கத்தானே செய்யும்?

ஆனால், திருமணப் பேச்சையே மகன் தவிர்ப்பது போலத் தோன்றவும், கவலையடைந்து, அவனை உட்கார வைத்துக் காரணம் கேட்டனர்!

"பாப்பா, அப்பா சம்பாத்தியத்தில் மட்டுமாக வாழ மனமில்லை, எனக்கும் திறமை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்., அதற்குப் பிறகுதான் கல்யாணப் பேச்சே, என்றாய், தொழிலில் ஒரு பிரிவையே உன்னிடம் கொடுத்தேன்! நல்ல லாபம் காட்டியதோடு வளர்த்தும் இருக்கிறாய். இனிமேல் திருமணம் செய்து கொள்ளலாம் இல்லையா? எங்களுக்கும் பேரன், பேத்திகளை கொஞ்ச வேண்டும் என்று இராதா? திருமணப் பேச்சை ஏன் தவிர்க்கிறாய்?" என்று மாதவன், மகனிடம் நேரடியாக விசாரித்தார்.

"ஏதாவது காதல் என்றால் சொல்லுப்பா! பணம், ஜாதி, மதம் எதையும் பாராமல், உனக்குப் பண்ணி வைக்க, நாங்கள் தயாராக இருக்கிறோம்., செய்வோம் என்று உனக்கும் தெரியும்தானே?" என்று



கேட்டாள் அன்னை கனகா.

"மறுமணம்... அந்த மாதிரி என்றால் கூடத் தயங்க வேண்டாம்பா. உனக்குப் பிடித்திருப்பதுதான் முக்கியம்!" என்று தாயார் தொடர்ந்து கூறவும், அதற்கு மேல் சுதர்மன் எதையும் மறைக்கவில்லை.

"நான் ஒரு பெண்ணை விரும்பினேன். ஆனால், அவள் நான், என் நண்பன் இருவருடனும் நடித்திருக்கிறாள், விஷயம் தெரிந்தபோது, கிட்டத்தட்ட அவனது உயிரே போயிற்று! உண்மை புரிந்து, வெறுத்து ஒதுக்கிவிட்ட போதும். என்னால், இன்னும் அவளை அடியோடு மறக்க முடியவில்லை! இப்போது நான் இன்னொருத்தியை மணந்தால், அது அந்தப் புதியவளுக்குச் செய்யும் அநியாயம் அல்லவா?" என்று மனதில் இருந்ததை வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டான்.

எப்படி யெப்படியோ யோசித்திருந்தபோதும், இதைப் பெற்றோர் எதிர்பார்க்கவில்லை!

ஒரு சிறு அமைதியின் பின், "அந்தப் பெண்ணின் குணம் பற்றி... அதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டாயா சுதன்? ஏனெனில், நீ அவ்வளவு எளிதில் ஏமாறக் கூடியவன் அல்லவே! முதல் பார்வையிலேயே, பெருமளவு சரியாகவே கணித்து விடுவாயே!" என்று மாதவன் நம்பிக்கையோடு கூறியது, மகனை இன்னமும் குன்ற வைத்தது!

ஒரு பெரு மூச்சுடன் "நானும் அப்படி எண்ணித்தான் ஏமாந்துவிட்டேன், அப்பா! ஆனால், எதற்கும் ஒரு விதிவிலக்கு உண்டுதானே? யானைக்கே அடி சறுக்கும் என்றால், நான் எம்மாத்திரம்?" என்றான் கசந்த குரலில்.

மகனையே பார்த்துவிட்டு "அதற்காக இப்படியே இருந்து விடுவாயாப்பா?" என்று கவலையுடன் வினவினாள் அன்னை.

"ஐயோ, என்னம்மா, நீங்கள்! அவள் நல்லவளாக இருந்திருந்தாலாவது, அப்படி இருப்பதில் ஒரு நியாயம் இருக்கும். இப்போது... உங்களுக்கு ஒரே மகன் நான், என் கடமைகளை, ஒரு போதும் அலட்சியப்படுத்த மாட்டேன்... அம்மா, நானே மதுவந்தியை மறக்கப் போராடிக் கொண்டுதான் இருக்கிறேன். சீக்கிரமாக, அதில் வெற்றியும் கண்டு விடுவேன். அதுவரை.. அப்புறமாக பார்த்துக் கொள்ளலாமேம்மா" என்று சிறு குரலில் சிறு மன்றாடலுடன் கேட்டான் மகன்.

மகனைப் பார்த்து லேசாக முறுவலித்தாள் பெற்றவள்.

"சின்ன வயசிலே இருந்து, நீ எதையும் கெஞ்சிக் கேட்டது இல்லை! சரி, பிள்ளை கேட்கிறானே என்று விட்டுவிடலாமா என்றுகூடத் தோன்றுகிறது! ஆனால் [illegible] எத்தனை தரம் கொடுத்திருப்பேன் [illegible]

12.02.2009 00:21

நோய். இதையும் பெற்றோர் நாங்கள் தீர்க்க வேண்டும்தானே? சும்மா விட்டால் அதே நினைவில் இன்னமும் மனதை புண்ணாக்கிக் கொள்வாய்.! அவளை... அந்தப் பெண்ணை சீக்கிரமாக மறப்பது என்றால்.. கண்ணா, ஒரு பெண்ணினால் ஏற்பட்ட காயம் இன்னொரு பெண்ணினால்தான் ஆறும்! கெட்டிக்காரியான ஒருபெண், அழகாகவும் இருப்பதாகக் கேள்வி, போய்ப் பார்ப்போம்! உன் மனதுக்குக் கொஞ்சமேனும் இதமாகத் தெரிந்தால், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்போம்" என்றாள் கனகா.

மகன் வேறெங்கோ பார்க்கவும் மாதவன் பேசினார்.

"பார் சுதர், போய்ப் பார்ப்பதினாலேயே, அந்தப் பெண்ணை நீ மணந்துதான் தீர வேண்டும் என்று கிடையாது! அதற்காகவே வீட்டில் பெரியதாகப் பெண் பார்க்கும் சடங்கு மாதிரி எதுவும் கூடாது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். பொதுவான ஓர் இடத்தில் பார்ப்போம். உனக்குப் பிடித்தால், மேலே அம்மா சொன்னது போல மேலே தேவையான ஏற்பாடு செய்வோம். இல்லாவிட்டால் போனது போலத் திரும்பி வந்துவிடுவோம்" என்றார் அவர்.!

இவ்வளவு தூரம் புரிந்துகொண்டு, அவனது இதம் நாடிப் பதமாகப் பேசும் பெற்றவர்களிடம் எப்படி ஒரேடியாக மறுப்பது!

பெற்றோரோடு காரில் வெளியூர் செல்ல, சுதர்மனுக்கு எப்போதும் பிடிக்கும்!

புளியோதரையும், தயிர்சாதமும் வழியில் சாப்பிட கனகா எடுத்து வருவாள்!

எங்காவது மரத்தடியில் காரை நிறுத்திச் சாப்பிடுவார்கள்.

ஏற்கனவே வறுத்து வைத்திருக்கும் முந்திரி, வேர்க்கடலைப் பருப்புகளை, அந்த மொறுமொறுப்புடனே அப்போது புளியோதரையில் கலந்து சிப்ஸ், ஊறுகாயுடன் சாப்பிடும்போது, அதற்கு எந்த ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் சாப்பாடும் ஈடாகாது!

இடையே கொறிப்பதற்கு, பலாக்காய் சிப்ஸ், மனோகரம் பாணியில் செய்த நேந்திரங்காய் இனிப்பு, இப்படிச் சிலது!

முன்னெல்லாம், சுதர்மனின் சிறு வயதுப் பயணங்களில், மாதவன்தான் நிறையச் சொல்லுவார், சுதர்மன் 'ஆ' என்று கேட்டுக் கொண்டிருப்பான்!

பிறகு, பள்ளி கல்லூரி வாழ்வின் வேடிக்கை விநோதங்கள் பற்றி, அவனும் சொல்லலானான்.

வீட்டுக்குள் நடக்கும் விசித்திரங்கள் பற்றி, கனகா கூறுவாள்.

இடையே, கருத்துக் கூறுவது போல, அடுத்தவர் காலை வாருகிற பேச்சும் இருக்கும்.

போய்ச் சேர வேண்டிய இடம் வந்துவிட்டது என்று மாதவன் சொல்லும்போது, அதற்குள்ளாகவா என்று, சுதர்மனுக்கு அதிசயமாக



இருக்கும்!

மூவருக்குமே என்றே சொல்லலாம்!

முன்னெல்லாம் மாதவன் காரை ஓட்டுவார். இந்தச் சின்னஞ்சிறு குடும்பச் சூழ்நிலைக்குள் வேற்று ஆளை உள்ளே விட, அவர் விரும்பியதில்லை! சுதர்மனுக்குப் பதினெட்டு வயதான பிறகு 'ஸ்டியரிங்வீல்' பிடியை அவன் விட்டதில்லை.

ஆனால், "என் செங்கோலை உன் பையன் பிடுங்கிக் கொண்டானே!" என்றவாறு மாதவன் காரில் ஏறுவதில் இருந்து, சிரிப்பு வேடிக்கை எல்லாம் அதேபோலத்தான்!

தொழில் விரிவடைய, விரிவடைய; இந்தப் பயணங்கள் கணிசமாகக் குறைந்து போயின! என்றாலும், அடியோடு செல்லாதது, கடந்த மூன்று மாதங்களாகத்தான்.

அந்த பழைய மாஜிக்கை, இப்போது சற்றும் எதிர்பார்க்கவில்லை. என்றாலும், கவனியாதது போலச் சிரிப்பும் கேலியுமாகப் பெற்றவர்கள் ஏதேதோ பழைய கதை பேசிக்கொண்டே வர, சுதர்மனும் மெல்ல மெல்ல இறுக்கம் தளர்ந்து, அதில் கலந்து கொள்ளலானான்.

பேச்சினூடை, மனதில் உறுத்தாத அளவில், அவர்கள் பார்க்க இருக்கும் பெண்ணைப் பற்றியும் கனகா எடுத்துரைத்தாள்.

திருச்சியில் ஏழெட்டு மாடிகளில் சூப்பர் மார்க்கெட் வைத்திருப்பவர், பெண்ணுடைய தந்தை. மகளும் படித்துவிட்டு, சூப்பர் மார்க்கெட் நடத்துவதில் தந்தைக்கு உதவி செய்கிறாள்!

இப்போது, அந்த சூப்பர் மார்க்கெட்டில் சாமான் வாங்குகிற மாதிரிதான். அவர்கள், அந்தப் பெண்ணைப் பார்க்கப் போகிறார்கள்! பெண்ணிடம் சொல்லக்கூட வேண்டாம் என்றிருக்கிறார்கள்.

அதனால், பெண்ணைப் பிடிக்காவிட்டால், அதை வெளிப்படையாகப் பெற்றோரிடம் சொல்ல, சுதர்மன் தயங்கவே தேவையில்லை!

போனோம்., வந்தோம் என்று ஓசையற்றுக் கிளம்பி விடலாம்!

அப்படித்தான் கிளம்பப் போகிறோம் என்று சுதர்மன் மனதிற்குள் எண்ணினாலும், அதை வாய்விட்டுச் சொல்லவில்லை!

இப்போதே இவர்களையும் வருத்துவானேன், பாவம்!

அவனுக்குத்தான் தலையெழுத்து!

போய்விட்டு, போன சுருக்கில் திரும்பப் போகிறோம் என்று, சுதர்மன் நிச்சயமாகத்தான் நினைத்திருந்தான்.

ஆனால், மதுவந்தியை, அங்கே அவன் சந்திக்கப் போகிறான் என்று, அப்போது அவனுக்குத் தெரியாது!

அதுவும் எப்படிப்பட்ட நிலையில்!

12.02.2009 00:21



# 11 வாழும் முறைமைபடி



முன் தினத்திலிருந்து 'ப்ரீதி' சூப்பர்மார்க்கெட் அமர்க்களப்பட்டது!

"இங்கே தூசி! அங்கே தும்பு! தட்டிப் பெருக்கு! துடை!" என்று சூப்பர் மார்க்கெட் உரிமையாளருடைய மகளே நேரில் வந்து, எல்லோரையும் விரட்டி விரட்டி வேலை வாங்கினாள்.

அவ்வப்போது அவள் செய்வதுதான்.

தொழில் நிர்வாகம் பற்றி, இளநிலைப் படிப்பை முடித்ததிலிருந்து, தன் நிர்வாகத் திறமையை அவ்வப்போது வந்து, இப்படி அவள் காட்டுவது வழக்கமே!

வரும்போதெல்லாம் இதை அப்படி வை., அதை மறுபடி அடுக்கு என்று அங்கே வேலை செய்கிற அனைவரையும் வேர்த்து வடிய வைத்து விடுவாள்.

அவள் உள்ளே வரும்போதே "ஐயோ!" என்பாள் சூப்பர்வைசர்! அவள்லவா, இந்தக் கோடிக்கும், அந்தக் கோடிக்குமாக பறந்தோடி, ஓடிப் பார்த்து வர வேண்டும்!

இருந்த இடத்திலேயே இருந்து, அல்லது அன்ன நடை நடந்து ப்ரீதி (அவள் பெயரில்தான் சூப்பர் மார்க்கெட்டே தொடங்கப்பட்டிருந்தது) ஆணைகள் இடுவாள். அவளது பார்வை செல்லும் இடமெல்லாம், கலக்கம் அலை போலப் பரவும்.

குறைந்த பட்சமாக எல்லாப் பொருட்களையும் இரண்டு தரம் அடுக்க வைக்காவிட்டால், அவளது படிப்புக்குப் பெருமை இல்லாது போய்விடும் என்கிற எண்ணம் என்பார்கள். அங்கே பணி புரிகிற பெண்கள்.

இந்த அலட்டல், விரட்டல் எல்லாம், நாக்கில் நரம்பில்லாதபடி எல்லோரையும் ஏதாவது குறை கூறியவாறுதான் நடக்கும்!

ஆனால், அவள் பிறந்த பிறகுதான் பணம் சேர்ந்தது என்று, சூப்பர் மார்க்கெட் உரிமையாளர் தனகோடிக்கு, மகள் சொல்வதுதான் வேதம்!

எனவே, எல்லோரும் ப்ரீதி சொல்வது போலச் செய்துதான் தீர வேண்டும்!

முன்தினம் இரவு பத்து மணி தாண்டியும் கூட, இந்த விரட்டல் நீண்டுகொண்டேதான் இருந்தது.

பகல் முழுவதும் வேலை செய்த பெண்கள், கைகால் தளர்வது ப்ரீதியின் கண்ணில் படுவதாகவே இல்லை.!



அன்று இரவில் யாருக்கேனும் தூக்கம் என்று ஒன்று கிடைக்குமா என்று எல்லோரும் கலங்கத் தொடங்கியபோது, அவர்களின் நல்ல நேரமாக "இதை, விலை தெரியும்படியாக இப்படியா வைப்பது?" என்று ஆத்திரத்துடன் ஒரு வாசனை திரவிய பாட்டிலை எடுத்த ப்ரீதி, அதைக் கை நழுவிக் கீழே விட்டாள்.

விலை உயர்ந்த வாசனைத் திரவியம்! அதற்கேற்றபடி, அழகான வடிவுடன் கூடிய மெல்லிய கண்ணாடி பாட்டிலில் அடைக்கப்பட்டிருந்தது! அதைக் கையில் எடுத்து விலை பார்க்கிறேன் என்று அசம்பாவிதமாக இப்படி எதுவும் நடந்து விடக் கூடாது என்பதற்காகவே, விலை முன்புறம் தெரியும்படியாக வைப்பது!

குறை சொல்ல வேண்டும் என்பதற்காகவே எடுத்தவள்! இப்போது யாரைக் குறை கூறுவது?

உடைந்த கண்ணாடிச் சில் பட்டுவிடாமல் அவசரமாகப் ப்ரீதி விலகிக் கொண்டாலும், விலை உயர்ந்த வாசனை திரவியம் தன் வேலையைக் காட்டியது.

மிகவும் லேசாகத் தடவ வேண்டிய திரவம், மொத்தமாகக் கொட்டவும், அளவுக்கு மிஞ்சிய அமிர்தமாய், நெடி மூக்கைத் துளைத்தது!

சகித்துக்கொண்டு நிற்க மாட்டாமல், "இதை முதலில் சுத்தம் செய்யுங்கள். எல்லா 'எக்ஸாஸ்ட் ஃபேன்'களையும் போடுங்கள். நாளைக்கு இந்த நெடி சுத்தமாக இருக்கக் கூடாது! வளர்மதி, இன்னும் இரண்டு தளங்கள் இருக்கின்றன! எல்லாம் உன் பொறுப்பு! நாளைக்கு அவர்கள் வரும்போது, எல்லாம் கண்ணாடி போல மின்ன வேண்டும்" என்று மூக்கைப் பொத்தியவாறு கத்தியவள், அதற்கு மேல் அங்கே நில்லாமல், விரைந்தோடிச் சென்றுவிட்டாள்.

வளர்மதிதான் அங்கே முதலில் இருந்தே பணிபுரிகிறவள், எல்லோரிலும் மூத்த, சூப்பர்வைசர்.!

ப்ரீதியின் கார் கிளம்பி, அவள் வீடு சென்று வேலை நடக்கிறதா என்று ஒரு தரம் ஃபோன் செய்யும் வரை காத்திருந்துவிட்டு, ப்ரீதி செல்லை அணைத்ததும், "எல்லோரும் விடுதிக்குக் கிளம்புங்கடி, போய் வயிற்றுக்கு எதையாவது போட்டுக்கொண்டு படுத்துத் தூங்குங்கள்! காலையில் ஓர் அரை மணி நேரம் முன்னே வந்து வேலையைப் பார்த்துக் கொள்ளலாம்" என்று எல்லாப் பெண்களையும் கிளப்பிக் கூட்டிக்கொண்டு போனாள்.

இது போலச் சற்று நீக்குப் போக்காக நடந்து கொள்வதாலேயே, எல்லோருக்கும் பிடிக்கும்! ஆனால், அவளை ஓரளவு [illegible] முதலாளியுடைய [illegible] அடிவருடியாகத்தான் நடந்து [illegible]

12.02.2009 00:21

ஆனால், அதுதானே பிழைக்கும் வழி?

எல்லோரும் மொத்தமாகச் சேர்ந்து, அடுத்த தெருவில் இருந்த, அவர்கள் தங்கும் விடுதிக்குக் கிளம்பிப் போயினர்.

செல்லும்போதே "நாளைக்கு அப்படி யாரத்தா வரப் போகிறாங்க? இந்தப் பாடு படுத்துகிறாங்களே!" என்று அவர்களில் ஒருத்தி கேட்டாள்.

"தெரிந்த மாதிரிக் காட்டிக் கொள்ளாதீங்கடி. முதலாளி மகளைப் பொண்ணு பார்க்க வருகிறாங்களாம். தொழில் எல்லாம் எப்படிப் பார்க்கிறாள் பொண்ணு என்று தெரிந்து கொள்கிறதுக்காக, இங்கே கடைக்கே வந்து பார்க்கப் போகிறாங்களாம்! அதுதான் இந்த அலட்டல்!" என்றாள் வளர்மதி.

"அய்யோ! வந்து பார்க்கிறவுங்களுக்குப் பொண்ணு பிடித்துப் போய், சீக்கிரமே கல்யாணம் கட்டிக் கூட்டிப் போய்விட வேணும்னு நான் இப்பவே கடவுளுக்கு மனுக் கொடுத்திட்டேன்! வேணும்னா, ஒரு தேங்காயைக் கூட உடைத்திடலாம். ஏய், எல்லோரும் வேண்டிக் கொள்ளுங்கப்பா! சாமிக்கும் ஒரு முப்பது தேங்காய் தேறும்! அதற்காகவாவது, கடவுள் நமக்கு உதவி செய்ய மாட்டாரா?" என்று ஒருத்தி சொல்ல கிளுகிளுவென சிரிப்பலை பரவியது!

"கடவுளுக்கே லஞ்சம் கொடுக்கப் பார்க்கிறியே! இதற்கு உன்னை உதைக்கணும்" என்று ஒருத்தி சொல்ல, "அய்யோ, இது லஞ்சமில்லையம்மா. அன்பளிப்பு!" என்று முதலாமவள் விளக்கம் கொடுக்க, மறுபடியும் சிரிப்பு அலை மோதியது.!

கூடச் சேர்ந்து சிரித்தபோதும் "ராத்திரி மணி பத்தரைக்கு மேல்., இப்படிப் பெண்களாகச் சேர்ந்து சிரித்துக்கொண்டு போனால், பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க? வாயை மூடிக்கொண்டு, சத்தமில்லாமல் வாங்க!" என்று அவர்களை அதட்டி அழைத்துக் கொண்டு போனாள் வளர்மதி.

"ஆமாம்., ஆமாம் பசி வயிற்றைக் கிள்ளுது! வெறும் ரசம் சோறுதானென்றாலும், வயிறு நிரம்பப் போடுகிறாங்களே!" என்றபடி பெண்கள் கூட்டம் வேகம் எடுத்தது!

அவர்கள் அஞ்சியது போலக் காலையிலேயே வந்து, எல்லோரையும் ப்ரீதி கதி கலங்க வைக்கவில்லை!

மதிய உணவு தாண்டி, மாலை தொடங்கும் வரை கூட அவளது வாசனையே அங்கே அடிக்கவில்லை!

வழக்கமான வியாபாரம் நடக்க, எல்லோரும் இயல்பாக வேலை செய்து கொண்டிருந்தனர்.

ஆனாலும் எப்போது வந்து என்ன சொல்வாளோ என்ற பயத்தில், வளர்மதி நில்லாமல் சுற்றிக் கொண்டே இருந்தாள்.

வாடிக்கையாளருக்கு எடுத்துக் காட்டிய பொருளைப் பழைய



இடத்திலேயே ஒழுங்காக வைக்கச் சொல்லிக்கொண்டு, தூசி தும்பு விழுந்திருந்தால், எடுத்துச் சுத்தம் செய்துகொண்டு, இடையிடையே எல்லோரையும் எச்சரித்துக் கொண்டும் இருந்தாள்.

சுற்றிச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தவள், ஷாம்பூ, தலைக்குத் தடவும் எண்ணெய் போன்றபொருட்கள் வைத்திருக்கும் பகுதிக்கு வந்ததும், உள்ளே செல்லாமலே திரும்பிப் போனாள்.

இந்தப் பெண், தானாகவே செய்வன திருந்தச் செய்கிறவள். கலகலவென்று பேசிச் சிரிப்பது இல்லை என்றாலும், செய்யும் வேலை சுத்தமாக, நேர்த்தியாக இருக்கும்.

ப்ரீதி வரும்போது, இந்தப் பகுதிக்குள் வந்தாள் என்றால், பிரச்சினை இராது போகும்! அவள் அலட்ட வாய்ப்பே கிடைக்காது!

சுமார் நாலரை மணி அளவில், குப்பென்ற மணம் நாசியைத் தாக்க அவரவர் நின்ற நிலைக்குச் சரியாக, நிமிர்ந்தோ, திரும்பியோ பார்த்த அனைவருமே திகைத்துப் போயினர்!

அழகிப் போட்டிக்குப் போகிறவள் போல அலங்கரித்துக்கொண்டு, அங்கே வந்தவள் ப்ரீதியேதான்.

சேலை கட்டியிருந்தாள். ஆனால், கூந்தல், முக அலங்காரத்திலிருந்து சேலைக்கட்டு வரை, பார்லர் உபயம் என்பது நன்றாகத் தெரிந்தது!

ஒவ்வொரு மடிப்புக்கும் பின் குத்தியிருந்ததாலோ, அல்லது அழகென்று எண்ணினாளோ, நடைதான் கொஞ்சம் செயற்கையாக இருந்தது!

மற்றபடி அழகாகவே இருந்தாள்.

ஒயில் என்று தான் எண்ணிய நடையில், மயிலாக அந்தத் தளத்தை ஒரு தரம் சுற்றி வந்த ப்ரீதிக்கு, அங்கே பணி புரிந்த பெண்கள், மற்றும் வாடிக்கையாளரின் பார்வை மிகுந்த திருப்தியை அளித்தது!

ஓரிரு பெண்கள் "இன்றைக்கு ரொம்ப அழகாக இருக்கிறீங்க, மேடம்!" என்று பாராட்டவும் செய்தார்கள்.

உச்சி குளிர்ந்தாலும், "இன்றைக்கு மட்டும்தானா? அப்படியானால் மற்ற நாட்களில் அசிங்கமாகவா இருந்தேன்?" என்று அவர்களைத் திணறடித்து ரசித்தவாறே சென்ற ப்ரீதிக்கு, ஷாம்பூ பகுதியில் ஒரு பின்னடைவு காத்திருந்தது!

முதலாளியுடைய மகள், தன்னை அழகுப்படுத்திக் கொண்டு வந்தால், ஒன்று, நமக்கு இதற்கு வழியில்லையா என்று பொறாமையில் பொசுங்க வேண்டும், அல்லது 'ஆஹா' என்று ரசித்துப் பாராட்ட வேண்டும்!

12.02.2009 00:22

இரண்டும் இல்லாமல், இப்படி மரக்கட்டை மாதிரி நின்றால், அது அவளை அலட்சியப்படுத்துவது ஆகாதா?



அதாவது, பெரிதாகச் செயற்கையாக அழகுபடுத்திக்கொண்டு வந்து நிற்கிறாய் என்று சொல்லாமல் சொல்லி அவமானப்படுத்துகிறாள்!

இவள் இயற்கையிலேயே அழகியாக இருக்கலாம்! ஆனால், அந்த அழகினால், அவளுக்கு என்ன பெரிதாகக் கிட்டிவிட்டது.

இங்கே ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணி நேரம், கால் கடுக்க நின்று பணி புரிந்து, அதற்குக் கூலியாக ப்ரீதி போடும் பிச்சைக் காசில் பிழைப்பவள்தானே?

ஒல்லிக் குச்சி மாதிரி உடம்பை வைத்துக்கொண்டு, இவளுக்கு, இவ்வளவு திமிரா, என்று கொதித்தது, அந்தப் பணக்காரியின் மனம்!

யாரோ வாடிக்கையாளருக்கு வேண்டிய பொருளை எடுத்துக் கொடுத்துவிட்டு, அவர் கழித்த மீதியை அடுக்கி வைத்தவளைப் பார்த்துக் கொண்டே இருந்த ப்ரீதிக்கு, அந்தத் திமிர்ப் பிடித்தவளைப் பழி வாங்க விஷயம் கிடைத்துவிட்டது!

அதேசமயம், தன் நிர்வாகத் திறமையை எடுத்துக் காட்டவும்! பெண் கெட்டிக்காரியாக இருக்க வேண்டும் என்று சொன்னார்களாமே! எவ்வளவு கெட்டிக்காரி இந்தப் ப்ரீதி என்று தெரிந்து கொள்ளட்டும்.

போகப் போக இன்னும் நன்றாகவே தெரியும்!

அந்தப் பல மாடிக் கட்டிடத்தில், முதல் மாடி அது! அங்கேதான் மாப்பிள்ளை வீட்டாரை அழைத்து வருவதாக, அவளுடைய தந்தை சொல்லியிருந்தார்.

பெண் பார்க்க வருவதாக, மகளிடம் சொல்லவேண்டாம்., அது அவளுக்கு ஒரு மாதிரி மன இறுக்கத்தைத் தரக் கூடும் என்று மாப்பிள்ளைப் பையனுடைய தந்தை சொன்னாராம்!

கேட்கும்போதே சிரிப்பு வந்தது அவளுக்கு

இதை நம்புவதற்கு ப்ரீதி என்ன முட்டாளா? அல்லது, விஷயத்தை, மகளிடம் சொல்லாதிருக்க,அவளுடைய தந்தைதான் அறிவற்றவரா?

அலங்காரம் இல்லாமல், பெண் இயல்பாக எப்படி இருப்பாள் என்று பார்க்க விரும்புகிறார்கள்! இப்போது வந்து பார்த்து விட்டு, இயற்கையிலேயே ப்ரீதி பேரழகி என்று எண்ணிக்கொண்டு போகட்டும்! போய்த் திருமணத்துக்கு நாள் குறித்து அனுப்பட்டும்!

அனுப்பியாக வேண்டும்!

ஏனென்றால், படத்தில் பார்க்கும்போதே, பையனை அவளுக்குப் பிடித்திருந்தது!

பையனோடு, அவன் குடும்பப் பொருளாதார நிலையும்!

இதை விடுவது, முட்டாள்தனம் என்று அவளது நிர்வாகப் படிப்பு இல்லாமலேயே அவளுக்குத் தெரியும்!

'லிஃப்டில்' தந்தையின் குரல் கேட்கவும், எப்படி என்ன செய்ய



வேண்டும் என்று மனதுக்குள் ஒத்திகை நடத்திக் கொண்டிருந்த ப்ரீதி அவசரமாக எழுந்து, வேகமாகச் சென்றாள்.

ஷாம்பூ பகுதிக்குள் அவள் செல்வதைப் பார்த்து, வளர்மதி ஆசுவாசப் பெருமூச்சைப் பாதி விட்டுக் கொண்டிருக்கும்போதே, ப்ரீதியின் குரல் உரத்துக் கேட்கவும், திகைத்து விழித்தாள் அவள்.

ஷாம்பூ பகுதிக்குள் செல்லாமல் ப்ரீதி வேறு எங்கேயும் போய்விட்டாளோ என்று தேடிப்பார்த்தாள், அவள் ஷாம்பூ பகுதியில்தான் நின்று கொண்டிருந்தாள்.

கத்திக்கொண்டும்!

அந்தப் பெண்ணிடம் கத்துவதற்கு என்ன கிடைக்கக் கூடும்?

"ஏய், என்ன இது? ஷாம்பூவையும், சோப்பையும் ஏன் அடுத்தடுத்து அடுக்கவில்லை? இரண்டுமே நுரை வருகிற பொருட்கள் என்று தெரியாது? ஒன்றோடு ஒன்று தொடர்புடைய பொருட்களை, ஒரே இடத்தில் அடுக்க வேண்டும் என்று கூடத் தெரியாமல், இங்கே என்ன வேலை பார்க்கிறாய்? வெறும் தண்டம்! உனக்கெல்லாம் சம்பளம் கொடுப்பதற்குப் பேசாமல், ஊனமுற்ற யாருக்கேனும் பிச்சை போட்டுவிட்டுப் போகலாம்! இவ்வளவு முட்டாள்தனமாக எப்படித்தான் அடுக்கினாயோ? ஒழுங்காகப் பிரித்து அடுக்கு!" என்று அதிகாரமாக உத்திரவிட்டாள்.

ஒரு கணம் திகைத்துவிட்டு "மேடம், ஷாம்பூ தலை முடி தொடர்பானது! அதனால், அதனோடு தொடர்பு உள்ளவைகள், பலவகை ஷாம்பூ, கண்டிஷனர், கூந்தலுக்கான ஹெர்பல் டானிக் எல்லாம் சேர்த்து வைப்பதுதான் வழக்கம்! சோப்பு உடல் சுத்தம் செய்வதோடு சேர்ந்து வரும். அதனால்...." என்று விற்பனையில் நின்ற பெண் விளக்கவும், ப்ரீதிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது!

அவள் ஒன்று சொல்லி, அவளிடம் கை கட்டிப் பணி புரியும் ஒருத்தி, அவளை எதிர்த்துப் பேசுவதா?

அதுவும் சரியான விளக்கத்தைச் சொல்லி!

ஆமாம்! அந்தப் பெண்ணை திட்டும் அவசரத்தில் கவனியாது விட்ட உண்மை, ப்ரீதிக்கும் மற்றவள் சொல்லச் சொல்ல புரிந்து விட்டிருந்தது!

ஆனால், அவள் பக்கம் நியாயமே கூட இருந்தாலும், முதலாளியுடைய மகள் வெள்ளைக் காக்கை பறந்தது என்றால், அவளிடம் கை நீட்டி சம்பளம் வாங்குகிறவளும் ஆமாம் என்றுதானே சொல்லியாக வேண்டும்?

அதைவிட்டு, அதிகாரத்தில் உள்ளவளைக் காட்டிக் கொடுக்கிற மாதிரி, அவளிடம் பணி புரிகிறவள் எப்படிப் பேசலாம்?

அவள் வாயை மூட வைப்பதல்லவா, இப்போது ப்ரீதியின் முதல் வேலை?

12.02.2009 00:23

வேகமாக அவளை நெருங்கி, "ஏய் வாயை மூடு!, நான் சொன்னால், அதைச் செய்யாமல் எதிர்த்து வாயாடுகிறாயா? போ! போய் நான் சொன்னதைச் செய்!" என்று அவளைப் பிடித்துத் தள்ளினாள் ப்ரீதி.

இப்படி ஒரு தாக்குதலை எதிர்பார்த்திராத அவள் தடுமாறி விழுகையில், ஓர் எட்டில் வளை அணுகி, விழாமல் தாங்கினான், இந்த நாடகம் முழுவதையும் பேரதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்த சுதர்மன்.

நிமிர்ந்து, அவன் முகத்தைப் பார்த்ததும், சட்டென அவனது பிடியிலிருந்து உதறித் தன்னை விடுவித்துக்கொண்டு, வரிசையாய் சாமான்கள் அடுக்கியிருந்த தட்டடுக்கின் பின்புறம் சென்று மற்றவர் கண்ணுக்கு மறைவாகத் தலையைப் பிடித்துக்கொண்டு நின்றாள் அந்தப் பெண்.

அவள் மதுவந்தி!

சுதர்மனை அவள் மறுபடியும் பார்க்கும்படி ஆனதே கொடுமை! அதுவும் இந்த நிலையில் அவளைப் பார்க்க நேர்ந்ததை நினைத்து, குன்றிக் குறுகிப் போனாள் அவள்.

மதுவந்தியின் துன்பம் சிறிதும் புரியாமல், "ஏய், நான் சொல்வது காதில் விழுகிறதா? நாளைக் காலைக்குள்ளே, எல்லாச் சாமான்களையும் நான் சொன்ன மாதிரி அடுக்கி வைத்திருக்க வேணும். அது முடியும் வரை நீ சாப்பாட்டுக்கே போக முடியாது!" என்று அவளை மிரட்டிவிட்டு, ப்ரீதி தந்தையிடம் வந்தாள்.

"எல்லாம் உங்களால் வந்தது, டாடி! இரண்டு சொட்டுக் கண்ணீரை விட்டுவிட்டால், திறமை இருக்கிறதா, இல்லையா என்றே பாராமல், வேலையில் சேர்த்து விடுகிறீர்கள்! பாருங்கள் எனக்கு, இந்தப்பாடாகி விடுகிறது" என்று தந்தையை உற்றுப் பார்த்தாள்.

சட்டென நினைவு வந்தவராக "நம்ம பொண்ணு! தொழில் நிர்வாகம் படித்திருக்கிறாள். இவள் படித்து முடித்து வந்த பிறகு, கிட்டத்தட்ட எனக்கு ஓய்வுதான் தொழிலைப் பிரமாதமாகப் பார்த்துக் கொள்கிறாள். எதிலும் ரொம்பக் கவனம்! சின்னது, பெரிது என்று பாராமல், எல்லாவற்றிலும் கவனமாக இருப்பாள்!" என்று மகளைப் பற்றிப் புகழ் பாடினார் தந்தை.

அடக்கம்போலக் காட்டிக் கொள்ளக் கூட இல்லை மகள்.

தந்தையின் புகழ் மாலையை அப்படியே ஏற்றவள், சாமான் அடுக்குகளில் எதையோ பார்ப்பது போல நின்ற மாப்பிள்ளைப் பையனை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு, அவனைப் பெற்றவர்களிடம் திரும்பினாள்.

"என்ன செய்வது, அங்கிள்? கவனமாக இல்லாவிட்டால், இந்தக் காலத்தில் தலையில் மிளகாய் அரைத்து விடுவார்களே! தொழில்



நிர்வாகம் படித்ததற்கு, அப்பாவுக்கு இந்த உதவியாவது செய்ய முடிகிறதே! இன்னும் கொஞ்சம் கண்டிப்பாக இருக்க எனக்கு ஆசைதான்! ஆனால், அப்பா இடம் கொடுத்து, எல்லோரையும் நன்றாகக் கெடுத்து வைத்திருக்கிறார்! பெண்கள், இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டால், உடனே இளகி விடுவது, ஆண்களுக்கு வழக்கம்தானே? அப்பாவும் அப்படித்தான். இப்போது இந்தப் பெண்ணையே பாருங்க! செய்த வேலை தப்பு! வைத்திருக்கும் இடம் சட்டெனக் கண்டுபிடிக்க வசதியாக இருப்பதற்காகத்தான், ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொருட்களை அருகருகே வரிசைப்படுத்தி வைப்பது! தானாகத் தெரியாவிட்டாலும், சொன்னாலாவது கேட்க வேண்டும்? திரும்பவும் அடுக்குகிற ஒரு சின்ன வேலைக்கு மாய்ச்சல் பட்டுக்கொண்டு, என்னிடமே எதிர்த்து வாயாடுகிறாள், பாருங்கள்! இவளையெல்லாம் அதட்டி, மிரட்டி வைக்கவில்லை என்றால், ஒரு வேலையும் நடக்காது! இப்போது சாப்பாட்டுக்கே போக முடியாது என்று வயிற்றில் அடித்து விட்டேன் அல்லவா? நீங்கள் வேண்டுமானால், என்னுடனேயே நாளை வரை இருந்து பாருங்கள், ஆண்ட்டி, நாளைக் காலையிலேயே எல்லாவற்றையும் ஒழுங்காக அடுக்கி வைத்திருப்பாள்!" என்று அளந்தவளுக்கு, அதன் பிறகே, இவர்கள் யார், இங்கே எதற்காக வந்திருக்கிறார்கள் என்று, தனக்குத் தெரியாத மாதிரி நடிக்க வேண்டும் என்பது நினைவு வந்தது!

உடனேயே அதையும் "ஐய்யோடா...! ஒன்று போல, அத்தனை பேரையும் விரட்டி, விரட்டி, வேலை வாங்க வேண்டியிருக்கிறதா? ஒரே அலுப்பு... பாகிவிட்டது! அந்த அலுப்பில் ஏதோ சாமான் வாங்க வந்த உங்களிடம் போய்ப் புலம்பிவிட்டேன். தயவு பண்ணி மன்னித்து விடுங்கள்! இப்போது உங்களுக்கு என்ன வேண்டும், சொல்லுங்கள். எடுத்துத் தரச் சொல்லுகிறேன்! வாருங்கள்" என்று விழிகளை விரித்துப் பதவிசாக அழைத்து சமாளித்தாள்.

இந்த இடத்தில் தந்தை பொறுப்பேற்றுக் கொண்டார்.

"ஹிஹிஹி, சாரும், அம்மாவும் நம் கடையில் சாமான் வாங்க வரவில்லை, கண்ணு! அவர்களுக்கு ஒரு பையன்! கல்யாணம் பண்ண வேண்டும் என்று, நல்ல கெட்டிக்காரியான பெண் தேடி... அதாவது தொழில் எல்லாம் கவனிக்கத் தெரிந்த பெண் தேடினார்களாம். உன்னைப் பற்றி, நிறையப் பேர் சொன்னதினாலே... சம்பந்திகள் இங்கே வந்திருக்கிறார்கள்... ஹிஹி!" என்று பல்லைக் காட்டினார்.

சிரமப்பட்டு வெட்கி "ஐயோ! போங்கப்பா! என்னிடம் சொல்லவே இல்லையே... நான் பாட்டில் விட்டில் சும்மா இருக்கிறது போலவே, ... வந்துவிட்டேனே! அவர்கள் அலங்காரமே பண்ணி...

12.02.2009 00:23



என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?" என்று நெளிந்து குழைந்தாள்.

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட மாதவனும், கனகாவும் ஒன்றும் அறியாத பச்சைக் குழந்தைகள் அல்லவே!

லேசாக முறுவலித்து "நினைப்பதற்கு என்னம்மா இருக்கிறது? எதற்கும் மகனுடன் கலந்து பேசிவிட்டு, அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறோம்" என்றாள் கனகா பொதுவாக.

"சொல் பேச்சு தட்டுகிற பிள்ளையையா, பெற்றிருக்கிறீர்கள்? தம்பி தங்கக் கம்பி என்று கேள்விப்பட்டேனே! நீங்கள் சொன்னால், மாப்பிள்ளை கட்டாயம் ஒத்துக் கொள்வார், சம்பந்தி!" என்று உறவு கொண்டாடினார், பெண்ணுக்குத் தந்தை.

இந்த இடத்தை விடக் கூடாது. சம்மதமாய் ஒரு வார்த்தை பெற்றுவிட வேண்டும் என்பது அவருக்கு!

மாதவனும் பலருடன் பழகித் தொழில் நடத்தி ஜெயித்தவர் ஆயிற்றே!

"அந்த மதிப்பை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான், நான் அவனிடம் எதையும் சொல்வதே இல்லை" என்று வேடிக்கை பேசிச் சிரித்துவிட்டு, அந்தச் சிரிப்பின் போர்வையில், "அப்படியானால், நாங்கள் கிளம்புகிறோம்" என்று விடைபெற்றார்.

வெளியேறுவதற்காகத் திரும்பியவாறு மகனைப் பார்த்தால், அவனைக் கண்ணிலேயே காணோம்!

மாதவனுக்கு முன்பாகவே, ப்ரீதியின் கண்களும், அவனைத்தான் தேடிக் கொண்டிருந்தன.

ஏதோ சாமான் பார்க்கிற பாவனையில் நின்றாலும், அவன் காதும், கவனமும், கண்ணுமே தன்னிடம்தான் இருக்கும் என்ற நிச்சயத்தில்தான், அவள் தன்னைப் பற்றி அவ்வளவு அளந்தது!

ஆனால், அதைக் கேட்டு மயங்குவதை விடுத்து, யாரும் அறியாமல், அவன் எங்கே சென்றான்?

ஒரு சிறு சந்தேகம் தோன்ற, பதவிசான பாவனை மறந்து, பாய்ச்சலின் வேகத்துடன் தலையை இங்குமங்கும் திருப்பித் திருப்பி அவள் தேடியபோது, சுதர்மனின் உயரம் அவனைக் காட்டிக் கொடுத்தது!

அவன் நின்ற இடத்தைக் கண்டு கொண்ட ப்ரீதியின் கண்கள் கனன்று சிவந்தன!



## 12 வாழும் முறைமையடி



மதுவந்தியை அந்த இடத்தில், அதுவும் அந்த மாதிரி நிலையில் சந்திக்கக் கூடும் என்று, சுதர்மன் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை!

முயன்றும் மறக்க முடியாமல் என்னென்னவோ நிலைகளில் மனக் கண்ணால் அவளைக் கண்டு, கண்டு நொந்திருக்கிறான். மனம் கசந்திருந்திருக்கிறான்... இவளிடம் போய் ஏமாந்தோமே என்று உள்ளம் குன்றியும் இருக்கிறான்.

ஆனால், எந்த மோசமான கற்பனையிலுமே இப்படித் தகுதியற்ற ஒருத்தியிடம் குற்றேவல் புரிகிறவளாக, அவளை அவன் கண்டதே கிடையாது!

அப்படிக் காண நேர்ந்தபோது, அவனால் அதைத் தாங்கவும் முடியவில்லை!

இது எப்படி நடந்திருக்கக் கூடும்?

ஆனால், நேரடியாக மதுவந்தியிடம் பேசப் போனால், அது அவளுக்கு பெரும் தொல்லையாக மாறிவிடக் கூடுமோ என்ற அச்சத்தால், விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பொருட்களைப் பார்வையிடுகிறவன் போன்ற பாவனையுடன் மதுவந்தியைத் தேடிச் சென்றான்.

அவள் சென்று மறைந்த இடம் அவன் பார்த்ததுதானே?

பொருட்களைப் பார்க்கிற மாதிரியே, அடுக்குகளின் மறுபுறம் சென்றால், அவன் ஊகித்தது போலவே, அங்கேதான் அவள் நின்றுகொண்டிருந்தாள்.

தாங்க முடியாத கனம் போல, அவளது தலையையே கைகளால், இறுகப்பற்றியபடி!

இந்தத் தோற்றத்தையும், சுதர்மனால் தாங்க முடியவில்லைதான்!

அருகில் நெருங்கும்போதே, அரவம் உணர்ந்து, மதுவந்தி நிமிர்ந்துவிட்டாள்.

அவசரமாகக் கைகளைத் தலையிலிருந்து எடுத்து, ஒன்றுமில்லாதது போல, அவள் நிமிர்ந்து நின்றது, இன்னொரு விதமாக மனதைப் பாதிக்க, "ஏன் இப்படி, மதுவந்தி?" என்று மெல்லிய குரலில் வினவினான் அவன்.

"எப்படி?"

"புரியாத மாதிரி நடிக்க வேண்டாம், மது! இந்த இடத்தில் இப்படி வேலை எதற்காக?"

ஒரு வெறுத்த ... "... வேண்டும்

12.02.2009 00:23

அல்லவுடீ?" என்றாள் மதுவந்தி.

தலையசைத்து "அதுதான் புரியவில்லை" என்றான் சுதர்மன். "நீ நல்ல நிலைமையில் இருப்பாய் என்று எண்ணினேன்" என்றான் தொடர்ந்து.

மதுவந்தியின் முகத்தில் ஏளனம் பரவியது "அன்றைக்கு நீங்கள் பேசிய பேச்சின் பிறகுமா?" என்று ஏகத்தாளமாகக் கேட்டவள் உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அடங்கிய குரலில் "போனது போகட்டும், முடிந்த கதை, முடிந்ததாகவே இருக்கட்டும்! இங்கே நின்று பேசி, இங்கேயும் என் பிழைப்பைக் கெடுக்க வேண்டாம்! தயவு பண்ணிப் போய்விடுங்கள்!" என்று அமைதி காட்டியே கேட்டுக் கொண்டாள்.

புரியாத பார்வையுடன், அவன் மேலும், எதையோ பேச முற்படவும், சட்டென முகம் மாறி, "உங்களுடன் பேச எனக்கு விருப்பம் இல்லை! ஒருவேளை, இந்த வேலையும் போய், நான் பட்டினி கிடந்து சாக வேண்டும் என்பது உங்கள் ஆசையானால், இனியும் நின்று பேசுங்கள்" என்றாள் அவள் கடுமையாக.

அதற்கு மேல் எந்த விதப் பேச்சுமின்றி, சுதர்மன் விலகிப் போவதை வெறித்துப் பார்த்தபடி நின்றாள் மதுவந்தி!

புறப்படுவதற்கு தயாராக பெற்றோர் இருக்கவே, பொதுப்படையான ஒரு கைகுவிப்புடன் அவர்களோடு நடந்தான் சுதர்மன்.

பார்க்க வந்த பெண்ணை, அவன் ஏறெடுத்தும் நோக்கினானில்லை!

கொதிப்புடன் மதுவந்தியிடம் திரும்பினாள் ப்ரீதி.

மாலை முழுவதும் அவளை விரட்டி விரட்டி வேலை வாங்கினாள். மதுவந்தி கால் தடுமாறியபோது கூட விடவில்லை.

காரணம் ஓரளவு மதுவந்திக்குப் புரிந்தது!

இவள் உள்ளே வந்து, அவனிடம் தனியாகப் பேசவில்லை என்று யார் அழுதார்கள் என்று உள்ளூர கசந்தபடி, ப்ரீதி கொடுத்த அத்தனை வேலைகளையும் குறை கூற இடமில்லாதபடி செய்தாள் அவள்.

அவளை வேலையிலிருந்து நீக்குவதற்கான சாக்கைக் கொடுத்துவிடக் கூடாதே!

குறைந்த பட்சமாக இன்னும் நாலு மாதங்கள், அவளுக்கு இந்த வேலை, தேவை ஆயிற்றே!

அதற்குள்ளாகச் சுதர்மன் இங்கே ஏன்தான் வந்தானோ என்றிருந்தது அவளுக்கு.

முதலாளியே தன்னோடு கூட்டி வந்ததோடு, கீழே வரை வந்து வழியனுப்பி வைக்கவும், கார்க் கதவைச் சாத்த வந்தான் காவலாள்.



மரியாதையுடன் கார்க் கதவைச் சாத்தியவனிடம் ஓர் ஐம்பது ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு, "உங்கள் கடையில் பணி புரிகிறவர்கள் நிறையப் பேர் பெண்களாக இருக்கிறார்களே, அவர்கள் எல்லோரும், அவரவர் வீட்டில் இருந்தா வருகிறார்கள்?" என்று சுதர்மன் விசாரித்தான்.

"அப்படி இல்லீங்கய்யா. பக்கத்துத் தெருவிலே நம்ம அய்யாவுக்குச் சொந்தமா, ஒரு வீடு இருக்குதுங்க. ஆறாம் நம்பர் வீடு. கடைப் பொண்ணுங்க எல்லாருமே அங்கிட்டுதாங்க தங்குறது! சாப்பாட்டுக்கும் அங்கேதான் போய் வருவாங்க! ராத்திரிச் சாப்பாடு, கடை எடுத்து வைச்சதுக்கு அப்புறம்தானுங்க" என்று வாங்கிக்கொண்ட ஐம்பது ரூபாய்க்கு, வஞ்சனை இல்லாமல் விவரங்களை அள்ளிக் கொட்டினான் காவலாள்.

கார் மெல்ல நகரவும், "அவள்தான் அந்தப் பெண் என்று தெரிகிறது! ஆனால், உன்னைப் பார்த்தும், அஞ்சவோ, கலங்கவோ இல்லாமல் ஆத்திரப்படுகிறாளே!" என்று மகனிடம் கேட்டார் மாதவன்.

காரை ஓட்டிய மகனின் தோள் விறைப்புறக் காணவும் "அவள் உன்னை உதறி... உன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு போனதைப் பார்த்தோம்" என்றாள் கனகா.

கார் பக்கத்துத் தெருவில் புகுந்து 'ப்ரீதி' என்ற பெயர்ப் பலகையிட்ட, காரை பெயர்ந்து சிதிலமான, ஆறாம் எண் வீட்டைத் தாண்டிச் சற்று தூரம் சென்று நின்றது.

சிறு அமைதியின் பின், ஒரு பெருமூச்சுடன் மகன் சொன்னான் "எனக்கும் ஒன்றும் புரியவில்லை அம்மா. எவனையாவது பிடித்துக்கொண்டு வசதியாக.... ரொம்ப வசதியாக வாழ்ந்து கொண்டிருப்பாள் என்று நினைத்தேன்! ஆனால் இவ்வளவு மோசமான நிலையில்... பிடித்து தள்ளினாலும் பொறுத்துக்கொண்டு... மதுவந்தி எப்படிப் பட்டவளாக இருந்தாலும் இந்தக் கீழ் நிலையில் அவளை விட்டுப் போக என்னால் முடியாது!" என்றான் முடிவாக.

"ஓ!"

"மது அணிந்திருந்த சுரிதாரை நீங்கள் கவனித்திருந்தீர்களோ, என்னவோ? துவைத்துத் துவைத்துப் பழசானது போல... எப்போதுமே அவள் விலை உயர்ந்த வகை அணிந்து நான் பார்த்தது இல்லை! ஆனால், கண்ணியமாக, மரியாதையைத் தூண்டும் விதமாக, பளிச்சென்று இருக்கும். இப்படி... ஊகூம் இல்லையம்மா. அவளை இப்படி விட்டுவிட என்னால் முடியாது!" என்றான் மகன் மறுபடியும்.

"ஓகோ! ஆனால், என்ன செய்யலாம் என்கிறாய்? கல்யாணமா?" என்று சட்டெனக் கேட்

12.02.2009 00:23



அல்லவுடீ?" என்றாள் மதுவந்தி.
தலையசைத்து "அதுதான் புரியவில்லை" என்றான் சுதர்மன். "நீ நல்ல நிலைமையில் இருப்பாய் என்று எண்ணினேன்" என்றான் தொடர்ந்து.
மதுவந்தியின் முகத்தில் ஏளனம் பரவியது "அன்றைக்கு நீங்கள் பேசிய பேச்சின் பிறகுமா?" என்று ஏகத்தாளமாகக் கேட்டவள் உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.
அடங்கிய குரலில் "போனது போகட்டும், முடிந்த கதை, முடிந்ததாகவே இருக்கட்டும்! இங்கே நின்று பேசி, இங்கேயும் என் பிழைப்பைக் கெடுக்க வேண்டாம்! தயவு பண்ணிப் போய்விடுங்கள்!" என்று அமைதி காட்டியே கேட்டுக் கொண்டாள்.
புரியாத பார்வையுடன், அவன் மேலும், எதையோ பேச முற்படவும், சட்டென முகம் மாறி, "உங்களுடன் பேச எனக்கு விருப்பம் இல்லை! ஒருவேளை, இந்த வேலையும் போய், நான் பட்டினி கிடந்து சாக வேண்டும் என்பது உங்கள் ஆசையானால், இனியும் நின்று பேசுங்கள்" என்றாள் அவள் கடுமையாக.
அதற்கு மேல் எந்த விதப் பேச்சுமின்றி, சுதர்மன் விலகிப் போவதை வெறித்துப் பார்த்தபடி நின்றாள் மதுவந்தி!
புறப்படுவதற்கு தயாராக பெற்றோர் இருக்கவே, பொதுப்படையான ஒரு கைகுவிப்புடன் அவர்களோடு நடந்தான் சுதர்மன்.
பார்க்க வந்த பெண்ணை, அவன் ஏறெடுத்தும் நோக்கினானில்லை!
கொதிப்புடன் மதுவந்தியிடம் திரும்பினாள் ப்ரீதி.
மாலை முழுவதும் அவளை விரட்டி விரட்டி வேலை வாங்கினாள். மதுவந்தி கால் தடுமாறியபோது கூட விடவில்லை.
காரணம் ஓரளவு மதுவந்திக்குப் புரிந்தது!
இவள் உள்ளே வந்து, அவனிடம் தனியாகப் பேசவில்லை என்று யார் அழுதார்கள் என்று உள்ளூர கசந்தபடி, ப்ரீதி கொடுத்த அத்தனை வேலைகளையும் குறை கூற இடமில்லாதபடி செய்தாள் அவள்.
அவளை வேலையிலிருந்து நீக்குவதற்கான சாக்கைக் கொடுத்துவிடக் கூடாதே!
குறைந்த பட்சமாக இன்னும் நாலு மாதங்கள், அவளுக்கு இந்த வேலை, தேவை ஆயிற்றே!
அதற்குள்ளாகச் சுதர்மன் இங்கே ஏன்தான் வந்தானோ என்றிருந்தது அவளுக்கு.
முதலாளியே தன்னோடு கூட்டி வந்ததோடு, கீழே வரை வந்து வழியனுப்பி வைக்கவும், கார்க் கதவைச் சாத்த வந்தான் காவலாள்.
108 ☐ ரமணிசந்திரன்
மரியாதையுடன் கார்க் கதவைச் சாத்தியவனிடம் ஓர் ஐம்பது ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு, "உங்கள் கடையில் பணி புரிகிறவர்கள் நிறையப் பேர் பெண்களாக இருக்கிறார்களே, அவர்கள் எல்லோரும், அவரவர் வீட்டில் இருந்தா வருகிறார்கள்?" என்று சுதர்மன் விசாரித்தான்.
"அப்படி இல்லீங்கய்யா. பக்கத்துத் தெருவிலே நம்ம அய்யாவுக்குச் சொந்தமா, ஒரு வீடு இருக்குதுங்க. ஆறாம் நம்பர் வீடு. கடைப் பொண்ணுங்க எல்லாருமே அங்கிட்டுதாங்க தங்குறது! சாப்பாட்டுக்கும் அங்கேதான் போய் வருவாங்க! ராத்திரிச் சாப்பாடு, கடை எடுத்து வைச்சதுக்கு அப்புறம்தானுங்க" என்று வாங்கிக்கொண்ட ஐம்பது ரூபாய்க்கு, வஞ்சனை இல்லாமல் விவரங்களை அள்ளிக் கொட்டினான் காவலாள்.
கார் மெல்ல நகரவும், "அவள்தான் அந்தப் பெண் என்று தெரிகிறது! ஆனால், உன்னைப் பார்த்தும், அஞ்சவோ, கலங்கவோ இல்லாமல் ஆத்திரப்படுகிறாளே!" என்று மகனிடம் கேட்டார் மாதவன்.
காரை ஓட்டிய மகனின் தோள் விறைப்புறக் காணவும் "அவள் உன்னை உதறி... உன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு போனதைப் பார்த்தோம்" என்றாள் கனகா.
கார் பக்கத்துத் தெருவில் புகுந்து 'ப்ரீதி' என்ற பெயர்ப் பலகையிட்ட, காரை பெயர்ந்து சிதிலமான, ஆறாம் எண் வீட்டைத் தாண்டிச் சற்று தூரம் சென்று நின்றது.
சிறு அமைதியின் பின், ஒரு பெருமூச்சுடன் மகன் சொன்னான் "எனக்கும் ஒன்றும் புரியவில்லை அம்மா. எவனையாவது பிடித்துக்கொண்டு வசதியாக.... ரொம்ப வசதியாக வாழ்ந்து கொண்டிருப்பாள் என்று நினைத்தேன்! ஆனால் இவ்வளவு மோசமான நிலையில்... பிடித்து தள்ளினாலும் பொறுத்துக்கொண்டு... மதுவந்தி எப்படிப் பட்டவளாக இருந்தாலும் இந்தக் கீழ் நிலையில் அவளை விட்டுப் போக என்னால் முடியாது!" என்றான் முடிவாக.
"ஓ!"
"மது அணிந்திருந்த சுரிதாரை நீங்கள் கவனித்திருந்தீர்களோ, என்னவோ? துவைத்துத் துவைத்துப் பழசானது போல... எப்போதுமே அவள் விலை உயர்ந்த வகை அணிந்து நான் பார்த்தது இல்லை! ஆனால், கண்ணியமாக, மரியாதையைத் தூண்டும் விதமாக, பளிச்சென்று இருக்கும். இப்படி... ஊகூம் இல்லையம்மா. அவளை இப்படி விட்டுவிட என்னால் முடியாது!" என்றான் மகன் மறுபடியும்.
"ஓகோ! ஆனால், என்ன செய்யலாம் என்கிறாய்? கல்யாணமா?" என்று சட்டெனக் கேட்
12.02.2009 00:24

சுதர்மனுமே சற்று அதிர்ந்தது போலத்தான் தோன்றியது.

ஆனால், உடனேயே "அதுவும் செய்யலாம்" என்று பதில் சொன்னான்.

"அவளைப் பற்றி, என்னவெல்லாமோ சொன்னாயே!" இது தாயின் கேள்வி.

ஆனால் இந்த முறை தாமதமின்றியே பதில் வந்தது "சொன்னேன், அம்மா ஆனால், அவளை இப்படி என்னால் விட முடியாது! குறைந்த பட்சமாக, அவளுடன் பேசியே ஆக வேண்டும்!" என்றான் பிள்ளை.

மதுவந்தியின் வருகைக்காக மூவருமே காத்திருந்தனர்.

இரண்டு மணி நேரம் ஆனதும், "நான் இறங்கிக் கொள்கிறேன். நீங்கள் இருவரும் போய் ஏதாவது சாப்பிட்டு வாருங்கள்" என்றான் மைந்தன்.

"பரவாயில்லை. மாலைச் சிற்றுண்டி கனம்தான். தாங்கும்" என்று பெற்றோரும் அவனோடு கூடவே இருந்தனர்.

ஒன்பது மணியளவில் நிறைப் பெண்கள் வந்தார்கள்.

ஆனால், அவர்களில் மதுவந்தி இல்லை.

மேலும் அரை மணி நேரம் கழித்து இன்னும் ஐந்தாறு பேர் வந்தனர்.

"பேய் பிடித்துவிட்டது. எவளாவது பேயாட்டுகிறவன்தான் சரி..." என்று.. இது போன்ற பேச்சுடன், அந்த வீட்டினுள் சென்று மறைந்தனர்.

பத்து மணியளவிலும் மதுவந்தியைக் காணவில்லை எனவும், சுதர்மனும் இறுகலானான்.

"அந்தப் பிசாசு மதுவை ஏதேனும் செய்திருக்குமாப்பா? போய்ப் பார்க்கலாமா?" என்று அவன் கேட்கையிலேயே சோர்ந்த நடையுடன் மதுவந்தி வருவது தெரிந்தது!

தன்னந்தனியே எடுத்து வைத்த ஒவ்வோர் அடியிலும் களைப்புத் தெரிந்தது! மிக அதிகமாக வேலை வாங்கப்பட்டிருக்கிறாள் என்பது மூவருக்குமே தெரிந்தது!

ஒருவரையொருவர் பார்த்துக்கொண்ட கணவன் மனைவிக்கு, மகனோடு ஒத்து நினைக்கவும் முடிந்தது.

ஓரளவு அருகில் வந்ததும், அவளை அணுகி "உனக்காகத்தான் காத்திருக்கிறோம்" என்றான் சுதர்மன்.

அவள் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை "அதுபற்றி எனக்கு ஒன்றும் இல்லை' என்று மரத்த குரலில் கூறியவள் நில்லாமலே வீட்டினுள் சென்றுவிட்டாள்.

பெற்றோர் முன்னிலையில் அவமானப்படுத்தி விட்டாளே என்று இருந்தபோதும், "எனக்குக் கட்டாயமாக மதுவந்தியுடன் பேசியே ஆக வேண்டும். அப்பா எப்படியும், இத்தனை பெண்கள் தங்கும் இடத்தில்



வார்டன் மாதிரி யாராவது இருப்பார்கள். அது யார் என்று பார்த்து, அனுமதி கேட்டுப் பேசிவிட்டு வருகிறேன்" என்று பெற்றோரிடம் கூறிவிட்டு வீட்டின் புறமாகத் திரும்பினான் சுதர்மன்.

"ஆனால், மணி பத்தாகிறதே, சுதா! நன்றாக இருக்குமா?" என்று தாயார் தயக்கத்துடன் கூறுகையிலேயே, அந்தத் தங்கும் விடுதியில் ஆளரவம் தெரிந்தது!

யாரோ, ஒரு பெட்டியைக் கொண்டுவந்து, விடுதியின் வெளி வாயில் ஓரமாக வைத்தார்கள்.

மதுவந்தியின் கையைப் பற்றி அவளை அழைத்து வந்தாள், சற்று முதிர்ந்து, முப்பதுகளில் இருந்த ஒருத்தி.

"பார் மதுவந்தி, எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது நான்தான், உன்னை இங்கே அழைத்து வந்தேன். வந்ததில் இருந்து, ஒரு குறை சொல்ல முடியாமல் நன்றாகத்தான் வேலை பார்த்தாய்! ஆனால், திடீரென்று முதலாளி மகளுக்கு உன் மேல் கோபம் வந்து விடுதியிலும் இருக்க விடக் கூடாது என்று உத்தரவு! அதை நான் மீறினால், உன்னோடு நானும் தெருவில்தான் நிற்க வேண்டும்! எங்கள் எல்லோருக்குமே உன்னிடம் பரிவுதான் என்றாலும், நாங்களும் அன்றாடம் காய்ச்சிகள்தானே? உனக்குப் பரிந்து வந்து, நாங்களும் கஷ்டப்படுவதில் என்ன லாபம், சொல்லு? தயவு பண்ணி, வேறே எங்காவது போய்விடும்மா!" என்றுவிட்டு உள்ளே போய்க் கதவைச் சாத்திக்கொண்டாள். மதுவந்தியுடன் கூடவே வந்தவள்.

இந்த நேரத்தில் எங்கே போவாள் என்பதே இல்லையே! எங்கேயாவது எக்குத்தப்பாய் மாட்டிக்கொண்டு நாசமாகட்டும் என்கிற நல்ல எண்ணம்!

நெற்றிப் பொட்டை அழுத்திவிட்டுக் கொண்டு யோசித்தவளை, மீண்டும் அணுகினான் சுதர்மன்.

"தயவு பண்ணி, எங்களுடன் வா, மது. உன்னுடன் பேசுவதற்காக, நாலு மணி நேரமாக இதே இடத்தில் காத்திருக்கிறோம்" என்று அதைத்தான் அவன்.

உனக்குப் போவதற்கு இடம் இல்லாமல் போகவில்லை என்று காட்டுவதற்காக அவன் சொன்னது, விசித்திரமான விதத்தில் அவளது ஆத்திரத்தையே கிளப்பிவிட்டது.

"நா..லுமணி நேரமா? ஐயோ பாவம்! என்னமாய்க் கஷ்டப்பட்டு விட்டீர்கள்?" என்றாள் ஏளனமாக. "எனக்கு என்னவெல்லாம் நேர்ந்தது தெரியுமா?" என்று குரலில் கோபம் தெறித்தது.

காரிலிருந்து இறங்கப் போன மனைவியைக் கையைப் பற்றித் தடுத்தார் மாதவன்.

"சொல்லு கேட்கி[illegible] ... தவறைப் பற்றி, [illegible] மீண்டும் நானும் சொல்கிறேன் [illegible]

12.02.2009 00:24



என்று தோன்றினால், அங்கே கொண்டு விடுகிறேன்" என்று தழைந்தே பேசினான் அவன்.

"கொண்டு விடுவீர்களா? எங்கே? போவதற்குத்தான் இடமே இல்லாமல் பண்ணிக் கொண்டே வருகிறீர்களே!" என்றாள் அவள் வெறுப்பும் கசப்புமாக.

இதற்கு என்ன பதில் சொல்வது? அவனுக்குத் தெரியவே இரண்டு இடங்கள் ஆயிற்றே!

மகனின் கண நேரத்து மௌனத்தில், மனைவியின் கையை மாதவன் விட்டுவிட்டுத் தானும் இறங்கினார்.

கனகா, மதுவந்தியை அணுகி "இவன் அம்மாதானம்மா நான். இந்த நேரத்தில் நீ தனியாக எங்கேம்மா, செல்ல முடியும்? இப்போதைக்கு எங்களோடு வா! என்ன செய்வது என்று, பிறகு பார்ப்போம்" என்று அழைத்தாள்.

அவளது இயல்பான குரல் மதுவந்தியை அமைதிப்படுத்தியது.

அவளுடைய அன்னையும் இப்படித்தான் பேசுவாள். குரல் இனிமையாக இருக்குமே தவிர, அதிகப்படியாகக் குழைவு, பரிவு, எல்லாம் இராது! ஆனால் அதுவே ஒரு மாதிரி மனதைத் திடப்படுத்தும்.

தன்னையறியாமல் கனகாவை நெருங்கி நின்றாள் அவள்.

ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கிவிட்டு, அங்கிருந்துதான் 'பரீட்'க்கு மாதவன் குடும்பம் சென்றிருந்தது.

இப்போது மதுவந்தியையும் அங்கேயே அழைத்துச் சென்றனர்.

சென்றதும், "ஏன் இப்படி மதுவந்தி? இந்த மாதிரி ஒருத்தியிடம், இப்படி ஒருவேலை செய்ய ஏன் வந்தாய்? உயிர் வாழ என்று மீண்டும் சொல்லாதே! நீ ஒரு பட்டம் வங்கிய பல் மருத்துவர். திறமை உள்ளவளும் கூட! அந்தத் தேவராஜன் இல்லை என்றால் இன்னோர் இடத்தில் வேலை கிடைக்காமல் போகாது. பின்னே ஏன் இப்படி?" என்று சிறு தாங்கலுடன், சுதர்மன் வினவினான்.

பெற்றோர் இருவருமே அதிர்ந்தது நன்றாகத் தெரிந்தது.

இருக்கத்தானே செய்யும்? ஒரு பட்டம் பெற்ற டாக்டர் எதற்காக இப்படிக் கீழிறங்க வேண்டும் என்ற தோன்றத்தான் செய்யும்!

ஆனால், ஏன் இப்படி என்று நீயே கேட்கிறாயா, என்று ஆத்திரம் வந்தது மதுவந்திக்கு.

கேட்டாயல்லவா? சொல்கிறேன். கேட்டுவிட்டு, முடிந்தால் ஆனந்தப்படு என்று உள்ளூரக் குறுகியபடியே அவள் சொல்லத் தொடங்கினாள்.

எதையும் மறைக்கவில்லை!

பெரிய நிறுவனத்தோடு இணைப்பு கெட்டுப் போன ஆத்திரத்தில் தேவராஜன் விரட்டியது. வீட்டுக்கு வந்தால், பாட்டி இறந்து மாமன்



உரிமை ஏற்றிருந்தது. நியாயமற்று, அவன் கேட்ட பணம், கேட்ட விதம்...

அவள் சொல்லி வரும்போதே, ஒருபொறுமையிழந்த மூச்சுடன் "உன் மாமா பணம் கேட்டிருக்கலாம். பணம் தராவிட்டால், உன் சர்ட்டிஃபிகேட்டைத் தர மாட்டேன் என்று மிரட்டியும் இருக்கலாம்! ஆனால் அதற்காக இந்த வேலைக்கு வர வேண்டுமா? படித்தவள்தானே? போலீசில் புகார் செய்வதற்கென்ன?" என்று கேட்டான் சுதர்மன்.

"அவ்வளவு கூடத் தெரியாத முட்டாள் என்று நினைத்தீர்களா?" என்று சீறினாள் மதுவந்தி.

உடனேயே தலையசைத்து "நினைத்திருப்பீர்கள், நினைத்திருப்பீர்கள், ஏனென்றால் உங்களை நம்பியவள் முட்டாளாகத்தான் இருக்க முடியும்?" என்றாள் கைத்த குரலில்.

உதட்டைக் கடித்துக்கொண்டு, சுதர்மன் தலை குனிய, மகனை ஒரு தரம் பார்த்துவிட்டு, "ஏனம்மா போகவில்லை? என்ன காரணம்? எனக்கும் புரியவில்லையே!" என்று அவன் தந்தை வினவினார்.

அவருக்கு மரியாதை கொடுத்துப் பதில் சொன்னாள் அவள்.

"போலீசுக்குப் போனால், சர்ட்டிஃபிகேட்டை எரித்து விடப் போவதாக மாமா மிரட்டினார். சாம்பலை எப்படி அடையாளம் காண்பது? அக்கம் பக்கத்தவர்கள் எனக்கு ஆதரவாகப் பேச முயன்றார்கள்தான். ஆளுக்குத் தக்கபடி, அசிங்கமாகப் பேசியும் மிரட்டியும் மாமா அவர்களை விரட்டிவிட்டார். எல்லோரும் பயந்து ஒதுங்கிவிட்டார்கள்.

"நிஜமாகவே நடுத்தெருவில் சகாயமற்று, சகாயம் செய்ய ஆளற்று, தனியே நின்றேன்.."

உருகிப்போய் "எவ்வளவு கொடுமையான நிலைமை! அந்த நேரம் சுதாவைக் கூப்பிட்டிருக்கலாமேம்மா!" என்றாள் கனகா.

ஏளனமாக அவனைப் பார்த்துவிட்டுத் தலையைத் திருப்பினாள் மதுவந்தி "செய்தேனே! இரண்டு தடவை ஃபோன் செய்தேன். மருத்துவமனையில் வந்து, சுதர்மன் சுத்துவதற்கு முன், தாமதமாகிறதே, ஏனோ என்ற கவலையில் ஒருதரம், அப்புறம் நியாயமற்று ஏன் அப்படிப் பேசினார் என்று கேட்பதற்காக ஒரு முறை! ஆனால் எதற்குமே பதில் இல்லை!" என்றவள், மறுபடியும் சுதர்மனை நேராகப் பார்த்தாள் "அந்த லோகநாதனுடைய அம்மா போல, உங்களுக்கு வலை போட முயற்சிப்பதாக, நீங்களும் எண்ணி விட்டீர்களோ என்று தோன்றவே, அதற்கு மேல், உங்களைத் தொடர்பு கொள்ள மனம் வரவில்லை" என்றாள் தெளிவாக.

முகம் கன்ற அவன் குனிந்தபோது, ஒருகுரூரத் திருப்தி தோன்றி, உடனே மறைந்தது!

12.02.2009 00:24

முகத்தில் திரை விழ, தன் கதையை மீண்டும் தொடர்ந்தாள்.
"அப்படி யோசிக்கும்போதுதான் நடுத்தெருவில் நான் நின்றபோதுதான் நீலிமா வந்தாள். 'புன்னகை' மருத்துவமனை வரவேற்புப் பெண், அவள். கஷ்டப்பட்ட குடும்பம். பாவம் என்று அவ்வப்போது உதவி பண்ணுவேன். பாட்டிக்காகத் துக்கம் கேட்க வந்தவள், என் நிலைமையைப் பார்த்துவிட்டு, அவள் வீட்டுக்குக் கூட்டிப் போனாள். ஆனால், அவள் வீட்டில் இருக்க முடியாது! குடிகாரத் தந்தை, தறுதலைத் தம்பி என்று அவளுக்கே ஆயிரம் தொல்லை! அதற்கும் நடுவில் என்னை அவள் வீட்டுக்கு கூட்டிப் போனாள். சற்று முன் அங்கே என்னை வெளியே கூட்டி வந்து விட்டாளே, அந்த வளர்மதி, நீலிமாவுக்குப் பக்கத்து வீட்டுப் பெண்! விடுமுறைக்கு வந்தவள், இங்கே வேலைக்கு வருகிறாளா என்று நீலிமாவைக் கேட்டாளாம்.
"நான் யோசித்தேன். மாமா தயாருக்கே இளகாதவர். அவரிடம் கேட்டுப் பயனிராது! ஆனால், சர்ட்டிஃபிகேட்டின் அதிகாரப் பூர்வமான நகலைப் பெறுவது, ரொம்பவே சன்னைபிடித்த வேலை! படித்த கல்லூரி, ஸ்டேட், சென்டர் என்று சென்னையில் இருந்து கொண்டு, வரிசையாக அலைந்து, திரிந்து, காத்திருந்து பார்க்க வேண்டும். தங்கவும், அலையவும் பணம் வேண்டும். அதைச் சேப்பதற்காக, இந்த வேலைக்கு வந்தேன். இன்னும் நாலுமாதங்கள் சேர்த்திருந்தால்... அதற்குள்... இந்த வேலையையும் பறித்து விட்டீர்களே! நான் செத்தால்தான் நிம்மதியா?" என்று கசப்பும், வெறுப்புமாக கேட்டு முடித்தாள் மதுவந்தி!
"அந்த வார்த்தை சொல்லாதே!" என்று ஆத்திரப்பட்டான் அவன்.
"உச்'சுக்கொட்டி விட்டு, அலட்சியமாகத் தலையை திருப்பினாள் மதுவந்தி.
"என் நிலைமையையும் கொஞ்சம் யோசித்துப் பார், மது, பல ஆண்டு காலம், என் நண்பன் அவன். என் மனம் பற்றித் தெரியாமல், தூக்க மாத்திரை வேகத்தில் என்னிடமே புலம்பினான். உரிமை பாராட்டும் அவன் தாயாலேயே, அவனை மணக்க முடியாது என்றும், அவனுக்குச் சமமான பணக்காரப் பையனை, மணக்கப் போவதாகவும் சொன்னாய் என்று..."
"அவர் சொன்னால் அப்படியே நம்பிவிடுவதா? நமக்கிடையே கலகமூட்டச் சொல்லியிருக்கக் கூடாதா?"
"அப்படிக் கலகமூட்டுவதற்கு, என் மனம் பற்றி, அவனுக்கு எதுவும் தெரியாதே! அத்தோடு, நீ மறுத்துவிட்டாய் என்று, இந்த இழப்பு தாங்காமல் தூக்க மாத்திரை போட்டுக்கொண்டு சாகக் கிடக்கிறவனை எப்படி சந்தேகிப்பது?"
"ஓஹோ...! 'காதல் போயில் சாதலா'க்கும்! ரொம்பவும் உறுதியானவன்தான். இருக்கிறானா? செத்தே போனானா? மாலை



வாங்கிப் போட்டீர்களா?" என்று கடுமையாக... கூடவே ஏளனமாகக் கேட்டாள் மதுவந்தி.
ஒரு விநாடி அமைதிக்குப் பிறகு "கஷ்டப்பட்டு பிழைக்க வைத்தார்கள்" என்றான் சுதர்மன்.
"பின்னே, சுபம் போட்டு முடிக்க வேண்டியதுதானே? இப்போது என்னை எதற்காக அழைத்து வர வேண்டும்? இத்தனை நாள் சந்தோஷமாக வெறுத்து ஒதுக்கிவிட்டுச் சும்மா இருந்தவர்தானே?
அன்று சந்தித்ததில் இருந்தே அவளது குரலில் ஏளனமும் கசப்பும் நிறைந்த குரல்! இப்போது இளக்காரமும் சேர்ந்திருக்கிறது!
அந்தக் குரல் அவனை தப்புச் செய்தவனாக்கிக் குற்றவாளியாய் நிறுத்தியது!
"சந்தோஷமாகவும் இருக்கவில்லை, சும்மாவும் இருக்கவில்லை!" என்றுரைத்து, அதன் விளக்கம் சொன்னான் சுதர்மன். "மீண்டும் தஞ்சை சென்று, அங்கே உன்னை தேடினேன். மருத்துவமனையில் இன்னொரு டாக்டர், உன்னைப் பற்றி மோசமாகப் பேசினார். உன் முகவரி கேட்டு, உன் வீட்டுக்குப் போனேன். உன் மாமாவின் பேச்சு நாராசம். எவனோடு ஓடினாளோ... என்று! இன்னும் கூட, அதன் பிறகும், எனக்கு ஓர் உறுத்தல்! இரண்டு மாத்திரை அதிகம் போட்டிருந்தால் ஆபத்தாகப் போயிருக்கும் என்று தூக்க மருந்தின்போது லோகனுக்கு சிகிச்சை செய்த மருத்துவர் கூறியிருந்தார். அப்போது நல்லவேளை என்று நினைத்து, அப்புறமாக, வேண்டும் என்றே செய்திருப்பானோ என்று ஐயமுண்டாயிற்று! அப்படிச் செய்யக் காரணம் இல்லை.. அப்படி நினைப்பதே நியாயம் இல்லை என்று தெரிந்தாலும், உறுத்தல் போகவில்லை! அந்த உறுத்தலில்தான், முதலில் உன்னைத் தேடி தஞ்சை வந்ததுமே, பிறகும் சென்னை சென்று லோகனிடமே சென்று உன்னைப் பற்றி மீண்டும், விசாரித்தேன். அவன்..." என்று தயங்கினான் அவன்.
"எவ்வளவோ சொல்லியாயிற்று! அதைவிட அதிகமாக என்ன வந்துவிடப் போகிறது? சும்மாச் சொல்லுங்கள். சொன்னால்தானே இந்த மொட்டைத்தலை முழங்கால் முடிச்செல்லாம், கொஞ்சமேனும் புரியும்" என்றாள் அவள் அலட்சியம் காட்டியே.
"லோகன் இன்னொரு கதை சொன்னான். காலில் விழாத குறையாக உன்னை வற்புறுத்திச் சென்னைக்கு கூட்டி வந்ததாகவும், முதல் வகுப்பில் வரும்போதே கூட வந்த இன்னொரு பணக்காரப் பிரயாணியிடம் நீ கலகலப்பாகப் பேசி.... அப்புறம் அவனுடனேயே போய்விட்டாய் என்றான். அது தனக்குக் கண் திறப்பு என்றும் கூறினான்..."
"உங்களுக்கும் கண் [illegible] ...ரீர்கள்"

12.02.2009 00:24



என்றாள் அவள் குரோதமாக.
"இல்லையில்லை எப்போதுமே எனக்கு வேதனைதான். உன்னையே நம்ப முடியாதபோது, வேறு யாரை நம்புவது? யாரையும் நம்ப முடியாத திகைப்பு! பெண் என்றாலே வெறுப்பாகி போயிற்று. இத்தனை மாதங்களாக, இன்னொரு பெண்ணை நான் நிமிர்ந்து பார்த்ததே இல்லை" என்றான் அவன்.
"பொய்!" என்றாள் அவள் சுருக்கமாக ஒரே வார்த்தையில்.
"பொய்யா? நான் பொய் சொல்வது இல்லை மதுவந்தி!"
"ஒருத்தியை பெண் பார்க்கவே வந்துவிட்டு, இந்தப் பேச்சை உங்களாலேயே ஒத்துக்கொள்ள முடிகிறதா?"
பெற்றோரைப் பழி சொல்ல மனமின்றி அவன் பேசாதிருக்க "அது, எங்கள் வேலை, மதுவந்தி" என்று குறுக்கே வந்தாள் கனகா. "இவனுக்குத் திருச்சி வருவதற்கு மனமே இல்லை! பார்த்துவிட்டு பிடிக்கவில்லை என்று சொல்லிவிடலாம் என்று கூறிக் கூட்டி வந்தோம். உங்களை மறுபடி சந்திக்க வைப்பதற்காக விதி அழைத்து வந்திருக்கிறது என்று இப்போது தோன்றுகிறது" என்று விளக்கினாள்.
யோசனையாகப் பார்த்துவிட்டு, அலுப்புடன் தோளைக் குலுக்கினாள் அவள். "விதிதான் மீண்டும் சந்திக்க வைத்து, மறுபடியும் என்னை நடுத்தெருவில் நிறுத்தியிருக்கிறது" என்றாள் கசந்த குரலில்.
"நிச்சயமாக அப்படியில்லை! நான் சொல்வதைத் தயவு செய்து, நீ நம்ப வேண்டும், மது! நடந்த பிழையைச் சீர் செய்யவே நான் விரும்புகிறேன். திருமணம் செய்து..."
குறுக்கிட்டு "அதற்கு நான் தயாரில்லை" என்றாள் மதுவந்தி.
பெற்றவர்கள் அதிர்ந்து நோக்க "மது ப்ளீஸ் யோசி, யோசித்துப் பேசு" என்றான் சுதர்மன்.
"யோசித்துதான் சொல்கிறேன். உங்கள் லோகநாதனையும், உங்களையும் சேர்த்து என்றைக்குமே நான் நம்பத் தயாரில்லை" என்றாள் அவள் முடிவாக.
"உன் நிலையே, அவன் சொன்னது பொய்யென்று நிரூபிக்கவில்லையா?"
"ஓகோ! அப்படி நிரூபிக்கப்பட்டதால்தான், இந்தத் திருமணப் பேச்சா? சீதை தீயில் இறங்கிய மாதிரி, இப்படியெல்லாம் நிரூபித்தால் தான் நம்புவீர்களா? 'ஆனால், இந்த ஒரே ஒரு பொய்தான் உங்கள் லோகநாதன் சொல்வாராமா? அவர் இன்னொரு நாடகம் நடித்தால், அதை நம்பி, மறுபடியும் என்னை விரட்ட மாட்டீர்கள் என்று, எனக்கு என்ன நிச்சயம்? ஒருதரம் பட்ட சூடு, இந்தப் பிறவி முழுவதுக்கும் போதும், சுதர்மன். தீக்குளிக்கச் செய்த கணவனோடு சேர்ந்து



வாழ்ந்து, இன்னோர் அடியும் பட, திரேதாயுகத்து சீதைக்குச் சம்மதமாக இருக்கலாம்! ஆனால், ஐந்தறிவுப் பூனையிலும் கேவலமாய், இன்னோர் அனுபவம் பெற, நான் நிச்சயமாக தயா..." என்று மதுவந்தி சொல்லிக் கொண்டிருக்கும்போதே கதவு தட்டப்பட்டது.

## 13 வாழும் முறைமையடி



வந்தது உணவு ட்ராலி.
உள்ளே வந்ததுமே, மாதவன் சாப்பாட்டுக்குச் சொல்லி விட்டிருந்தார். சொன்னது எல்லாமே சிற்றுண்டி வகை, ஸ்டார் ஹோட்டல் என்பதால் புதிதாகத் தயாரித்து வர, அவ்வளவு நேரம் ஆகியிருந்தது!
"முதலில் சாப்பிடலாம். வயிற்றைக் காலியாக வைத்துக் கொண்டு எந்த முக்கியமான பேச்சும் வேண்டாம்" என்ற பெரியவரின் பேச்சுக்கிணங்க, எல்லோரும் சுற்றிலும் சேர்ந்தே அமர்ந்து உண்ணலாயினர்.
ஒரு கணமே தயங்கியபோதும், இந்த நேரத்தில் இங்கே சாப்பிட மாட்டேன் என்று சொல்வது அசட்டுத்தனம் என்று உணர்ந்த மதுவந்தியும் பிகுவேதும் பண்ணவில்லை.
"இதை வைத்துக்கொள்" "அதைச் சாப்பிடு" என்ற கனகாவின் உபசரிப்பை முழுதாக ஏற்கவில்லை என்றாலும், அவள் ஒரேடியாக வயிற்றுக்கு வஞ்சனையும் செய்யவில்லை.
உணவு முடிந்ததும், கைகழுவச் செல்லுகையில், மதுவந்தியோடு சுதர்மன் வழிகாட்டிச் செல்ல "நல்ல பெண்ணாகத்தான் தெரிகிறாள். இந்த ரோஷமே, தப்புச் செய்கிறவள் அல்ல என்பதன் அறிகுறிதான். ஆனால், இடையில் பட்ட துன்பத்தில் பையனை ஒரேடியாய் வெறுத்துவிட்டாள் போலத் தெரிகிறதே" என்றாள் கனகா மிகுந்த கவலையோடு!
"எப்போதும் கடைசியாக அனுபவித்தது, பெரிதாகத் தெரியும். அத்தோடு, தப்பும் நம் பையன் பக்கம் இருக்கும்போலத் தெரிகிறதே! நம் பையன் தொடங்கிவைத்த துன்பம், அவளுக்கு இன்னும் முடியவில்லை எனும்போது... ஆனால், சுதா தட்டில் காலியானதைக் கவனித்துத் தன் போக்காய், குருமாக் கிண்ணத்தை அவன் பக்கம் நகர்த்தினாள். நான் [illegible] ...ருந்து பார்ப்போம்" என்றார் மாதவன்.
கை கழுவி வந்ததும், பால்கனியிலிருந்து [illegible] ...யைப்

12.02.2009 00:25

பார்ப்பது போலப் பெரியவர்கள் வெளிப்புறமாக நிற்க, சுதர்மன் மறுபடியும் கேட்டான்.

"ஒரு தரம் யோசியேன், மது! அன்றைக்கு லோகனை நம்பியது இமாலயத் தவறுதான்! ஆனால், அதற்கு முன் அந்தப் பதினைந்து நாட்கள், எவ்வளவு ஆனந்தமாக இருந்தன? அதைத் தொடரக் கூடாதா? நினைத்துப் பாரேன்!" என்றான் கெஞ்சுதலாக.

மறக்குமா?

கண்கள் கசிந்தபோதும் "அப்புறம் பட்ட வேதனைதான், எனக்கு மனதில் நிற்கிறது" என்றாள் அவள் தலையைத் திருப்பி.

என்னதான் ஒதுக்கி நின்றாலும், இயல்பாகப் பேசுவது, அடியோடு காதில் விழாது போகுமா?

சற்றுமுன் கணவர் சொன்னதையே மதுவந்தியும் கூற, திகைப்புடன் மாதவனைப் பார்த்தாள் மனைவி.

லேசாகத் தலையசைத்து, "காலம் அதை மாற்றும் என்றும் சொல்லி வைத்திருக்கிறார்கள்" என்று மெல்லிய குரலில் முணுமுணுத்தார் மாதவன். "அத்தோடு தொழில் செய்கிற அளவில் பார்க்கையில் நம் சுதனும் லேசில் விடுகிறவன் அல்லவே! லோகனின் கதைக்குப் பிறகும், மூன்று தரம் அலைந்திருப்பதை நினைத்துப் பார்"

மதுவந்தியின் குரல் தணிந்தே என்றாலும், நோயாளிகளை அடையும் நோக்கத்தோடு பேசி பழகிய தெளிவோடு ஒலித்தது "பெண்களுக்கு மன அடக்கம் வேண்டும்,. அதுவும் மருத்துவம் போன்ற பணி புரிவோர், ரொம்பவும் கவனமாக இருக்க வேண்டும் என்று, என் அம்மா சொல்வார்கள் அப்படித்தான் இருந்தேன்? பின்னோடு வந்து, மனதில் ஆசையை விதைத்து விட்டுக் கடைசியில்... சுதர்மன் என்ற பெயரை வைத்துக்கொண்டு, சாதாரண தர்மம் கூட இல்லாமல் தண்டித்து விட்டீர்களே, சுதா! நான் என்ன பாடு பட்டிருப்பேன், எண்ணிப் பாருங்கள்! முடியாது, சுதா. இன்னொரு தரம் இந்தத் துன்பம் என்னால் பட முடியாது! வேண்டாம்!"

"அவளைப் பார்த்தால் பாவமாகத்தான் இருக்கிறது! ஆனால் பையன்..." என்றாள் கனகா கவலையோடு.

"இன்னொரு தரம் இப்படி நடக்காது என்கிறேன். அதை ஏற்க மாட்டேன் என்கிறாயே?" என்று குறைபட்டான் சுதர்மன்.

"எப்படி ஏற்பது?" என்று திருப்பினாள் மதுவந்தி. "இந்தப் பிரச்சினை முழுவதற்கும், அடிப்படை என்ன? நீங்கள் என்னை நம்பாததுதானே? இருவர் இணைந்து வாழும் வாழ்க்கைக்கு அடிப்படை, நம்பிக்கை சுதர்மன்.! அந்த நம்பிக்கை உங்களுக்கு என் மீது, என் அன்பின் மீது இருந்திருந்தால், நண்பராக இருந்தாலும், அந்த லோகநாதன் சொன்னதை அப்படியே நம்பியிருக்க



மாட்டீர்களே! குறைந்த பட்சமாக, என்ன என்று, என்னிடம் வந்து கேட்டிருப்பீர்கள்! நான் இரட்டை வேஷம் போடுகிறவள் என்று நம்பியே விட்டீர்களே! அப்புறம், அது என்ன அன்பு?" என்று சீறினாள்.

மூத்த தலைமுறைக் கணவனும், மனைவியுமாக கவலையோடு, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டபோது, "நீ நம்பினாயா?" என்று திருப்பினான் சுதர்மன்.

"என்னது?" என்று திகைத்தாள் மதுவந்தி.

பால்கனியில் நின்றவர்களுக்கும் திகைப்புதான்.

நேசம் என்று எழுத்து மூலம் அறிவிக்காத குறையாகத் தெரிவித்த பிறகு, திடுமென வந்து, கண்டபடிப் பேசிவிட்டு, முறித்துக்கொண்டு போனவன், சுதர்மனே!

இப்போது மதுவந்தியைக் குற்றம் சாட்டினால் எப்படி?

"என்ன பேச்சு இது? கொஞ்சம் நியாயமாகப் பேசுங்கள் சுதா!"

"நியாயமாகத்தான் பேசுகிறேன். யோசித்துப்பார்! பல ஆண்டுகளாக, அவன் என் நண்பன். உயிருக்கே ஆபத்து எனவும், நிலை தடுமாறிப் பேசிவிட்டேன். தப்புதான், ஒத்துக் கொள்கிறேன்! ஆனால், உனக்கு என் அன்பில் நம்பிக்கை இருந்திருந்தால், இப்படி ஒரு தரம் செல்லை எடுக்கவில்லை என்பதற்காக, அந்தச் சின்ன முயற்சியுடன் அப்படியே விலகிப் போயிருப்பாயா? நேரில் வந்து, என் சட்டையைப் பிடித்து, உலுக்கிக் கேட்டிருக்க மாட்டாயா?"

'எப்படி' என்பது போலச் சைகை செய்து மனைவியிடம் கேட்டார் மாதவன்.

மதுவந்தியின் விழிகள் விரியவும் "சரி சரி, உன் இயல்புக்குச் சட்டையைப் பிடித்து உலுக்கியிருக்க மாட்டாய்தான். ஆனால், கொஞ்சமாவது என் அன்பில் நம்பிக்கை இருந்திருந்தால், அன்று அவ்வளவு பேசினானே., இன்று இப்படிப் பேசும்படி என்ன நேர்ந்தது என்று விசாரித்து, உண்மை உணர்த்தியிருக்க மாட்டாயா?... நீ போராடியிருக்க வேண்டாமா, சொல்லு?" என்று அழுத்தத்துடன் கேட்டவன், உடனே குரலை தணித்து "இப்போது நான் போராடுவது போல! நம் அன்பு ஜெயிப்பதற்காகப் போராடுகிறேன். மது.. புரிந்துகொள்" என்றான் மென்மையாக.

அவனது குரல் மாற்றமும் பார்வையும், அவளை கிட்டத்தட்டத் தலை குப்புற விழத் தட்டின என்றுதான் சொல்ல வேண்டும்.

மதுவந்தியின் இதழ்களிலும் புன்னகையின் கீற்று ஒன்று, லேசாகத் தோன்றினாலும், அது உடனே மறைந்து போயிற்று.

"சட்டம் படித்திருந்தால், கோடிக் கோடியாகச் சம்பாதித்து [illegible] உடனே முடிவு விடுவீர்கள்" என்று இ[illegible] அவள் தீவிரம் அடைய, எதிர்[illegible]

12.02.2009 00:25



"இந்தப் பேச்சு இப்போது வேண்டாம்! நீங்கள் எப்படிச் சொன்னாலும், என் மனது இதை ஏற்கவில்லை? என் மனமே ஏற்காத ஒன்றை எப்படி ஒதுக்கி, எப்படி இணைந்து வாழ்வது? இன்னும் எத்தனை காலம் வாழுவேனோ? வாழும் காலம் எல்லாம், மனது குழம்பிக் கொண்டே, கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்க என்னால் முடியாது! அதனால், தயவு பண்ணி, இந்தப் பேச்சை, இத்தோடு விட்டு விடுங்கள்!" என்றாள் அவளும் குரலில் அழுத்தத்துடனேயே.

அப்போதும் விடாமல், சுதர்மன் ஏதோ சொல்ல முயன்றான்தான். ஆனால், இரு கண் மூடி இறுகி "சுதர்மன் ப்ளீஸ்" என்று மதுவந்தி வேண்டிய விதத்தில் பேச்சை நிறுத்தி, அவள் முகத்தைப் பார்த்தான் அவன்.

கண் திறந்து, அவனை நேராகப் பார்த்துப் பேசினாள் அவள்.

"பாருங்கள் சுதர்மன், நீங்கள் சொல்வதெல்லாம் கேட்க நன்றாகத்தான் இருக்கிறது! ஆனால், எப்படி வாழ வேண்டும் என்று என் தாயார் எனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி, எனக்கென்று சில கோட்பாடுகளும் இருக்கின்றன. இப்படித்தான் வாழ வேண்டும் என்று, எனக்குள் சில வரைமுறைகளும் இருக்கின்றன. அதில் தன்மானம் மிக முக்கியமானது. வாழும் முறை என்று நான் வகுத்திருக்கும் ஒன்றை அலட்சியப்படுத்தி என்னால் வாழ முடியாது, சுதர்மன்! அதனால் என்னை விட்டுவிடுங்கள்" என்றாள் தீர்மானமாக.

திகைப்பும், கவலையுமாக, மூத்த தலைமுறை ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டபோது, சுதர்மன் வருத்தத்துடன் கேட்டான்.

"ஆண்டுக் கணக்கில் நண்பனாகப் பழகிய ஒருவனை நம்பிய ஒரே காரணத்துக்காக, என்னை அடியோடு ஒதுக்கி விடுவாயா, மது? அடியோடு? முடியுமா? நெஞ்சைத் தொட்டுச் சொல்லு. இத்தனை நாட்களில் என்னை நினைக்கவே இல்லாமல் ஒரு நாளையேனும் கழித்திருப்பாயா?" என்று ஆழ்ந்த குரலில் வினவினான்.

அவளுக்கும் பதில் சொல்வது சிரமமாக இருந்ததோ என்னவோ? கண நேர மௌனத்தின் பின் "அதுதான் சொன்னேனே, சுதா, அனுபவிப்பது, இன்பமோ, துன்பமோ? எதுவானாலும் என் மனம் ஒப்ப வேண்டும். மருத்துவம் என்கிற உன்னதப் படிப்பு படித்திருந்தும், அந்தப் பணி செய்ய முடியாததுதான் என் வருத்தமே தவிர உடல் உழைப்புக்கோ, இப்போது நான் பார்த்துக் கொண்டிருந்த அடுத்தட்டு வேலைக்கோ நான் அஞ்சவில்லை! காரணம் என் சுய மதிப்புக்கு அதில் பங்கம் கிடையாது. ப்ரீதி துச்சமாக நடத்தினாலும், என் சில சுகங்களுக்காகத் தன் மானத்தை இழக்கவில்லை என்ற நிமிர்வை நான் விட்டுவிடவில்லை. என் மனதில் எனக்குள்ள மதிப்பு குறையாமல் அப்படியே இருந்தது.



இருக்கிறது. ஆனால்... இதை என்னால் ஒப்ப முடியவில்லை! வேண்டாம்" என்று முடித்தாள்.

அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சுதர்மன், அதற்கு மேல் ஒருகேள்வி மட்டும் கேட்டான்.

"இன்னும் ஒன்றே ஒன்று சொல், மது, இது இப்போது மட்டுமா? அல்லது எப்போதைக்குமேயா?" என்று கேட்டவன், உடனேயே கை நீட்டி அவளது உதட்டின்மீது விரல் வைத்து "வேண்டாம், இதற்குப் பதில் சொல்லாதே! என்றாவது ஒருநாள், எல்லாம் நன்றாகிவிடும் என்ற நம்பிக்கையேனும், அப்படியே இருக்கட்டும்" என்றான்.

அவனது விரலை மெல்ல அகற்றி, "சுதா, எனக்கு ஒரு தெளிவு வேண்டும். அது நீங்கள் யாரும் சொல்லி வரக் கூடியது இல்லை! நானாக... எனக்காக... அதுவரை... இது பற்றிய பேசாதீர்கள். தயவுபண்ணி!" என்றாள் மதுவந்தி.

"அதுவரையா..?" என்று அவளது வார்த்தையையே, ஒருதரம் சொல்லிப் பார்த்தான்

பிறகு "ஆனால், உன்னை இப்படியே விட, நீயே சொன்னது போல நடுத்தெருவில் நிற்க விட என்னால் முடியாது! உன் பிழைப்புக்கு ஏதாவது வழி செய்தே ஆக வேண்டும். நீ என்ன கேட்டாலும் செய்கிறேன்" என்றான் அவன்.

மதுவந்தியும் அதை மறுத்துப் பேசவில்லை. யோசித்தாள். யோசித்துப் பார்த்துவிட்டு "என் சர்ட்டிஃபிகேட் பற்றிச் சொன்னேன் அல்லவா? மாமா அதைத் தரப் போவது இல்லை. கிழித்துக் கூடப் போட்டிருக்கலாம். அதை...." என்று அவள் சொல்லுகையில் குறுக்கிட்டு "நகல் வாங்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றான் சுதர்மன்.

"அது மட்டுமல்ல. அது சற்று நான் இழுக்கிற வேலை. அதி[illegible] வருமானம் வரும்படியாக கிடைக்கும்வரை செலவுக்குத் தேவையாக ஒரு வேலையும் வேண்டும்" என்றாள் அவள்.

"உன்னிடம் இருந்து ஒன்றுமே வேண்டாம் என்று விலக்கி ஒதுக்காமல், எனக்காகச் செய் என்கிறாயே! அதுவே நம்பிக்கை தருவதாகத்தான் இருக்கிறது! பார்த்துக் கொண்டே இரு உனக்கு சீக்கிரமே மருமகள் வந்துவிடுவாள்" என்றார் மாதவன்.

"எனக்கு மட்டுமா, மருமகள்? உங்களுக்கும்தானே? அல்லது மாமனார் ஆனால், வயதானவராகத் தோன்றுமே என்று பயமா இருக்கிறதா?" கனகா கேலியாக கேட்க, இருவருக்குமே சிரிப்பு வந்தது.

"அம்மா, அப்பா! [illegible] ஒரேடியாகப் பார்த்து [illegible] உள்ளே பார்த்து கண்ணில் [illegible] வாருங்கள்!" என்று கேலிக் குரலில் அழைத்த[illegible]

12.02.2009 00:25

சின்னவர்கள் தடையின்றிப் பேசட்டும் என்று ஒதுங்கிப் போன பெற்றோர் குறித்து அவனுக்கு மிகுந்த பெருமிதம்!

இருவரும் உள்ளே வந்ததும், உட்கார வசதி பண்ணிக் கொடுத்துவிட்டு, "அப்பா, எல்லாம் கேட்டுத்தான் இருக்கும். மதுவுக்கு ஒரு வேலை... எங்கே ஏற்பாடு செய்யலாம்?" என்று கேட்டான்.

"செய்வோம், மதுவந்தியே சொன்னது போல, அவள் படித்த படிப்பு உன்னதமான சேவைக்குரிய படிப்பு. அது வீணாகக் கூடாது. அதனால் அந்த சர்டிஃபிகேட் சீக்கிரம் கிடைக்க முயற்சி செய்வோம். அது கிடைத்ததும் 'கிளினிக்' வைக்கலாம். சான்றிதழ் கிடைக்கும் மட்டும் பார்ப்பதற்கு ஒரு வேலை என்ன வேணும் தாலாம்."

தனக்காகப் புதிதாக ஒரு வேலையை உருவாக்கப் போகிறார்களோ என்று மதுவந்தி குன்றும் வேளையில் "ம்ம்ம்... நமக்கும் நம்பிக்கையாய் ஓர் ஆள் தேவைதான். கம்ப்யூட்டர் ஏதாவது தெரியுமாம்மா?" என்று வினவினார் அவர்.

அதைக் கேட்டு, அவர் கொடுத்த வேலையைச் செய்யும்போது, மதுவந்திக்குப் பிரமிப்பாக இருந்தது!

'புன்னகை'யில் வரவேற்புப் பகுதிப் பொறுப்பில் இருக்கும் போது, பில் போடுவது, வரவு செலவுக் கணக்கு போட்டு 'சேவ்' பண்ணுவதுதான்.

ஆனால், மாதவனின் நிறுவனங்களின் பில், வரவு செலவுகளின் தொகைகளைப் பார்க்கும்போது, அவளுக்கு மயக்கம் போடாத குறைதான்.

ஆனால், அப்படிப் பிரமிக்கட்டும் என்றே, அவளுக்கு இந்த வேலையைக் கொடுத்திருப்பாரோ என்றும் தோன்றியது!

ஆனால், இது ரகசியம் காக்கப்பட வேண்டியவற்றுள் வருவது என்பதும் உண்மையே! அதில் சந்தேகம் கிடையாது!

சில மாதங்களில் வேலையை விட்டு விலகப் போகிறவளிடம் கொடுப்பானேன்?

விடைக்காக அதிகம் யோசிக்க வேண்டியது இல்லை!

அடிக்கடி சந்திக்க நேர்ந்தபோதும், அவளை வற்புறுத்த யாரும், ஏதும் சொல்லாத போதும், கண்ணுக்குத் தெரியாத தளைகளால் தன்னைப் பிணைக்க முயற்சிக்கிறார்களோ என்கிற ஐயம், மதுவந்திக்கு அடிக்கடி உண்டாயிற்று!

ஒருபுறம் கலக்கத்தைத் தந்த போதும், இந்த சந்தேகம், அவளுக்கு சுகமாகவும் இருந்தது.

சுகமாக மட்டும் அல்ல! உள்ளூர ஏக்கமாகவும்!

ஆனாலும்....

இந்நிலையில் முக்கிய பத்திரிகைகள் அனைத்திலும் பெரிய



விளம்பரம் ஒன்று பிரசுரம் ஆயிற்று!

இரங்கல் விளம்பரம்!

அதைக் கண்டதும் வெகுவாக யோசித்துவிட்டு, வேலையிலிருந்து இரண்டு நாட்கள் விடுப்புப் பெற்றுக் கொண்டு, மதுரையில் இருந்து கிளம்பிப் போனாள் மதுவந்தி!

விளம்பரத்தில் கொடுப்பட்டிருந்த டெலிபோன் எண்களைக் கொண்டு, முகவரியை அறிந்து, தேவைப்பட்ட இடத்துக்குச் செல்வதில் அவளுக்கு எந்தவித சிரமமும் இருக்கவில்லை!

## 14 வாழும் முறைமையடி



பத்திரிகையில் மதுவந்தி பார்த்த விளம்பரத்தில் வரிசையாக பல நிறுவனங்களின் பெயர்கள் இருந்தன.

தொடர்பு கொள்ளும்படியாக டெலிஃபோன் எண்களும் பல இருந்தன.

இரண்டு எண்களை முயன்றதுமே, செல்ல வேண்டிய இடத்தைப் பற்றிய விவரங்கள் அவளுக்குக் கிடைத்து விட்டன.

ஆனால் அவளுக்கு ஆச்சரியம் என்னவென்றால், அவளது வரவை லோகநாதனும் எதிர்பார்த்திருந்ததுதான்!

"வா வா வா, மதுவந்தி! இன்னமும் காணோமே என்று எனக்குக் கவலையே தோன்றத் தொடங்கியிருந்தது! வா. உட்கார்! என்ன சாப்பிடுகிறாய்?" என்று வரிசையாகப் பளபளத்த பற்களை அடிக்கடி காட்டி, உற்சாகத்துடன் அவளை உபசரித்தான் அவன்.

தொழில்முறை ஆர்வம் தலை தூக்க, அவனது பற்களை உற்றுக் கவனித்துவிட்டு "பற்கள் நன்றாக பொருந்தி விட்டது போலத் தெரிகிறதே" என்றபடி அவன் காட்டிய இருக்கையில் அமர்ந்தாள் அவள்.

அவன் இன்னொரு தரம் பற்களை ஈயென்று காட்டினான்.

"நன்றாயிருக்கிறது!" என்றவள் தொடர்ந்து, "நான் வருவதை எதிர்பார்த்தவர் போலப் பேசுகிறீர்களே" என்று வியப்பும் யோசனையுமாகக் கேட்டாள்.

உள்ளே பார்த்து "டேய், இரண்டு ஆப்பிள் ஜூஸ் கொண்டு வா" என்று உத்திரவிட்டான் லோகநாதன்.

பின்னர், அவள் எதிரேயே உட்கார்ந்து அவளை விழுங்குவது போலப் பார்த்தான்.

லேசாகப் புருவம் சுளித்து "என் கேள்விக்கு இன்னும் நீங்கள் பதில் சொல்லவில்லையே" என்...



"வாழ்வு எப்படி இருப்பாய்?" என்று ஒரு கர்வப் புன்னகையோடு பதில் கேள்வி கேட்டான் லோகநாதன்.

"புரியவில்லை?"

"வெளிப்படையாகச் சொன்னால் கோபப் படக்கூடாது!"

"உண்மையைச் சொல்லும்போது, கோபம் ஏன் வரும்?"

"சரி! உன்னிடம், உன் இரண்டு குதிரைகளில் ஒன்று பிய்த்துக்கொண்டு போய்விட்டது! சுதர்மனைச் சொன்னேன், சரிதானே?"

"சொல்லுங்கள்"

"வந்தது என்ன விளம்பரம்?"

சுவாரசியமாகப் பார்த்தபடி மதுவந்தி பேசாதிருக்கவும் "இரங்கல் விளம்பரம்! நமக்கு, முக்கியமாக உனக்குத் தொல்லை தரக்கூடிய ஆள் உலகை விட்டே போயாயிற்று. இனி மூன்றாவது காரணம், என் பெயருக்கு கீழாக எத்தனை நிறுவனங்கள், பார்த்தாயல்லவா? இத்தனைக்கும் சொந்தக்காரி ஆவது என்றால்? சும்மாவா? வந்து முயற்சிக்காமல் எப்படி இருப்பாய்?" என்று கேட்டான் அவன்.

கிறுக்குத்தனமான விளக்கமாக, மதுவந்திக்கு தோன்றியது.

அல்லது... இந்த எதிர்பார்ப்பின் பின்னணியில் ஏதோ இருக்கிறது!

"உங்களுக்கு எத்தனையோ நிறுவனங்கள் இருக்கலாம். ஆனால், அவைகளுக்கு, சொந்தக்காரி ஆவதாக, நான் எப்படி எண்ண முடியும், மிஸ்டர் லோகநாதன்?" என்று கேட்டாள் அவள்.

முகம் சுளித்து "லோகன் என்று சொல்லு" என்றான் அவன். தொடர்ந்து "ஒருகெட்டிக்கார பல் டாக்டர், அசட்டுத்தனமாகக் கேள்வி கேட்கிறாயே! என்னை மணந்து, என்னோடு வாழப் போகிறவள்தானே, என் சொத்துக்களுக்குச் சொந்தக்காரி ஆக முடியும்?" என்று பதிலுக்குக் கேள்வி கேட்டான் அவன்.

"ஓகோ! கேள்வியை இப்படி கேட்டிருக்க வேண்டும், நான் உங்களை மணந்து, உங்கள் சொத்தக்காரி ஆக கூடும் என்று எப்படி எண்ணினீர்கள், லோகநாதன்?" என்று லோகநாதனில் அழுத்தம் கொடுத்து வினவினாள் மதுவந்தி!

அவளது துன்பங்களுக்கெல்லாம் மையப்புள்ளி இவன்தான் என்கிற வரை நிச்சயம், ஆனால் எப்படி என்று அறிந்தே ஆக வேண்டும்.

அவன் உற்சாகமாகச் சிரித்தான் "ஐஐ! என்ன ஜாலக்குப் பண்ணுகிறாய், பார்! உன்னோடு வாழுகிறது, ரொம்ப ஜாலியாக இருக்கப் போகிறது! தெரியாத மாதிரி, என்ன கில்லாடித்தனம்? ஏன் என் வாயாலே கேட்கணுமாக்கும்? சொல்லுகிறேனே! மருத்துவமனையிலே எனக்காக எத்தனை முறை, ஓடி ஓடி வந்தாய்? தொட்டு, தொட்டு தடவித் தடவி, எவ்வளவு பக்கத்திலே நிற்பாய்?.. கொஞ்...சம் கையை நீட்டியிருந்தால்; உன்னை எங்கேங்கே



தொட்டிருக்கலாம்? இதற்கு மேலே கேட்க வேணுமா?"

அவளது உன்னதமான மருத்துவப் பணியை எப்படி கொச்சைப் படுத்திப் பேசுகிறான்!

பொறுக்க முடியாமல் எழுந்துவிட்டாள் அவள். "உங்களுக்கு வைத்தியம் பல்லில், லோகநாதன்.! பக்கத்தில் வராமல் வாய்க்குள் பார்க்க முடியாது! தொடாமல், தடவிப் பாராமல், அடிபட்ட வீக்கம் ஆறியிருக்கிறதா என்று எப்படி அறிவது? இதையெல்லாம் தவறாக நினைப்பது என்றால், வைத்தியமே செய்ய முடியாதே!"

"ஆங், அந்தக் கதை நம்ம கையிலே வேண்டாம்! அந்த நாய்ப்பயல் சுதா மட்டும் குறுக்கே வந்து விழவில்லை என்றால், தஞ்சாவூரிலே இருந்து நான் கிளம்பும்போதே உனக்கும் ஒரு டிக்கெட் போடச் சொல்லிக் கெஞ்சியிருப்பாய் என்று எனக்குத் தெரியாதா, என்ன? நான் ஒன்றும் முட்டாள் இல்லை!"

சுதர்மன் குறுக்கே வந்து விழுந்திரா விட்டால் என்கிறானே!

அந்த இன்னொருவன் தானே என்று, இவனுக்குத் தெரியாமல் புலம்பியதாக அல்லவா, சுதாவின் நினைப்பு அதனால்தானே, அவர்களது அன்பைக் கெடுப்பதற்காக, இவன் சதியேதும் செய்திருக்க முடியாது என்று நினைத்ததாகச் சொன்னாள்.

முக்கியமான ஏதோ வெளிவரப் போவது போன்ற உணர்வு அவளுக்கு!

"சுதர்மன் குறுக்கே வந்தாரா? இதென்ன கதை?" என்று ஏனம் போலக் கேட்டாள் அவள்.

"ஆகா, அடுத்த கதை விடப் பார்க்கிறாயே, கண்ணு! நீ எனக்காக வந்தால், அவன் உன் பின்னாலேயே தூத்திக்கொண்டு வந்ததும், சாயந்திரம் நீ கிளம்பும்போது, ஜன்னல் வழியாகப் பார்த்துவிட்டு அவன் உன் பின்னாலேயே தூத்திக்கொண்டு வந்ததும்... வந்து உன்னைக் 'கவர்' பண்ணிவிட்டதும், எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய்? எல்லாம் நன்றாகத் தெரியும்! எதுவும் என் கண்ணை தப்பாது, தெரியும்?" என்று பெருமை பேசினான் அவன்.

வயிற்றுக்குள் பூச்சி பறப்பது போன்ற உணர்வை அடக்க முயன்றபடி, "சொல்லுங்கள் லோகநாதன், அப்படி இன்னொருவன் விரும்பிய பெண்ணை, உங்கள் சொத்துக்களுக்கு சொந்தக்காரியாக்க எண்ணுகிறீர்களே, நன்றாகவா இருக்கிறது?" என்று கேட்டாள் மதுவந்தி.

"பின்னே?" என்றான் அவன் ஆத்திரத்துடன். "எனக்காகத்தானே அவன் வந்தான்? உன்னைப் பார்த்ததுமே நினைத்தது, நான்தானே எனக்குத்தானே நீ சொந்தமாகணும்! பல் மேலே வயர் போட்டு வாயைத் திறந்து பேசக்கூட அசிங்கப்பட்டுக் கொண்டு நான் இருக்கிறேன்! நீங்கள் இருவரும் பார்வையிலேயே கொஞ்சுகிறீர்கள்



12.02.2009 00:25

12.02.2009 00:25

என் அம்மாவிடம் வந்து, உனக்காக பேசியதோடு, 'செக்கப்'புக்கும் கூட வருகிறேன் என்று தர்மா சொன்னதுமே முற்றிவிட்டது என்று தெரிந்து போய்விட்டது! ஆனால் விடுவேனா? உங்களைச் சேர விட்டுவிடுவேனா? வைத்தேன் பார் வேட்டு!"

"என்ன பெரிய வேட்டு? கோழையைப் போல தூக்க மாத்திரை போட்டுச் சாக அல்லவா இருந்தீர்கள்!" என்றாள் அவள் ஏளனக் குரலில்.

"சாவதா? நானா? நானா சாவேன்? அந்தக் கிறுக்கன், அதை நம்பியதோடு, உன்னிடம் வந்து கத்தி, உன் வேலைக்கும் வேட்டு வைத்தான் போல! உன்னைத் தேடிப் போன போது அந்த விவரம் தெரிந்துகொண்டேன்.! ஆனால்... அப்போதே நீ என்னிடம் வந்திருக்கலாமே. செல்லம் முன்னாலேயே நாம் சந்தோஷமாக இருந்திருக்கலாம்! ஆனால், என் அம்மா உயிரோடு இருந்து, அது வேறே தொல்லை பண்ணிக்கொண்டே இருந்திருக்கும்! அதைக் கூட சமாளித்து நாம் ஒன்றாக இருந்திருக்கலாம்!"

குமட்டியதை மறைத்து "ஆனாலும் இந்தத் தூக்க மாத்திரை விஷயம் எனக்குப் புரியவில்லையே! மெய்யாகவே, தூக்க மாத்திரை போட்டீர்கள்தானே?" என்று மேலும் துருவினாள் மதுவந்தி.

"அது இல்லாமல், அந்தப் பயல் நம்புவானா? சரியான அளவு போட்டு, சிகிச்சைக்கு அவனையே ஏற்பாடு செய்ய வைத்து, அந்தப் போட்டிக்காரன் யாரென்றே தெரியாத மாதிரி அவனிடமே புலம்பி, புலம்பியபடியே மயங்கி விழுந்து, அது மூலமாய் உங்களை வெட்டிவிட்டு... ஜெயித்தேன்தானே? அதுவும் எப்படி! இப்போது நான்தான் மேல் என்று என்னைத் தேடி, வந்தே விட்டாயே!" என்று வெற்றிச் சங்கு ஊதினான் லோகநாதன்.

"சீ முட்டாள்" என்றாள் அவள் அருவருப்புடன்.

அவன் திகைத்து எழவும், "உன்னை நான் தேடி வருவதா? உனக்காக நான் விரலைக் கூட அசைக்க மாட்டேனே! எதை நம்பி, நானும் உன்னை விரும்பியதாக நினைத்தாய் என்று விசாரிக்க வந்தேன்! அதுவும் உயிரைக் கூட விடும் அளவுக்கு! நீ சரியான அயோக்கியன் என்பது, இப்போதுதானே தெரிகிறது! இந்த அயோக்கியத்தனத்தில் பெருமை வேறா? சீச்சீ! இனிமேல், கனவில் கூட என்னை நினைக்காதே!" என்று குனிந்து கைப்பையை எடுத்துக் கொண்டு திரும்பினால் வழியை மறைத்துக் கொண்டு லோகநாதன் நின்றான்.

முகத்தில் பெருமை, சிரிப்பு எல்லாம் மறைந்து, சீற்றமும் சினமுமாக, முகமே கோரமாகியிருந்தது!

தன்னையறியாமல் மதுவந்தி ஓர் எட்டு பின்னடையவும் அவன் உரக்க நகைத்தான்.



அதுவும் கோர நகைதான்.

"அயோக்கியன் என்றாயில்லையா? அயோக்கியனாக இருப்பது எனக்கும் வசதிதான். அனாவசியமாகத் திருமணத்துக்காக காத்திருக்க வேண்டியது இல்லை! அவ்வளவு ஏன்? கல்யாணமே அவசியம் இல்லை, சும்மாவே உன்னை வைத்துக் கொள்ளலாம்?" என்று கையை நீட்டினான்.

கை எட்டாத தூரம் விலகி, "உன் விருப்பம்போல நடத்துவதற்கு நான் ஆளில்லை, லோகநாதன், மரியாதையாக விலகி நில்!" என்று அதட்ட முயன்றபோதே இப்படித் தனியாக இவன் வீட்டுக்கு வந்தது தவறோ என்று துணுக்கம் உண்டாகிக் குரல் லேசாக நடுங்கிற்று அவளுக்கு!

அதற்கு ஏற்றாற்போல "மரியாதையா? உனக்கா? இது என் வீடும்மா! என் வீட்டிற்கே வந்து என்னிடமே வகையாக மாட்டிக்கொண்டு மரியாதை கேட்கிறாயே! நல்ல ஜோக்தான்!" என்றவனின் விழிகள் சட்டென அகன்றன.

மதுவந்திக்குப் பின்புறமாக வீட்டுக்குள்ளிருந்து வந்தவனைத் திகைப்புடன் நோக்கி "நீ எப்படி இங்கே வந்தாய்? உன்னை யார், உள்ளே விட்டது?" என்று குழப்பத்துடன் கேட்டான்.

அப்போதும் கூட மதுவந்திக்குத் திரும்பிப் பார்க்கத் தைரியம் இல்லை!

என்னென்னவோ நாடகம் நடித்து, அவனுக்கும் சதர்மனுக்கும் அரும்பியிருந்த ஒரு நல்ல உறவை நாசமாக்கியவன்! இப்போதும் பின்னே திரும்ப வைத்து, ஏதேனும் தீமை செய்துவிடுவானோ என்று அஞ்சினாள் அவள்.

ஆனால் "இந்த வீட்டில் என்னை யார் உள்ளே விட மாட்டார்கள்? பல காலமாக, இங்கே நான் அறிமுகம் ஆனவன்தானே?" என்ற குரலைக் கேட்டதும் "சதா!" என்ற கூச்சலுடன் திரும்பியவள், அடுத்த வினாடி அவனது கைகளுக்குள் அடைக்கலமாகி இருந்தாள்!

அவளை வாகாக அணைத்தபடி "உன் உயிர் நண்பன் என்று கூட என்னைச் சொல்வதுண்டு. அது உனக்கு நினைவிருக்கிறதோ?" என்று கிண்டலாகக் கேட்டான் சதர்மன்.

"ஏய் சதா, ம...மரியாதையாக இங்கிருந்து போய்விடு! இ..இது... இது என் வீடு! என் ஆட்களைக் கூப்பிட்டு... உன்னை... உன்னை" என்று கோபமும் குழப்பமுமாக லோகநாதன் தடுமாற, சதர்மன் லேசாகச் சிரித்தான்.

"இது உன் வீடுதானப்பா! நீ அயோக்கி[illegible]ம்தான். ஆனால் உன் வேலையாட்கள் அயோக்கியர்கள் இல்ல[illegible] பார்! அதனா[illegible] அவர்கள் என்னை ஒன்றும் செய்ய மாட்டார்கள்!" [illegible]று கூறவும், [illegible]டுக்கிட்டு "நீ எப்போது வந்தாய்?" என்று கேட்ட[illegible]ற்றவள்.



12.02.2009 00:26

"உன் ஆள் வேறு ஆப்பிள் ஜூஸ் எடுத்து வரும்போதே வந்து விட்டேன். மதுவந்தி உன்னிடம் சில விஷயங்களை, அழகாக விசாரித்துக் கொண்டிருந்தாளா? நான் வந்திருப்பதைச் சொல்லி, அவன் அதைக் கெடுத்துவிடக் கூடாதே! சொல்லாதே என்றாலும் நன்றாயிராது. அதனால், ஆப்பிள் சாறை நான் வாங்கிக் குடித்துவிட்டு, அவனை வேறு வேலையாக அனுப்பிவிட்டேன். என்ன, உன் கஷ்டம் பார்! என்னிடம் மறுக்க, அவனுக்குத் தோன்றவே இல்லை! இன்னும் மற்றவர்களுக்கும் தோன்றாது என்பதுதான் என் கருத்து! உனக்கு என்ன தோன்றுகிறது!"

செய்வது அறியாமல் நின்றவனைப் பார்த்து "கால்கள் நடுங்கினால் உட்கார்ந்துகொள், லோகநாதா. மீனா ஆன்ட்டியின் பத்தாம் நாள் காரியம் பற்றிப் பத்திரிகையில் இவ்வளவு பெரிய விளம்பரம் பார்த்ததுமே எனக்கு உறுத்தல்தான். மறைவு பற்றி, நண்பன் நம்மிடம் சொல்லவில்லையே என்று நினைத்தேன். நண்பனாக நான் மட்டும்தான் நினைத்தேன் என்று இப்போது புரிகிறது! ஆனாலும் நண்பனாக, உனக்கு ஒரு சின்ன அறிவுரை, பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்க்கு இன்னும் கொஞ்சமேனும் மரியாதை கொடுக்க வேணும்பா. இது ரொம்பக் கேவலமாகத் தெரிகிறது" என்றான் சுதர்மன் தொடர்ந்து!

"என்னை சொல்கிறாயே! இதோ, கட்டிப் பிடித்துக்கொண்டு நிற்கிறாயே, இவள் இந்த லோலாயி, விளம்பரத்தைப் பார்த்ததும், இங்கே ஓடி வந்துவிட்டாள் தெரியுமா?" என்று அப்போதும் விஷம் கக்க முயன்றான் லோகநாதன்.

மதுவந்தியிடம் அசைவு உணர்ந்த சுதர்மனின் அணைப்பு இறுகியது.

"மதுவந்தி இங்கே ஏன் வந்தாள் என்று எனக்குத் தெரியும். ஆனால் உனக்கு ஓர் எச்சரிக்கை! மதுவை, இனி மரியாதையுடன் பேச வேண்டும். மற்ற எந்த மாதிரியேனும் நீ நடந்து கொண்டதாக தெரிந்தால்... இங்கே வா" என்று அருகழைத்து, "உனக்குச் சும்மாவே ரீ இம்ப்ளான்ட்' செய்த பற்கள் இரண்டு தரம் செய்ய முடியுமோ என்னவோ? பல்லைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால்..." ஒரு கையைத்தூக்கி முஷ்டியாகப் பிடித்துக் காட்டினான்.

லோகநாதன் பயந்து பின்னடையவும் "புரிகிறதில்லையா? ஒதுங்கியே இருந்து கொள்!" என்றுவிட்டு மதுவந்தியை அழைத்துக்கொண்டு சுதர்மன் கிளம்பிவிட்டான்.

அவனோடு சேர்ந்து செல்லும்போது, முதலில் மதுவந்திக்கு நிம்மதி தவிர ஒன்றுமே தெரியவில்லை.

சற்று நேரம் ஆனதுமே, அக்கம் பக்கத்தில் சற்று விசித்திரமாகப் பார்ப்பது போலத் தோன்றவே, யோசிக்கத் தோன்றியது.



காரணம் புரியவும், கன்னங்கள் செம்மையுற சுதர்மனின் பிடியிலிருந்து விலக முயன்றாள்.

அவன் பிடி அப்படியே இருக்கவும் "ஷ் எல்லோரும் பார்க்கிறார்கள். விடுங்கள், சுதா" என்றாள் மெதுவாக.

அப்போதும் அவன் கவனியாதது போல இருக்கவும் "சுதர்மன், சொல்கிறேனில்லையா? என் கைகால்கள் நன்றாகத்தான் இருக்கின்றன. என்னால் உதவி இல்லாமலே நடக்க முடியும். என்னை விடுங்கள்" என்றாள் குரலில் சற்று அழுத்தம் கூட்டி.

நின்று அவளைத்திருப்பி "ஆஹா! இங்கே என்னிடம்தான் பெரிய அதட்டல். அங்கே 'தொடை நடுங்கிப் பின்னடித்ததை, நானே பார்த்தேனே!" என்று சீண்டினான் சுதர்மன்.

"மூர்க்கன், முரடனிடம் எல்லாம் நின்று என்னத்தைப் பேசுவது? துஷ்டரைக் கண்டால், தூர விலகு என்று அந்தக் காலத்திலேயே சொல்லி வைத்திருக்கிறார்கள். தெரியுமா?" என்று சமாளிக்க முயன்றாள் அவள்.

"அதாவது, துஷ்டரைக் கண்டு தூர விலகி, என்னிடம் ஓடி வந்தாய் என்றால், நான் நல்லவன் என்று ஒப்புக் கொள்கிறாய்?"

"நீங்கள் நல்லவர் என்பதை நான் ஒரு நாளும் மறுத்தது இல்லையே!" என்றாள் அவள் சற்றே கம்மிய குரலில்.

"அதாவது நல்லவன் என்பதால், ஒட்டி உறவாடலாம்?"

அவன் எங்கே வருகிறான் என்பது புரிய "சுதா இந்த லோகநாதன் இவ்வளவு சூழ்ச்சி பண்ணியிருக்கக் கூடும் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை! ஆனால் அவனுடன் பேசிய பிறகு, அவன் பெருமையடித்ததைக் கேட்ட பிறகு, என் முகத்தை நீங்கள் மறுபடியும் ஏறெடுத்துப் பார்ப்பதே பெரிய விஷயம் போலத் தோன்றுகிறது! ஆனால்... ஒரு சிறு சந்தேகம்! படக் கூடாது என்று உள்ளுணர்வு சொல்கிறது. ஆனால் சுதா நான் ஏன் வந்தேன் என்று தெரியும் என்றீர்கள்.. ஆனால் நீங்கள் ஏன் வந்தீர்கள் என்மேல்... என்னை..." என்று முடிக்காமலே தயங்கினாள் அவள்.

இப்போதுதான் ஒரு வழியாக மேகம் விலகி, வெளிச்சம் பரவியிருந்தது! மீண்டும் இருள் மூடி விடுமோ என்று பேரச்சம் அவளுக்கு!

"உன்னைத் தொடர்ந்துதான் வந்தேன்!" என்று அவன் குறுஞ்சிரிப்புடன் கூறவும், அவளுக்கு உலகமே இருட்டிவிட்ட உணர்வு!

ஏன் கேட்டோம் என்று கூடத் தவித்துப் போனாள்.

ஆனால், எவ்வளவு [illegible] உண்மை மேல் அல்லவா? [illegible] இந்த சந்தேக புத்தி [illegible] இன்னுமா அவனுக்குப் புரியவில்லை?

12.02.2009 00:26



அவன் தொடர்ந்து பேசினான்.

"லோகன் எவ்வளவு வில்லத்தனம் செய்வான் என்று தெரிந்துவிட்ட பிறகு, அவன் இருக்கும் இடத்துக்கு... அவனது கோட்டைக்கே நீ தனியே செல்ல விட்டுவிட்டு, நான் சும்மா இருப்பேனா? உனக்கு ஆபத்து நேராமல் காப்பதற்காகத்தான் பின் தொடர்ந்தேன்! அது சரியாகிப் போயிற்றுதானே?"

ஒரு விம்மலுடன், அவன் மார்பில் சாய்ந்தாள் மதுவந்தி!

சில வினாடிகள் லேசாகத் தட்டிக் கொடுத்தவன், பிறகு மெல்ல சொன்னான் "யாரோ கைகால்கள் நன்றாக இருப்பதால், தானே நடக்க முடியும் என்றார்கள். இப்போது நிற்க கூட இயலாமல் சாய்ந்து கிடக்கிறார்கள்!"

"ஏய்... போங்கப்பா..." என்று அவன் மார்பில் லேசாக ஒரு தரம் குத்திவிட்டு நிமிர்ந்தாள் மதுவந்தி.

"மதும்மா, நீ எவ்வளவு நேரம் என்மேல் சாய்ந்து கிடந்தாலும் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், காருக்குப் போக வேண்டும். காருக்குள் இருக்கும் லாப்டாப்பில் அப்பாவுக்கு ஈமெயில் அனுப்பி சந்தோஷப்படுத்த வேண்டும். அப்புறம், ஊருக்குச் செல்ல வேண்டும்! அதனால்தான் எழுப்ப வேண்டியதாயிற்று!" என்று விளக்கம் சொன்னான் சுதர்மன்.

"காரிலா வந்தீர்கள்? எங்கே?"

"அதோ!" என்று அவன் வந்த திசைக்கு எதிர்ப்புறத்தைக் காட்ட, "பின்னே இந்தப் பக்கம் ஏன் கூட்டி வந்தீர்கள்?" என்று வியப்புடன் கேட்டாள் அவள்.

"கொடி மாதிரி, மேல நீ ஒட்டிக்கொண்டு கிடந்தது, ரொம்ப சுகமாக இருந்தது! கூடக் கொஞ்ச நேரம் அனுபவிக்கலாம் என்றுதான்!"

முகம் சிவக்க "ஏய்... போங்கப்பா!" என்றபோதும், மீண்டும் அவன் தோளில் சலுகையாய் சாய்ந்துகொண்டாள் மதுவந்தி!

முற்றும்

ரமணி
நாவல்கள்
இனிய எழுத்தாளர்
ரமணிசந்திரன் அவர்கள்
ரமணிசந்திரன் அவர்கள்.
விவேக்
12.02.2009 00:26